REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜுன் 14 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 141 | Friday 14, June, 2024 | 24 பக்கங்கள் | 50/-

## புனித மக்காவில் பெருமளவு யாத்திரீகள் ஒன்றுகூடியதாக அறிவிப்பு

### இதுவரை 15 இலட்சத்தையும் தாண்டியது



ஹஜ் யாத்திரிகர்களால் புனித மக்கா நிரம்பியுள்ளதாக சவூதி அரேபிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

06




# பல்கலைக்கழக அனுமதி இன்று முதல் விண்ணப்பம்

## www.ugc.ac.lk விண்ணப்பிக்கலாம்

2023 - 2024 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு ஒன்லைன் மூலம் விண்ணப்பம் கோரல் இன்று முதல் (14 ) ஆரம்பமாவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இன்றைய தினம் காலை 6.00மணி முதல் www.ugc.ac.lk என்ற இணையதளத்தின் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இதுபற்றித் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் விண்ணப்பம் கோரலுக்கான இறுதித் திகதி எதிர்வரும் ஜூலை 05ஆம் திகதியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



06

## அலங்கார மீன்கள் ஏற்றுமதி: நான்கு வருடங்களில் ரூ. 2,632 மில். வருவாய்



06

## கின்னஸ் சாதனை படைத்த உலகின் குள்ளமான ஜோடி

## புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி



கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழாவின் இறுதி நாளான நேற்றுக் காலை திருவிழா திருப்பலி பூஜை நடைபெற்று மாலை புனிதரின் திருச்சொரூப பவனி நடைபெற்றது.
(படம்: ஷான் ரூபஸ்சர)

# சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் தவணை விடுவிப்பு

## நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேசம் வழங்கிய அங்கீகாரம்

## 336 மில். டொலர்கள் விடுவிக்கப்பட்டு மூன்று தவணைகளூடாக நாட்டுக்கு ஒரு பில்லியன் டொலர்களை வழங்க IMF ஏற்பாடு



நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்காதவாறு புதிய பரிமாணத்துக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையில், சர்வதேச நாணய நிதியம் இரண்டாவது மீளாய்வுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். இலங்கையின் பொருளாதாரத்தை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கட்டியெழுப்புவதற்கான வெற்றிக்கான உத்தரவாதமே மூன்றாவது தவணை நிதி உதவி என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அரசாங்கம் சரியான நேரத்தில் தீர்மானங்களை எடுத்துள்ளதாக தெரிவித்த அவர், இந்த நடவடிக்கையின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமான நிலையை அடைந்துள்ளதாகவும் இந்த வேலைத்திட்டத்தை மாற்றினால் நாட்டின் முன்னேற்றம் பாரியளவில் தடைப்படும் என்றும் அவர் கூறினார்.

நிதி அமைச்சில் நேற்று (13) காலை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, இராஜாங்க அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்;

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை இலங்கை தொடர்பான மூன்றாவது தவணை நிதியை வழங்குவதற்கு இரண்டாவது மீளாய்வில் அனுமதி வழங்கியுள்ளது. மூன்றாம் தவணையை சாத்தியமாக்கும் வகையில் சமகால அரசாங்கம் மிகுந்த நம்பிக்கையுடன் செயற்பட்டது. அதன் பிரகாரம், இந்த நாட்டின் பொருளாதாரத்தை புதிய பரிமாணத்துக்கு கொண்டு சென்று மீண்டும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்காத நாடாக மாற்றும் வகையில், சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது தவணைக்கான நிதி உதவி அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இந்த உதவி, சர்வதேசத்துக்கும் தேசிய ரீதியிலும் நமது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் காணப்பட்டுள்ள வெற்றியை சான்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் முதல் தவணை கடனை 2023 மார்ச் மாதம் பெற்றுக்கொண்டோம். இதேபோன்று இரண்டாவது தொகையை 2023 ஆண்டில் டிசம்பர் மாதம் பெற்றுக் கொண்டோம். இதற்கமைவாக 2024 ஆம் ஆண்டுக்குள், எதிர்பார்த்தபடி, 2023 ஆம் ஆண்டு மார்ச்

06

## IMF இலுள்ள சில விடயங்கள் ஐ.ம.ச அரசின் கீழ் திருத்தப்படுவது உறுதி

### எவ்வாறு செய்வதென அமைச்சர் பந்துல எமக்கு கூறத் தேவையில்லை

### திரைப்படம் தயாரித்தும் புத்தகங்கள் எழுதும் வேலையை மட்டும் பார்க்கட்டும்



சர்வதேச நாணய நிதியத்தில் உள்ள சில விடயங்கள் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் திருத்தப்படும் எனவும், அதை எவ்வாறு செய்வதென எமக்கு கூறாமல் திரைப்படம் எடுக்க, புத்தகம் எழுத அல்லது வேறு ஏதாவது செய்யுமாறு பந்துல

06

## இலங்கை முன்னெடுத்த பொருளாதார மறுசீரமைப்பு வலுவான மட்டத்தில்

### IMF இன் விசேட அறிக்கையில் தெரிவிப்பு




விரிவாக்கப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் இலங்கை நடைமுறைப்படுத்தும் பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டம் வலுவான மட்டத்தில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

பின்தங்கியிருந்த இலங்கையின் பொருளாதார வலுவூட்டலுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் உகந்த நிலையை எட்டியுள்ளதாகவும், 2023 டிசம்பர் மாதத்துக்குள் அளவு இலக்குகளை இலங்கை அடைந்துள்ளதாகவும் நிதியத்தின் விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டனில் நேற்று முன்தினம் (12) நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவில், இலங்கையின் இரண்டாவது மீளாய்வுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், நீட்டிக்கப்பட்ட கடன் திட்டத்தின் படி மூன்றாவது கடன் தவணையாக 336 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உடனடியாக வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

06

## இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து செந்தில் வாழ்த்து



இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, சுகாதார, இரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சர் மற்றும் பா.ஜ.கவின் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா ஆகியோரை கிழக்கு மாகாண ஆளுநரும்

06

## முட்டையின் விலையை மேலும் குறைக்கலாம்

### உற்பத்தியாளர் சங்கம் தெரிவிப்பு

முட்டையின் அதிகபட்ச சில்லறை விலையை 45 ரூபா வரை குறைக்க முடியுமென உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. சந்தையில் அதிகளவு முட்டை உற்பத்தி கிடைப்பதால், முட்டையின் விலை மேலும் குறையுமென உற்பத்தியாளர்கள்

06

## வாக்குகளை மட்டும் குறிவைத்து செயற்படும் அரசியல்வாதிகள்



### தமிழ் மக்கள், தலைவர்களுக்கு நாமல் எச்சரிக்கை

வாக்குகளை மட்டுமே குறிவைத்துச் செயற்படும் அரசியல்வாதிகள் தொடர்பில் தமிழ்த் தலைவர்களும் தமிழ் மக்களும் மிக, அவதானமாகச் செயற்பட வேண்டுமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி, எச்சரிக்கை விடுத்துள்ளார். திடீரெனத் தமது கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் சில

06

## தேசிய பாடசாலைகளுக்கு புதிதாக 2500 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்

லோரன்ஸ் செல்வநாயகம்



மாகாண மட்டத்தில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கான துரித நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் ஜூலை 3ஆம் திகதி தேசிய பாடசாலைகளுக்கு புதிய ஆசிரியர்களை நியமிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் அன்றைய தினம் 2500 ஆசிரியர்

06

## நாட்டில் முதியோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

### ஆணின் சராசரி வயது 79, பெண்ணின் வயது 83

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் முதியோரின் எண்ணிக்கை வெகு வேகமாக அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ நிபுணர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார். அந்த வகையில் இலங்கையில் சாதாரணமாக ஒருவரின் ஆயுட்காலம் 79 வயதுக்கு மேல் காணப்படுவதாகவும் அவர்

06

## முன்னாள் MP சிறினால் டி மெல் காலமானார்



தேசிய தொழிலாளர் சங்கத்தின் முன்னாள் செயலாளரும் முன்னாள் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினருமான சிறினால் டி மெல் தனது 84 ஆவது வயதில் காலமானார். ஒரு பிள்ளையின் தந்தையான இவரது பூதவுடல், பிலியந்தலை கொழும்பு

06

# நகர்வலம்





கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு ஆலய வளாகத்தில் வைத்து பக்தர்களுக்கு நேற்று லேக்ஹவுஸ் ஊழியர்களால் தினகரன் பத்திரிகை இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

## நாட்டின் நலனுக்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, மைத்திரிபால ஒன்றுபட்டு செயற்படுவது அவசியம்



நாடு முக்கியமான கட்டத்தை அடைந்துள்ள தற்போதைய சூழலில் நாட்டினதும் மக்களினதும், கட்சி ஆதரவாளர்கள் அபிமானிகளதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் மைத்திரிபால சிறிசேனவும் ஒன்றுபட்டு செயற்பட முன்வர வேண்டும் என்று பலஸ்தீனுக்கான முன்னாள் தூதுவரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியக் குழு உறுப்பினருமான பௌஸான் அன்வர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஸ்ரீ.சு.கட்சியின் முதலாவது பிரசாரக்கூட்டம் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள அம்பலந்தோட்டையில் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கட்சியில் இருந்து ஏற்கனவே பிரிந்து சென்ற பல தலைவர்கள் பங்குபற்றியதோடு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெருந்தொகையான மக்களும் கலந்து கொண்டனர்.

அதனால் ஏனைய பிரதமான அரசியல் கட்சிகள் ஸ்ரீ ல.சு.கட்சியை கூர்ந்து நோக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பெரும்பாலான மக்கள் பிரதான கட்சிகள் பலவற்றில் நம்பிக்கை இழந்துள்ளனர். அவ்வாறான நிலைமை எமது கட்சிக்கு இல்லை. அதற்கு இந்த முதலாவது கூட்டம் நல்ல எடுத்துக்காட்டு.

இந்நாட்டில் சுமார் 8 மில்லியன் மக்கள் புதிய மாற்றத்தை எதிர்பார்க்கக்கூடியவர்களாக உள்ளனர்.

அவர்களது ஒரே எதிர்பார்ப்பு நாட்டின் பொருளாதார முன்னேற்றமும் சுபீட்சமும் ஆகும். அதனால் ஸ்ரீ ல.சு.கட்சி உருவாக்கிய முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேனவும், சந்திரிகா பண்டாரநாயக்வும் தங்கள் தனிப்பட்ட நலன்களுக்கு அப்பால் நாட்டினதும், மக்களினதும், கட்சி ஆதரவாளர்களினதும் நலன்களுக்காக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

ஸ்ரீ.ல.சு.கட்சி இந்நாட்டுக்கு அளப்பரிய சேவைகளைச் செய்த கட்சியாகும். கடந்த 1988,89 காலப்பகுதியில் நாட்டில் நிலவிய வன்முறைகள் காரணமாக 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

அன்று டயர் யுகம் நிலவியதோடு எங்கும் அச்சம் நிலவியது. 1994 இல் நாட்டின் ஜனாதிபதியாக சந்திரிகா பதவியேற்ற பின்னர் தான் அந்த அச்ச சூழல் நீங்கியது. மக்கள் சுதந்திரத்தை உணரத்தொடங்கினர். அதனால் தற்போதைய சூழலில் முன்னாள் இரண்டு ஜனாதிபதிகளும் நாட்டினதும், கட்சியினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஒன்றுபட்டு செயற்படுவது அவசியம் என அவர் தெரிவித்தார்.



கோயம்புத்தூரிலுள்ள கோடிசியா வர்த்தக கண்காட்சி வளாகத்தில் நடைபெற்ற தென்னிந்தியாவின் மிகப்பெரிய கண்காட்சிகளில் ஒன்றான சர்வதேச இயந்திர கருவிகள் மற்றும் தொழில்துறை வர்த்தக கண்காட்சியில் (INTEC 2024) இலங்கையின் துணை உயர் ஆணையர் டொக்டர் டி. வெங்கடேஷ்வரன் கலந்துகொண்டார். அவர் தனது விஜயத்தின் போது, Codissia இன்டெக் தொழில்நுட்ப மையத்தின் தலைவர் மற்றும் சமூக உறுப்பினர்களை இலங்கையில் Codissia போன்ற ஒரு பாரம்பரிய மையத்தை நிறுவவும், தொழில் துறை கண்காட்சிகளை எளிதாக்கவும் மற்றும் வணிக ஒத்துழைப்புகளை மேம்படுத்தவும் பரிசீலிக்குமாறு அழைப்பு விடுத்தார்.



கொலன்னாவ பிரதேச செயலகப்பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் தலைமைத் அதிகாரியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஏனைய பிரமுகர்கள், ஐ. தே. கட்சி இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சீனன்கோட்டை முத்துக்கள்' வாட்சப் குழுமத்தின் ஒருவருட பூர்த்தி

(பேருவளை விசேட நிருபர்)

பேருவளை சீனன்கோட்டைப் பகுதியில் கல்வி, சமூக, பொதுசேவைகளை முன்னெடுக்கும் இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட 'சீனன்கோட்டை முத்துக்கள்' வாட்சப் குழுமத்தின் ஒரு வருட பூர்த்தி நிகழ்வும் புனித ஹஜ் பெருநாள் ஒன்றுகூடலும் எதிர்வரும் 19ஆம் திகதி பேருவளை அக்கர தாஹட்ட உல்லாச விடுதியில் குழுமத்தின் தலைவர் ராமிஸ் நாஸிர் தலைமையில் நடைபெறும். பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டியுள்ள திட்டங்கள் குறித்து ஒன்றுகூடலில் ஆராயப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிரதேசத்திலுள்ள வறிய பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை இடையூறு இன்றி தொடர கற்றல் உபகரணம் வழங்கல், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கும் தோற்றிய மாணவர்களுக்கு இலவச கல்வி கருத்தரங்குகளையும் நடாத்தியதோடு பல சமூக,கல்வி,பொதுப் பணிகளையும் இந்த வாட்சப் குழுமம் செய்துள்ளதாகவும் தலைவர் மேலும் கூறினார்.

குழுமத்தில் உள்ள உறுப்பினர்கள் பரோபகாரிகளின் பங்களிப்பு இதில் முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.



## பட்டப்பகலில் பெண்ணின் தங்கச் சங்கிலி பறிப்பு

கெஸ்பேவ, பண்டாரகம வீதியிலுள்ள மாகந்தன பல்பொருள் அங்காடிக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபரொருவர் பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்க சங்கிலி மற்றும் மூன்று பென்டன்களை கொள்ளையடித்து தப்பிச் செல்லும் காட்சி சி.சி.டி.வி கெமராவில் பதிவாகியுள்ளது.

ரூ.5 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியான 2.5 பவுன் தங்கநகைகள் இதன்போது கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த பெண், பல்பொருள் அங்காடிக்கு சென்று வீதிக்கு வந்து முச்சக்கரவண்டிக்காக காத்திருந்த போதே அவர் அருகில் நின்றிருந்த ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவர், திடீரென அவரது கழுத்திலிருந்த நகையை பறித்துக்கொண்டு தப்பிச்சென்றார்.

குறித்த மோட்டார் சைக்கிள் றட்டுவை பிரதேசத்தில் பெண்ணொருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்ததும், கடந்த 10ஆம் திகதி இரவு எகொடவீர பிரதேசத்தில் வைத்து திருடப்பட்டதும் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கெஸ்பேவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொசன் பண்டிகையை முன்னிட்டு 11 பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானம்

(திறப்பனை தினகரன் நிருபர்)

பொசன் பண்டிகையை முன்னிட்டு பொலிஸாரின் தங்குமிட வசதிக்காக அநுராதபுரம் மிகிந்தலை தந்திரிமலை ஆகிய பிரதேசங்களிலுள்ள 11 பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அநுராதபுர நகரம் மற்றும் மிகிந்தலை தந்திரிமலை போன்ற நகரங்களை அண்டியுள்ள 11 பாடசாலைகளை பொசன் காலத்தில் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வட மத்திய மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இக்காலப்பிரிவில் கடமைக்கு வரும் பொலிஸாரின் தங்குமிட வசதிக்காக இக்குறிப்பிட்ட பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அநுராதபுரம் சாஹிரா தேசிய பாடசாலை, விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம், தேவநம்பிய திஸ்ஸபுர வித்தியாலயம், அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயம், ஸ்வர்ணபாலி பாலிக்கா மகா வித்தியாலயம், வலிசிங்க ஹரிச்சந்திர மகா வித்தியாலயம், மகாபோதி மகா வித்தியாலயம், மிகிந்தலை மகா வித்தியாலயம் மற்றும் கம்மலக்குளம் வித்தியாலயம், மிகிந்தலை வித்தியாலயம் போன்ற பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அநுராதபுரம் தேசிய பொசன் விழா குழுவின் கோரிக்கைக்கமைய குறிப்பிட்ட பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்முறை பொசன் வாரமாக ஜூன் 18 ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அநுராதபுரத்தில்

## விவசாயத்தின் பாதக விளைவுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

(திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுர மாவட்டத்திலுள்ள சிறியளவிலான விவசாயத் தொழில் முயற்சிகளில் ஏற்படும் பாதகமான விளைவுகளை கண்டறியும் நோக்கில் அதற்கான திட்ட முன்மொழிவுகளை தயாரிப்பதற்கு அதிகாரிகளை தெளிவுபடுத்தும் ஒருநாள் பயிற்சி பட்டறை அநுராதபுரம் மேலதிக மாவட்ட செயலாளர் திருமதி சந்தியா என். ஜி.அபேசேகர தலைமையில் அநுராதபுரம் கிறிஸ்டன் பார்க் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் பல மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்துக்கு சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியம் 82 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்குகிறது.

வரண்ட பிரதேசத்திலுள்ள சிறுநில உரிமையாளர்களின் வறுமையைக் குறைப்பதும் உணவுப் பாதுகாப்பை அதிகரிப்பதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இதன்மூலம் கடும் வரட்சி, மழை போன்ற சூழ்நிலைகளில் அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்ளல், விவசாய தொழில் முனைவை உருவாக்குதல், மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சந்தைப் பங்கேற்பு, விவசாய வீதிகள் புனரமைப்பு போன்றவற்றை மேம்படுத்துவது போன்ற பல்வேறு விடயங்கள் இதில் அடங்குகின்றன.

அநுராதபுர மாவட்டத்தின் ,மதவாச்சி, மிஹிந்தலை, மத்திய நுவரகம் பளாத்த, மஹவிலச்சிய, திறப்பனை, ரம்பாவ ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளிலுள்ள 37 குளங்களை புனர் நிர்மாணம் செய்தல்,போன்ற திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. இதுதவிர, பயிர் சாகுபடி, மீன் குஞ்சுகளை நீர் நிலைகளில் விடுவித்தல், கால்நடை மற்றும் ஆடு வளர்த்தல் போன்ற திட்டங்களும் இத்திட்டத்தின் கீழ் அடங்குவதோடு கூடுதலாக இளைஞர்கள், பெண்களை ஈடுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்போது, உதவிதிட்டமிடல் பணி ப்பா ளர்கள், அநுராதபுரம் பிரதேச செயலகங்களில் பணிபு ரியும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாயத்துறை தொடர்பான அதிகாரிகள் குழுவினர் ஆகியோர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

## கெப்பிட்டல் டிவியில் ஹஜ்ஜு பெருநாள் கவிதைகள்



ஹஜ்ஜுப் பெருநாள் தினமான 17 ஆம் திகதி திங்கட்கிழமை கெப்பிட்டல் தொலைக்காட்சியில் பிற்பகல் 4 மணி முதல் ஒளிபரப்பாகும் பெருநாள் விசேட நிகழ்ச்சியில் கவிஞர்கள் பிறைக்கவி முஸம்மில், அட்டாளச்சேனை ரிஸ்லி சம்சாட், சட்டத்தரணி நூருஸ் ஷப்னா சிராஜுதீன், பயாஸா பாஸில், நேகம ரபீயுல் பரீஹா ஆகியோரின் கவிதைப் பொழிவும் இடம்பெறும். நிகழ்ச்சியை ஹம்சி தயாரித்து வழங்குகின்றார்.

## ரயில் தடம் புரண்டதால் கரையோர போக்குவரத்து சேவை பாதிப்பு!

(பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)

பாணந்துறை ரயில் நிலையத்துக்கு அருகில் ரயில் தடம் புரண்டதால் கரையோர ரயில் சேவை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறையிலிருந்து மருதானை நோக்கி பயணித்த 8339 என்ற ரயிலே இவ்வாறு தடம் புரண்டுள்ளது.

ரயிலின் பெட்டி ஒன்று அருகில் இருந்த சமிக்ஞை பகுதியில் மோதியதால் சமிக்ஞை அமைப்பு முற்றிலும் செயலிழந்துள்ளது.

தண்டவாளத்தை சீரமைக்க கணிசமான காலம் எடுக்கும் என்று ரயில்வே பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.



தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2024 ஜுன் 14 வெள்ளிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.31
லுஹர் - 12.11
அஸர் - 03.39
மஃரிப் - 06.26
இஷா - 07.43

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் வைகாசி 32
ராகுகாலம் : காலை : 10.23 - 11.53வரை
சுபநேரம் : காலை : 05.53 - 7.29வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# சவால்களை வெற்றிகொள்ள அறிவுள்ள இளம் தலைமுறை அவசியம்

## காலத்துக்கேற்ற சிந்தனைகள் படையணிக்கு அவசியம்



எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் வகையில் அறிவும் பயிற்சியும் நிறைந்த இளைஞர் தலைமுறை உருவாக்கப்பட வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் இளைஞர்களுக்கு உயர் வருமான வழியை உருவாக்கத் தேவையான பொருளாதார செயற்திட்டம், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இளைஞர் படையணியின் இளைஞர் யுவதிகளை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (12) சந்தித்தபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இளைஞர் படையணியின் பணிப்பாளர் பிரிகேடியர் சுஜீவ ரத்நாயக்கவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசொன்றும் இதன்போது வழங்கப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

"இளைஞர் படையணி ஆரம்பிக்கப்பட்டு 22 வருடங்களாகின்றன. அன்றிருந்த பொருளாதார, சமூக முறைமைக்கு ஏற்ற வகையில் இந்த இளைஞர் படையணி ஆரம்பிக்கப்பட்டது. காலத்துக்கு ஏற்ப இளைஞர் படையணியும் மாற வேண்டும். இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க, நல்ல வருமான நிலையை உருவாக்க வேண்டும். இதற்கு இளைஞர் படையை மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இளைஞர்கள் அதிக வருமானம் உள்ள தொழில்களை விரும்புகிறார்கள். எனவே, அந்நிலையை உருவாக்குவதற்கான திட்டங்களை உருவாக்க வேண்டும். இதற்காக பாராளுமன்றத்தில் பொருளாதார பரிமாற்ற சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் ஊடாக 2027 ஆம் ஆண்டிற்குள் வேலையின்மையைக் குறைக்க முடியும். 2035 ஆம் ஆண்டிற்குள் அதிக வருமானம் தரும் பல தொழில் துறைகளை உருவாக்கலாம். 2048 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடொன்று உருவாகும். இங்குள்ள இளைஞர் படையணி மாணவர்களுக்கு அப்பொழுது 50 வயது கூட ஆகியிருக்காது. மாகாண மட்டத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை விரைவில் தீர்க்க

06

# நலன்புரி திட்டங்கள் விரைவாக மக்களை சென்றடைய வேண்டும்



## நடவடிக்கை எடுக்க ஆளுநர்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள்

அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் நலன்புரித் திட்டங்களை வினைத்திறனுள்ளதாக்கி, அதன் பயன்களை மக்களுக்கு துரிதமாக வழங்குவதற்கு ஆளுநர்கள் பங்களிக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடன் நேற்று முன்தினம்(12) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

மாகாண மட்டத்திலுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை விரைவாகத் தீர்க்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் உறுமய காணி உறுதி வழங்கும் திட்டத்தின் வினைத்திறன் என்பன குறித்தும் விரிவாகக் இங்கு ஆளுநர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

உறுமய காணி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டத்தை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு கிராம உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக மற்றுமொரு குழுவுக்கு அதிகாரத்தை வழங்கி நடமாடும் சேவைகளை நடைமுறைப்படுத்தும் சாத்தியத்தை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் மக்களை ஆர்வமூட்டி, அவர்களுக்கு அந்த நன்மையை வழங்க வேண்டிய பொறுப்பு பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைவு கூர்ந்தார்.

மாகாண மட்டத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக் குறையை விரைவில்

06

# தினகரன் 92 வருடங்களுக்கு முன்

## தினகரன்
## இன்று 14 ஜூன் 1932


புதிய சம்பள விகிதங்கள்
சிக்கனக் கமிஷன் ஒரு அறிக்கையை வெளியிடுமா ?
அரசினரின் கோரிக்கை
சிப்பந்திச் செலவுகளைக் கூடியவரையில் குறைக்க அரசினர் விரும்புகிறார்கள்.
வரவு செலவுத் திட்ட மசோதா அரசாங்க சபைக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் எதிர்காலத்தில் அரசாங்க ஊழியத்தில் சேரும் உத்தியோகஸ்தரின் சம்பள விகிதங்கள் சம்பந்தமாக ஒரு அறிக்கையை வெளியிடும்படி அரசினர் சிக்கனக் கமிஷனைக் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது புதிய சம்பள விகிதங்களை வருகிற வருட வரவு செலவுத் திட்டத்தில் அமைக்க அரசினர் உத்தேசித்திருப்பதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது,

## புதிய சம்பள விகிதங்கள்

### சிக்கனக் கமிஷன் ஒரு அறிக்கையை வெளியிடுமா?

### அரசினரின் கோரிக்கை

**சிப்பந்திச் செலவுகளைக் கூடியவரையில் குறைக்க அரசினர் விரும்புகிறார்கள்**

வரவு செலவுத் திட்ட மசோதா அரசாங்க சபைக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் எதிர்காலத்தில் அரசாங்க ஊழியத்தில் சேரும் உத்தியோகஸ்தரின் சம்பள விகிதங்கள் சம்பந்தமாக ஒரு அறிக்கையை வெளியிடும் படி அரசினர் சிக்கனக் கமிஷனைக் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது. புதிய சம்பள விகிதங்களை வருகிற வருட வரவு செலவுத் திட்டத்தில் அமைக்க அரசினர் உத்தேசித்திருப்பதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# தினக்குரல் முன்னாள் உதவி செய்தி ஆசிரியரின் தந்தை காலமானார்



தினக்குரல் முன்னாள் உதவி செய்தி ஆசிரியரும் பாராளுமன்ற செய்தியாளரும் அமெரிக்க தூதரக அதிகாரியுமான டிட்டோ குகனின் அன்புத் தந்தை அழகன் அய்யாக்கண்ணு தனது 80 ஆவது வயதில் நேற்று வியாழக்கிழமை கொழும்பில் காலமானார். கே 1/2எல்லப்பிட்டிவெல வீடமைப்புத்திட்டம், இராகம வீதி வெலிசறையை நிரந்தர வசிப்பிடமாகவும் இல 36, பொஸ்வெல் பிளேஸ் வெள்ளவத்தையை தற்காலிக வசிப்படமாகவும் கொண்ட அன்னார் அமரர் புவனேஸ்வரியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

# ஜோசப் அலோசியஸின் பயண தடை தற்காலிகமாக நீக்கம்

## மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் அறிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பேர்ப்பச்சுவல் ட்ரெஸரிஸ் நிறுவனத்தின் தலைவர் ஜெப்ரி ஜோசப் அலோசியஸுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடையை, தற்காலிகமாக நீக்குவதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி வழக்கின் ஆறாவது பிரதிவாதியான ஜோசப் அலோசியஸ் மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூருக்கு செல்ல வேண்டியுள்ளது. இந்நிலையில் அவரது வேண்டுகோளுக்கு இணங்க, அவர் வெளி நாடு செல்வதற்கு நீதிமன்றம் தற்காலிக அனுமதி வழங்கியுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் ஜூலை 01 முதல் செப்டம்பர் 12 வரையான காலப்பகுதியில் அவர் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்வதற்கு கொழும்பு விசேட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

06

# கடத்தப்பட்ட சிறுமி பயங்கர பாதாள அறையிலிருந்து மீட்பு

## மூன்று இளைஞர்கள் கைது, 24 வரை விளக்கமறியல்

(ஊவா சுழற்சி நிருபர், லோரன்ஸ் செல்வநாயகம்)

பலவந்தமாக கடத்தப்பட்ட சிறுமி புத்தள பகுதியில் பாதாள அறையிலிருந்து மீட்கப்பட்டுள்ளார். சிறுமியை அடைத்து வைத்திருந்த சந்தேகநபர். எதிர்வரும் (24) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, புத்தள , கட்டுகஹகல்கே பகுதியிலுள்ள வீடொன்றில்

திடீரென நுழைந்த மூன்று இளைஞர்கள் உறங்கிக் கொண்டிருந்த 14 வயது சிறுமியை கடத்திச் சென்றுள்ளனர். தடுக்க முயன்ற சிறுமியின் தந்தையின் கையை கூரிய ஆயுதத்தால் தாக்கி இவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் கடந்த (19) இரவு இடம்பெற்றிருந்தது.

இது குறித்து சிறுமியின் தந்தை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். (பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டு வெள்ளவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது,

அவருக்கு 24 வரை விளக்கமறியல் வழங்கப்பட்டது.

06

# டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரிப்பு

நாட்டில் தொடர்ந்தும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்தள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும்

06

# நாட்டுக்கு கடத்தவிருந்த 60 இஞ்சி மூடைகள் மீட்பு

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 60 இஞ்சி மூட்டைகளை தமிழக சுங்கத் துறை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில், இஞ்சி மூட்டைகளை பதுக்கி வைத்திருந்த வீட்டின் உரிமையாளர் குறித்து விசாரணை நடத்தப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

இந்நிலையில், நேற்று (13) அதிகாலை இலங்கைக்கு மண்டபம் அடுத்துள்ள மரைக்காயர் பட்டினம் கடற்கரையிலிருந்து, நாட்டுப் படகில்

06

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.06.12
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5502
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.31,379,728.00
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 3 8 3 1 1 1

**அத சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 77
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 3 1 1 1

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3744 — சீட்டிழுப்பு திகதி 2024.06.12
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.61,027,465.16
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 30 56 77 80 — விசேட எழுத்து Q
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 49921

**Mega Power**
சீட்டிழுப்பு இலக்கம் 1850 — 2024.06.12
59987
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 435,697,148.00
ஆங்கில எழுத்து C — சுப்பர் இலக்கம் 04 — வெற்றி இலக்கங்கள் 21 33 48 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**லக்கி 7 VIP**
திகதி 2024.06.12 — சீட்டிழுப்பு இலக்கம் 0328
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 1 1 1 9 7 0
L7 எழுத்து G
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.31,254,774.04

**ராசி சுப பலன்**
திகதி 2024.06.12 — சீட்டிழுப்பு இலக்கம் 811
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,010,452.80
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 05 08 31 39
தனயோக இலக்கம் 37381 — நாளுக்கான விதி எண் 17

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1532 — 2024.06.12
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.96,218,164.96
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 03 09 62 82 — விசேட எழுத்து M
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 52269


# இலங்கை வங்கி

## கட்டடமொன்று தேவை

**பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளை இடமாற்றுவதற்காக பொருத்தமான கட்டடமொன்றை நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள தேவையாகவுள்ளது**

1. கராப்பிட்டிய
2. ஊரகஸ்மங்ஹந்திய
3. தெய்யந்தர

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- ➢ கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தல் கூடாது.
- ➢ தரைப்பரப்பு ஏறக்குறைய 3000 - 3500 சதுர அடி அளவைக் கொண்டதாக இருக்க வேண்டும் அல்லது அது மாடிக் கட்டடமாகவிருந்தால் தரைத் தளம் ஆகக் குறைந்தது 2000 சதுர அடிகளாகவும் மிகுதி மேல் தளத்திலும் இருத்தல் வேண்டும். (அது குறுகிய நீளமானதாகவிருத்தல் கூடாது)
- ➢ கட்டடத்தின் முகப்பு ஆகக் குறைந்தது 30 அடி அகலத்தைக் கொண்டதாகவும் பிரதான வீதியை நோக்கியவாறு நகர மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- ➢ இலகுவில் சென்றடையக்கூடிய வகையிலும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- ➢ மூன்று நிலை மின்சாரம் (60Amp), நீர் வசதிகள், ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு, ஆண், பெண் இரு பாலாரும் வெவ்வேறாகப் பயன்படுத்தக்கூடிய மலசலகூட வசதிகள், அவசர வெளியேற்றக் கதவுகள், மாற்றுத்திறனாளி பிரவேசப் பாதை மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இருத்தல் வேண்டும்.
- ➢ கட்டடத்திற்கு 2'x2' தரையோடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- ➢ கட்டடத்திற்கு கீழ்க்கூரை (சீலிங்) அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- ➢ கட்டடத்தின் பின்புறம் 10x10 சதுர அடி அளவிலான மின்பிறப்பாக்கி அறையொன்று காற்றோட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (அந்த அறை இரும்பு கிறில் இடப்பட்டு மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)
- ➢ நீரை சேமித்து வைப்பதற்கு 1000 லீற்றர் கொள்ளளவுடைய நீர்த்தாங்கியொன்று இருத்தல் வேண்டும்.
- ➢ பின்புறக் கதவு மற்றும் ஜன்னல்களுக்கு பாதுகாப்பு கிறில் இடப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள், கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி மற்றும் இணக்கச் சான்றிதழ் போன்ற ஆவணங்களின் பிரதிகளுக்கு எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **''கராப்பிட்டிய/ ஊரகஸ்மங்ஹந்திய / தெய்யந்தர கிளைகளுக்கான பொருத்தமான கட்டடம்''** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி,
தென் மாகாண அலுவலகம்,
இல. 11, குமாரதுங்க மாவத்தை, மாத்தறை.
தொலைபேசி: 041-2232238**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 230,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 யூன் 19ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124I208 | LKA18224L209 | LKA36425F202 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 75,000 | 90,000 | 65,000 | 230,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 யூன் 19
தீர்ப்பனவுத் திகதி : 2024 யூன் 24
வழங்கப்படும் திகதி : 2024 யூன் 21
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 யூன் 19 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

✳ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 32ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 07

### குறள் தரும் சிந்தனை



பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற

*அடக்கமான பண்பும், இனிமையாகப் பேசும் இயல்பும் தவிர, ஒருவருக்குச் சிறந்த அணிகலன் வேறு இருக்க முடியாது.*

# பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் மக்கள் பிரதிநிதிகள் முன்பான பொறுப்பு

நாட்டின் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடத்தின் பிற்பகுதியில் நடைபெறவிருக்கிறது. இந்தத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஒவ்வொரு அரசியல் கட்சியும் நகர்வுகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்துள்ள கட்சிகளின் தலைவர்கள் அரசியல் மேடைகளில் பல்வேறுபட்ட வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்குகின்றனர். பொருளாதார ரீதியான வங்குரோத்து நிலை குறித்து பலரும் பேசுகின்றனர்.

ஆனால் நாடு 2022 இல் அந்நியச் செலாவணி பற்றாக்குறையுடனான பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான போது, இவர்களில் எவரும் நாட்டின் முன்னேற்றுத்துக்கான கொள்கைகளை முன்மொழியவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் இவர்கள் தங்கள் தங்கள் கட்சி நலன்களை முன்னிலைப்படுத்தி தீர்மானங்களை மேற்கொண்டார்களே ஒழிய, நாட்டின் நலன்களைக் கருத்தில் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்ளப் பின்வாங்கினர்.

நாடு எதிர்கொண்ட பொருளாதார வீழ்ச்சியின் பாரதூரத்தைக் கருத்தில் கொண்ட இவர்கள், அந்தச் சமயத்தில் நாட்டை பொருளாதார ரீதியில் மீளக்கட்டியெழுப்பவோ, அதன் ஊடாக மக்களுக்கு நிவாரணங்கள் பெற்றுக்கொடுப்பதற்கோ நாட்டின் தலைமையை ஏற்க முன்வராது தயக்கம் காட்டினர்.

அந்த இக்கட்டான சூழலில் நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றதோடு, நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான பொருளாதார ரீதியிலான வேலைத்திட்டங்களையும் ஆரம்பித்தார். அதன் ஊடாக நாட்டின் பொருளாதாரம் குறுகிய காலப்பகுதிக்குள் கட்டம் கட்டமாக மீட்சிபெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்து நம்பிக்கை தரும் வகையில் முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருகின்றது.

ஆன போதிலும் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது போன்று மீண்டும் பொருளாதாரம் வீழ்ச்சியடைய இடமளிக்காத வகையில் அதனை உறுதியுடன் பேணவும் வேண்டும். அத்தோடு நாட்டின் பொருளாதாரத்தை நிலைபேறானதாகக் கட்டியெழுப்பவும் வேண்டும். அவையே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. அதனை நிறைவேற்றுவதே இன்றைய தேவையாகும்.

2022 இல் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய சரியான பொருளாதார முறைமை இன்மையே பிரதான காரணமாக அமைந்திருந்தது. இதுவரையிலும் நாட்டில் இறக்குமதியை மையப்படுத்திய பொருளாதார முறைமையே காணப்பட்டது. நாட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் இறக்குமதி செய்யப்படும் முறைமையே காணப்பட்டது.

ஆனால் யுத்தத்திற்கு பின்னர் துரிதமாக பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதற்கான வாய்ப்பை நாடு பெற்றுக்கொண்டது. இருந்தும் கூட யுத்தம் முடிந்து 15 வருடங்களாகியும் அந்த முன்னேற்றம் அடைந்து கொள்ளப்படாதுள்ளது. இறக்குமதிக்கு தேவையான பணம் இல்லாத வேளையில் அதற்காக கடன் பெற்றுக்கொள்ளப்பட்டன. அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் பெரிதும் அதிகரித்து மீளச்செலுத்த முடியாத நிலை உருவானது. இந்த உண்மையை எவரும் மக்களுக்கு சொல்ல முன்வரவில்லை.

இறுதியில் நாடு வங்குரோத்து அடைந்தது. ஆனால் அவ்வாறான நிலை நாட்டில் மீண்டும் ஏற்பட இடமளிக்கலாகாது. அந்த வகையில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு ஒத்துழைப்புடன் பொருளாதாரத்தை உறுதியாகக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை முன்னெடுத்து இருக்கின்றது.

அந்த வகையில் பத்தரமுல்ல, வோடர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொருளாதார மறுசீரமைப்புக்கான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் பங்கேற்கும் இளைஞர், யுவதிகளுடனான கலந்துரையாடலில் உரையாற்றிய ஜனாதிபதி, 'தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி பொருளாதார வேலைத்திட்டத்தை நாம் முன்வைத்துள்ளோம். அதை நடைமுறைப்படுத்தவே பொருளாதார நிலைமாற்றச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் வீழ்ச்சியடைந்தால் அந்நியச் செலாவணியை நாம் மீண்டும் இழக்க நேரிடும். மருந்து, பெற்றோல், எரிபொருள் இல்லாமல் மீண்டும் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்படும். அதனால் அனைத்துக் கட்சி தலைவர்களும் இப்பொருளாதார நிலைமாற்றச் சட்டமூலத்தை ஆதரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மீண்டும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதைத் தவிர்க்கவும் தடுக்கவும் உண்மையாகவே விரும்பும் மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்தின் இத்திட்டத்திற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கவே செய்வர். அதுவே பொறுப்புமிக்க மக்கள் பிரதிநிதிகளின் பணியாக இருக்கும். தனிப்பட்ட மற்றும் அற்ப அரசியல் நலன்களுக்காக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய அவர்கள் ஒருபோதும் துணைபோகவே மாட்டார்கள். மக்களின் கருத்தும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஐம்பதுக்கு மேற்பட்டோரை பலிகொண்ட குவைத் தீவிபத்துக்கான காரணம் என்ன?



## உயிரிழந்தவர்களில் 40 பேர் இந்தியர்கள்! தீவிர விசாரணை நடத்தி, தவறு செய்தோரை தண்டிக்குமாறு அரசு கண்டிப்பான உத்தரவு!

குவைத் நாட்டின் தெற்கு அகமதி மாகாணத்தில் மங்கஃப் நகரத்தில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பில் புதன்கிழமை (ஜூன் 12) அதிகாலை ஏற்பட்ட பயங்கர தீவிபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை நேற்று 50 ஐயும் தாண்டியுள்ளது. உயிரிழந்தோரில் 40 பேர் இந்தியர்களாவர்.

ஆறு மாடிகள் கொண்ட இந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் அதிகம் தங்கியிருந்தனர். இந்தக் கட்டடம் குவைத் நாட்டைச் சேர்ந்தவருக்கு சொந்தமானது. இந்த விபத்துக்கான காரணம் குறித்து ஆராய்ந்த போது அந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் கட்டுமான விதிமீறல்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. அது குறித்து அந்த நாட்டு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

எகிப்து நாட்டு காவலாளி தங்கியிருந்த பகுதியில் வைக்கப்பட்டிருந்த சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததே தீவிபத்துக்குக் காரணம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவித்தன. கட்டடத்தின் கீழ்த்தளத்தில் அந்தக் காவலாளி தங்கியுள்ளார். அதையடுத்து அடுக்குமாடி குடியிருப்பின் மற்றைய பகுதிகளுக்கும் தீ வேகமாகப் பரவியுள்ளது.

தீவிபத்து ஏற்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்பில் சுமார் 195 பேர் தங்கி இருந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள். அவர்களில் 150 இற்கும் மேற்பட்டவர்கள் இந்தியர்கள். தீவிபத்து ஏற்பட்ட நிலையில் அடுக்குமாடிக் குடியிருப்பில் தங்கி இருந்தவர்களில் 92 பேர் பத்திரமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 20 பேர் இரவுக் கடமை என்பதால் பணிக்குச் சென்றுள்ளனர். அடுக்குமாடிக் குடியிருப்பில் அங்குள்ள என்.பி.டி.சி நிறுவனத்தில் பணியாற்றி வந்த ஊழியர்கள் தங்கி இருந்துள்ளனர்.

தீவிபத்து ஏற்பட்ட நேரம் அதிகாலை 4 மணி என்பதால் பெரும்பாலானவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளனர். அதுதான் உயிரிழப்பு அதிகரிக்கக் காரணம் எனத் தெரிகிறது. தீயினால் ஏற்பட்ட புகையை சுவாசித்த காரணத்தால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு பெரும்பாலானவர்கள் உயிரிழந்துள்ளனர். சிலர் தீவிபத்தில் இருந்து தப்பிக்க மாடியில் இருந்து கீழே குதிக்க முயன்று உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடத்தி, சம்பவத்துக்குக் காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு குவைத்தின் அமீர் ஷேக் அல்சபா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

"உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவாகக் குணம் பெற வேண்டுகிறேன். இந்த விபத்துக்கான காரணத்தை அதிகாரிகள் துரிதமாக விசாரித்து அறிய வேண்டும். மேலும், இதற்கு காரணமானவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்கள் என்பதை அந்த நாட்டின் தடயவியல் துறை உறுதி செய்துள்ளது. கேரளா, தமிழகம் மற்றும் வட இந்தியாவைச் சேர்ந்தவர்கள் உயிரிழந்துள்ளதாக குவைத் தடயவியல் துறை தகவல் தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்களில் ஐவர் தமிழர்களாவர். குவைத் முடிக்குரிய இளவரசர் ஷேக் சபா, குவைத் பிரதமர் ஷேக் அகமது அப்துல்லா ஆகியோரும் தங்களது இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துக்கு என்.பி.டி.சி நிறுவனம் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்பு உரிமையாளரின் பேராசைதான் காரணம் என பாதுகாப்பு துறை அமைச்சரும், துணைப் பிரதமருமான ஷேக் ஃபகத் அல் யூசுப் அல் சபா தெரிவித்துள்ளார். இந்த தீவிபத்து குறித்து பிரதமர் மோடி எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், “குவைத் நகரில் நிகழ்ந்த தீவிபத்து மிகுந்த துயரை தருகிறது. இதில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறேன். காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், “குவைத் தீவிபத்து பற்றிய செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சி அடைந்தேன். எங்கள் தூதர் அங்கு விரைந்துள்ளார். மேலும் தகவலுக்காக காத்திருக்கிறோம். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எங்கள் தூதரகம் முழு அளவில் உதவிகளை செய்யும்” என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் குவைத்துக்கான இந்திய தூதர் ஆதர்ஷ் ஸ்வைகா நிலைமையை மதிப்பிடுவதற்காக தீவிபத்து ஏற்பட்ட மங்கஃப் பகுதிக்கு விரைந்தார். அதன் பிறகு 30 இற்கும் மேற்பட்ட இந்திய தொழிலாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள அல்அதான் மருத்துவமனைக்கு அவர் சென்றார். அங்கு பல நோயாளிகளை சந்தித்து, தூதரகம் சார்பில் முழு அளவில் உதவிகள் செய்யப்படும் என அவர்களுக்கு உறுதி அளித்தார்.

இதையடுத்து தீவிபத்தில் தொடர்புடைய இந்தியர்களின் குடும்பத்தினருக்காக 96565505246 என்ற ஹெல்ப் லைன் இலக்கத்தை குவைத்தில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது. மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இயன்ற அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என தூதரகம் உறுதி அளித்துள்ளது.

# ஹஜ்ஜாஜிகளுக்கு அனைத்து வசதிகளையும் வழங்கும் நடவடிக்கையில் சவூதி அரசாங்கம்

இவ்வருடத்திற்கான புனித ஹஜ் கிரியைகளுக்கான பிரமாண்டமான ஏற்பாடுகளை சவூதி அரேபிய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இரு புனித தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல சஊத் அவர்களின் ஆலோசனையின் பேரில் இந்த ஏற்பாடுகள் யாவும் மிகவும் நேர்த்தியாக செய்யப்பட்டிருக்கின்றன.

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் 2.5 மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் இம்முறை புனித ஹஜ் கடமையில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவர்கள் அனைவரும் தமது கடமைகளை எந்த விதமான இடர்கள் மற்றும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்காமல் நிறைவேற்றத் தேவையான அனைத்து வசதிகளையும் சேவைகளையும் வழங்குவதில் சவூதி அரசு உறுதி பூண்டுள்ளது.

ஹாஜிகளின் பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து, உணவு மற்றும் தங்குமிட வசதி போன்றவற்றில் அதிக அக்கறை செலுத்தியுள்ளது. விஷேட பாதுகாப்பு எற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இம்முறை ஹஜ் கடமைகளின் போது 2 இலட்சத்து 50 ஆயிரம் படைவீரர்கள் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

80 சிறியரக அம்புலன்ஸ் வண்டிகளும் 75 பெரியரக அம்புலன்ஸ் வண்டிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், இவற்றுக்கு மேலதிகமாக 33 உதவி அம்புலன்ஸ் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை போக்குவரத்து சேவைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் 35 ஆயிரம் சொகுசு பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதேவேளை புனித ஹஜ் கடமை நேரங்களின் போது கடமையாற்றவென 1 இலட்சத்து 20ஆயிரம் பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டு தொண்டர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



35 கம்பனிகள் ஹாஜிகளுக்கான தங்களது சேவைகளை வழங்க முன்வந்துள்ளன. தொழில்நுட்ப ரீதியில் இக்காலத்தில் சேவைகளை வழங்கவென 120 அப்ஸ்கள் (apps) உருவாக்கப்பட்டுள்ளன. பொறியியலாளர்கள் தொழிலாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களாக 53 ஆயிரம் பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

264 முதலுதவி சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, 28 வைத்தியசாலைகளும், 203 நடமாடும் சிகிச்சை குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதேவேளை இப்புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் பொருட்டு இம்முறை உலகலாவிய ரீதியில் 2400 பேர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல சஊத் அவர்களின் உத்தரவுக்கமைய விஷேட விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

காஸா தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயமுற்ற 1000 குடும்பங்களின் பிரதிநிதிகளுக்கு இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கான விஷேட சந்தர்ப்பத்தை மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் வழங்கியுள்ளார்.

இலங்கையிலிருந்து இம்முறை 3500 பேர் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றச் சென்றுள்ளனர்.

இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி அவர்களின் முயற்சியின் பயனாக மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களின் விருந்தாளிகளாக இம்முறை 20 பேருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன்

இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானியிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க முப்படையில் சேவையாற்றும் 05 பேருக்கும் இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அஸ்ஹர் ஆதம்...
(கல்முனை குறூப் நிருபர்)

# பூமிக்கு 2,000 மரங்கள்: சுற்றாடல்தின முயற்சிக்கு வழிகாட்டும் எயிற்கின் ஸ்பென்ஸ் ஹொட்டேல்ஸ்

எயிற்கின் ஸ்பென்ஸ் ஹொட்டேல்ஸ், உலக சுற்றாடல் தினத்தைக் கொண்டாடும் முகமாக இலங்கை, மாலைதீவு, இந்தியா, ஓமான் ஆகிய நாடுகளிலுள்ள அதன் காணிகளில் 2,000 மரக்கன்றுகளை நடுகை செய்யவிருப்பதன் மூலம் பேண்தகு தன்மைக்கான அதன் இடைவிடாத அர்ப்பணிப்பை மீள எடுத்துக் காட்டியுள்ளது.

இலங்கையில் எயிற்கின் ஸ்பென்ஸ் ஹொட்டேல்ஸுக்குச் சொந்தமான ஹெரிட்டன்ஸ் கந்தலம, ஹெரிட்டன்ஸ் அஹுங்கல, ஹெரிட்டன்ஸ் டீ ஃபக்டரி, ஹெரிட்டன்ஸ் ஆயுர்வேத, செரண்டிடோ ஹெரிட்டன்ஸ் நீர்கொழும்பு, துர்யா களுத்துறை, அமெத்திஸ்ட் ரிசோட், ஏர்ல்ஸ் ரிஜென்ஸி ஆகியவற்றின் காணிகளில் மொத்தம் 1,730 மரக்கன்றுகள் நாட்டப்படும். இவற்றுள், எயிற்கின் ஸ்பென்ஸின் பிரதான ஹொட்டேலாகிய ஹெரிட்டன்ஸ் கந்தலமவிலேயே ஆகக் கூடுதலாக 780 மரங்கள் நடப்பட இருக்கின்றன. இதனைத் தவிர, இம்மாதப் பிற்பகுதியில் இடம்பெறவிருக்கும் இந்த ஹொட்டேலின் 30ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களுடன் இணைந்ததாக, 211 ஏக்கர் பாதுகாக்கப்பட்ட காணியில் விரிவான உயிரினப் பாதுகாப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

மாலைதீவில் ஹெரிட்டன்ஸ் ஆராஹ், அடாரன் பிரெஸ்டீஜ் வாடு, அடாரன் செலெக்ட் மீதுப்பாரு, அடான் செலெக்ட் ஹுதுரன் ஃபூஸி, அடாரன் கிளப் ரண்ணல்ஹி போன்ற ரிசோட்களின் வளவுகளில் 135 மரங்கள் நடப்பட இருக்கின்றன. இதற்கு மேலதிகமாக, செலெக்ட் ஹுதுரன் ஃபூஸி ரிசோட், உலக சுற்றாடல் தினத்துடன் இணைந்ததாகவும் கடலோரப் பாறைகளைப் பாதுகாக்கும் முயற்சிக்கு உதவியாகவும் 400 இற்கு மேற்பட்ட Coral களின் நடுகையைப் பொறுப்பேற்றுள்ளது.

ஓமானிலுள்ள அல் ஃபலாஜ் ஹொட்டேல் 75 மரங்களையும் இந்தியாவின் சென்னையிலுள்ள துர்யா ஹொட்டேல் 50 மரங்களையும் நடுவதன் மூலம் தமது பங்களிப்பைச் செய்யவிருக்கின்றன. மரநடுகையின் முக்கியத்துவம் மற்றும் சமூகத்திற்கு அதனால் கிடைக்கும் நன்மைகள் பற்றி விழிப்புணர்வை வளர்ப்பதற்கான இந்த முயற்சிகளில் ஹொட்டேல் ஊழியர்கள், விருந்தினர்கள் மற்றும் உள்ளூர் சமூகத்தினர் பங்குபற்றுவார்கள்.

எயிற்கின் ஸ்பென்ஸ் ஹொட்டேல்ஸ், நீண்ட காலமாகவே அதன் பேண்தகு தன்மை தொடர்பான முன்மாதிரிக்காகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. குறிப்பாக, ஹெரிட்டன்ஸ் கந்தலம இந்த அர்ப்பணிப்புக்குச் சான்றாக அமைந்துள்ளது. இயற்கைச் சூழலுடன் இயல்பாக இணைந்திருப்பதுடன் பேண்தகு சுற்றுலாத் துறையின் அளவுகோல்களை நிர்ணயித்துச் செயற்படும் இந்த ஹொட்டேல், Green Globe சான்றிதழ் பெற்ற உலகின் முதலாவது இக்கோரிசோட் ஆகவும் ஐக்கிய அமெரிக்காவுக்கு வெளியே LEED சான்றிதழ் பெற்ற முதலாவது ஹொட்டேல் ஆகவும் விளங்குகின்றது.



இலங்கையில் மரநடுகை

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு எயிற்கின் ஸ்பென்ஸ் ஹொட்டேல்ஸ் மேற்கொள்ளும் மரநடுகை இயக்கம், பேண்தகு தன்மையான விருந்தோம்பல் துறையில் அது வகிக்கும் தலைமைத்துவத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். ஊழியர்கள், விருந்தினர்கள் மற்றும் சமூகத்தினரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் இந்த முயற்சியின் மூலம் சுற்றாடல் பாதுகாப்பிற்கு நிறுவனம் செய்யும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். ஹெரிட்டன்ஸ் கந்தலம ஹொட்டேல், மூன்று தசாப்தகால விருந்தோம்பல் தரச்சிறப்பினை விரைவில் கொண்டாடவிருப்பது, எயிற்கின் ஸ்பென்ஸ் ஹொட்டேல்ஸ் தனது எதிர்கால முயற்சிகளில் பேண்தகு தன்மைக்கு முன்னுரிமை அளிப்பதில் கொண்டுள்ள உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

எயிற்கின் ஸ்பென்ஸ் என்பது இலங்கையின் மாபெரும் கூட்டு நிறுவனங்களில் ஒன்றான எயிற்கின் ஸ்பெனடஸ் பி.எல்.சி.யின் ஒரு பகுதியாகும். எயிற்கின் ஸ்பென்ஸ் ஹொட்டேல்ஸ் அதற்குச் சொந்தமான 17 ஹொட்டேல்கள் மற்றும் ரிசோட்களை இலங்கை, மாலைதீவு, ஓமான், இந்தியா ஆகிய நாடுகளில் நடத்துகின்றது. நிறுவனத்திற்குச் சொந்தமான ஹொட்டேல்கள் ஹெரிட்டன்ஸ் ஹொட்டேல்ஸ் அன்ட் ரிசோர்ட்ஸ், அடாரன் ஹொட்டேல்ஸ் அன்ட் ரிசோர்ட்ஸ், துர்யா ஆகிய வர்த்தகப் பெயர்களில் இயங்குகின்றன. பிரபல கட்டடக்கலை மேதை ஜெப்ரி பாவாவினால் இலங்கையில் வடிவமைக்கப்பட்ட ஆகக்கூடிய ஹொட்டேல்களின் பாதுகாவலனாக ஹெரிட்டன்ஸ் ஹொட்டேல்ஸ் அன்ட் ரிசோர்ட்ஸ் விளங்குவதால் அதன் கட்டடக்கலைச் சிறப்பும் தனித்துவம் வாய்ந்ததாகும்.



இந்தியாவில் மரநடுகை



ஓமானில்...



மாலைதீவில்...

# கிழக்கின் குரல்



திருக்கோவிலில்

## 8,470 குடும்பங்களுக்கு இரண்டாம் கட்ட இலவச அரிசி விநியோகம்

திருக்கோவில் தினகரன் நிருபர்

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் சுமார் 8,470 குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டமாக இலவசமாக அரிசி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் தலைமையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேயவிக்கிரமவினால் தம்பிலுவில் கிராம சேவையாளர் பிரிவில் நேற்று வியாழக்கிழமை அரிசி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் திருக்கோவில் பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் சுமார் 8,470 குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டமாக அரிசி வழங்கப்பட்டதுடன், தலா குடும்பத்துக்கு 10 கிலோகிராம் அரிசி பொதி வழங்கி வைக்கப்பட்டது.



இதுவரையில் அரசினால் இரண்டு மாதங்களுக்கு இலவச அரிசி விநியோகத்திற்காக அம்பாறை மாவட்டத்தில் 20 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குமாக 54 கோடி ரூபாவினை செலவு செய்துள்ளதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேயவிக்கிரம தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், திருக்கோவில்பிரதேசசெயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட கணக்காளர் மற்றும் மாவட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

முஷாரப் எம்.பி.யின் நிதி உதவியில்

## இரண்டு பாடசாலைகளுக்கு போட்டோ கொப்பி இயந்திரம்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்



திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப்பின் 2024ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்ட நிதியிலிருந்து சம்மாந்துறை சபூர் வித்தியாலயம் மற்றும் சம்மாந்துறை ஜமாலியா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளிலும் நீண்டகால தேவையாக இருந்த போட்டோ கொப்பி இயந்திரங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை அப்பாடசாலைகளின் அதிபர்களிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபைத் தவிசாளர் எம்.ஐ.எம்.றனூஸ், சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.மஹேந்திரகுமார், சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.சி.எம்.சஹீல், சம்மாந்துறை வலய கல்வி அலுவலகத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர்கள் உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## கதிர்காமம் பாத யாத்திரை குழுவினருக்கு மருத்துவ சேவை



காரைதீவு குறூப் நிருபர்

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி கதிர்காம பாதயாத்திரை குழுவினருக்கு கல்லடி இராமகிருஷ்ணமிஷனின் ஏற்பாட்டில் விசேட மருத்துவ முகாம் கல்லடி விபுலானந்தா மணி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாஜீ மகராஜ்ஜின் ஏற்பாட்டில் உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தாஜீ மகராஜ் முன்னிலையில் இந்த விசேட மருத்துவ முகாம் மிஷன் சிவபுரியில் நடைபெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரி.நவலோஜிதன், டாக்டர் ரி.வாமதேவன் உள்ளிட்ட மருத்துவர்கள் பாத யாத்திரை குழுவினருக்கு சிகிச்சை அளித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு ஒரு மாதகாலம் பாத யாத்திரையை பூர்த்தி செய்த நிலையில் இவர்களுக்கு இம்மருத்துவ முகாம் பெரிதும் உதவியாக இருந்தது. இராமகிருஷ்ண மிஷனின் இந்த ஜீவ சேவைக்கு பாத யாத்திரை குழுத் தலைவர் ஜெயாவேல்சாமி தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துள்ளார். சுமார் 75 யாத்திரிகர்கள் இம்மருத்துவ முகாமில் பயன் பெற்றனர்.

ஒலுவிலில்

## மனை பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம்

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்



தேசிய உணவு உற்பத்தி ஊக்குவிப்பு மற்றும் மனை பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வீடுகளில் மனை பொருளாதாரத்தினை கட்டியெழுப்பும் வகையில் விவசாய திணைக்களத்தின் மூலம் பல்வேறு வேலைத்திட்டங்கள் நாடு தழுவிய ரீதியில் உள்ள கிராம மட்டங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைவாக ஒலுவில் நுஜா மகளிர் விவசாய விரிவாக்கல் அமைப்பின் மூலம் மனை பொருளாதாரத்தினை கட்டியெழுப்பும் 'கைவினை பொருட்கள் தயாரிக்கும் விசேட பயிற்சிகள்' ஒலுவில் பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றன.

அமைப்பின் தலைவி ஏ.எல்.நயிமா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது, அம்பாறை விவசாய விரிவாக்கல் பயிற்சி பிரிவின் வளவாளர் எஸ்.ஜீவிதா பிரதம வளவாளராக கலந்து கொண்டு இல்ல தலைவிகளுக்கும் யுவதிகளுக்குமான பயிற்சிகளை வழங்கி வைத்தார். அம்பாறை மாவட்ட விவசாய பிரதி பணிப்பாளர் கே.ஏ.கே. ஏஸ்.லக்மால் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வின் போது தலைமை விவசாய போதனாசிரியர் ஆர்.விஜயராகவன், விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர் பி.நிரோசன் உள்ளிட்ட துறைசார்ந்த முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் வீடுகளில் இலகுவில் கிடைக்கும் பொருட்களை கொண்டு காலத்திற்கு ஏற்ற வகையில் அனைவரும் விரும்பி உண்ணும் உணவுப் பண்டங்களை குறைந்த செலவில் சுகாதார முறையில் உற்பத்தி செய்யும் பயிற்சிகள் பல வழங்கப்பட்டன.

மக்கள் வீடுகளில் இருந்தவாறு போஷாக்கான உணவு உற்பத்தியினை மேற்கொள்வதோடு, வாழ்க்கை செலவினை குறைத்து நச்சுப் பொருளற்ற சுற்றாடல் நேயம்மிக்க உணவு உற்பத்திக்கான இச்செயற்றிட்டத்தின் கீழ் ஒலுவில் பிரதேச மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் இவ்வேலைத்திட்டத்தில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

## பல்கலைக்கு தெரிவாகிய மாணவர்கள் கௌரவிப்பு



மணல்சேனை நிருபர்

பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ள மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அப்பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மேற்படி பாடசாலை அதிபர் எஸ்.செல்வம் தலைமையில் இந்த கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றதுடன், இம்மாணவர்கள் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

முதல் தடவையாக இப்பாடசாலையில் கணித, விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு ஐந்து மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி இரண்டு மாணவர்கள் கணிதப் பிரிவிலும் ஒரு மாணவர் விஞ்ஞானப் பிரிவிலும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி சாதனை படைத்துள்ளனர்.

மற்றும் வணிக பிரிவில் 11 மாணவர்கள் தோற்றி ஏழு மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேபோல் கலைப் பிரிவில் கணிசமான மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி சாதனை படைத்துள்ளனர். இதன்போது க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் அதிபர் பாராட்டு தெரிவித்துள்ளதுடன், அதிபருக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெற்றோர் நன்றி தெரிவித்துள்ளனர்.

பொத்துவில்

## கவிவாணன் எம்.ஏ.அஸீஸ் வித்தியாலயம் தரம் உயர்வு

ஒலுவில் விசேட நிருபர்

அக்கரைப்பற்று வலய கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பொத்துவில் கவிவாணன் எம்.ஏ.அஸீஸ் வித்தியாலயம் தரம் உயர்த்தப்பட்டு தரம் 10, 11ஆம் வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அப்பாடசாலையின் அதிபர் எம்.பி.அப்துல் றஹீம் தெரிவித்தார். இதற்கான அனுமதியை கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் தகவல் தொழில்நுட்ப கல்வி, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எம்.டி.எம். டபிள்யூ.ஜி.திசாநாயக்க வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாண கல்வி திணைக்கள கட்டமைப்பு குழுவின் தீர்மானத்தை கவனத்திற்கொண்டு மேற்படி பாடசாலையில் 2024ஆம் கல்வியாண்டின் முதலாம் தினத்திலிருந்து தரம் 10 ஆரம்பிப்பதற்கும், அடுத்த வருடம் தரம் 11 ஆரம்பிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்த தரம் உயர்வுக்கமைய இப்பாடசாலைக்கு தேவையான புதிய ஆளணி மற்றும் பௌதீகவளம் அங்கீகரிக்கப்படும்வரை அதிபர் மற்றும் வலய கல்விப் பணிப்பாளர் ஆகியோர் உறுதிப்படுத்தியதற்கமைய இருக்கின்ற வளங்களை பயன்படுத்த வேண்டுமெனவும், பாடசாலையின் வகை 11, தரம் (111) என மாற்றப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.இந்த அனுமதியின் மூலம் பாடசாலையின் பெயரில் எவ்வித மாற்றமும் இல்லையெனவும் நிபந்தனைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஹஜ்ஜுப் பெருநாள்; மூதூரில் இரவில் கடைகள் திறப்பு

மூதூர் தினகரன் நிருபர்

எதிர்வரும் புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு மூதூர் நகர்ப்புற வர்த்தக நிலையங்கள் யாவும் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12.00 மணிவரை திறக்கப்படும் என மூதூர் வர்த்தகர்களினால் பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மூதூர் வாடிக்கையாளர்களினதும் தூரப் பிரதேசங்களில் இருந்து வரும் பொதுமக்களினதும் நலன் கருதி மூதூர் நகர்ப்புற வர்த்தக நிலையங்களை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

## தரம் 05 மாணவர்களுக்கு தேர்வு வழிகாட்டி நூல்கள்

தம்பலகாமம் குறூப் நிருபர்



திருகோணமலை மாவட்டத்தில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் வழங்கி வைக்கப்பட்டன.

இம்மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு பூம்புகார், பாலையூற்று போன்ற பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் ஐந்தாம் தர மாணவர்களுக்கே இந்த வழிகாட்டி நூல்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மாணவருக்கும் தலா 1,930 ரூபா பெறுமதியான ஆற்றல் எனும் புலமைப் பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்டன.

இந்த நூல்களை மாணவர்களுக்கு திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன், செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன், பொருளாளர் இராசரத்தினம் கோகுலதாசன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

## காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்தவருக்கு நட்டஈடு

திராய்க்கேணி தினகரன் நிருபர்

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தவருக்கு 10 இலட்சம் ரூபா மரண இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை, சம்பூநகர் விவசாய பாதையில் கடந்த வருடம் 2023.11.03ஆம் திகதி காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி அட்டாளைச்சேனை 15ஆம் பிரிவைச் சேர்ந்த அப்துல் ஜப்பார் நிலுவர் எனும் ஆசிரியர் உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில் அரசாங்க சுற்றுநிருபத்துக்கமைய அரச நட்டஈட்டு கொடுப்பனவாக பத்து இலட்சம் ரூபா வழங்க வனப் பரிபாலன திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் அனர்த்தப் பிரிவினரால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் அதன் நிர்வாக உத்தியோகத்தர் கே.வி.சலீம் யானையின் தாக்குதலில் உயிரிழந்தவரின் மனைவியிடம் இத்தொகைக்கான காசோலையை அண்மையில் வழங்கி வைத்ததாக அப்பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.ஜி.எம். அர்சாத் தெரிவித்தார்.

## புகைத்தல், போதை பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு

துறைநீலாவணை நிருபர்




மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகமானது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்து ஏற்பாடு செய்து நடத்திய புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

அப்பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்தினத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் கீழ் இப்பேரணி இடம்பெற்றது.

"நண்பா போதைக்கும் புகைத்தலிற்கும் முற்றுப்புள்ளி வைப்போம்", "வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப்பொருளின் கீழ் இப்பேரணி இடம்பெற்றது.

மகிழூர்முனை சக்தி வித்தியாலய முன்றலில் ஆரம்பமான பேரணியின் போது, புகைத்தல் மற்றும் போதைப் பழக்கத்தினால் ஏற்படும் பாதக விளைவுகளை குறிக்கும் பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பிய வண்ணம் இடம்பெற்ற விழிப்புணர்வு பேரணியானது மகிழூர் பொது விளையாட்டு மைதானத்தை அடைந்ததும் அங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

## கலாசார மண்டப திறப்பு விழா

பாலமுனை தினகரன் நிருபர்



அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை தைக்கா நகர் ஸஹ்ரா வித்தியாலயத்தில் மாணவர்களின் நன்மை கருதி நிர்மாணிக்கப்பட்ட புதிய கலாசார மண்டபம் அவ்வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம்.பைறூஸ் தலைமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

முஸ்லிம் ரிலீப் நிறுவனத்தின் அனுசரணையில் பிரதேச கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜஃபரின் ஒருங்கிணைப்பின் கீழ் கட்டப்பட்ட இந்த மண்டப திறப்பு விழாவில் அக்கரைப்பற்று வலய கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றகுமதுல்லா பிரதம அதிதியாகவும், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பான், முஸ்லிம் ரிலீப் நிறுவனப் பணிப்பாளர் ஏ.எம்.மிஹ்லார், சட்டத்தரணி எம்.எஸ்.ஜூனைதீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது அதிதிகள் நினைவுச்சின்னம் வழங்கி பாடசாலை அதிபரினால் கௌரவிக்கப்பட்டனர்.

# அலங்கார மீன்கள் ஏற்றுமதி: நான்கு வருடங்களில் ரூ.2,632 மில், வருவாய்



அலங்கார மீன்கள் ஏற்றுமதி மூலம் கடந்த நான்கு வருடங்களில் 2,632 மில்லியன் ரூபா (8.52 மில். அமெரிக்க டொலர்) வருமானம் நாட்டுக் கிடைத்திருப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சில் (11) நடைபெற்று நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் அவர் தெரிவித்தாவது,

அலங்கார மீன்கள் வளர்ப்புத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கடற்றொழில் அமைச்சினால் பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. அலங்கார மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இலங்கை நீர் வேளாண்மை அபிவிருத்தி அதிகார சபையினால் தாய் மீன்கள் வழங்கப்படுகின்றன. பயிற்சி மற்றும் வர்த்தக பொருட்காட்சிகள் ஏற்பாடு செய்து அவர்களுக்கு சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்ப அறிவு வழங்கப்படுகிறது. மீன் உணவு விநியோகிக்கப்படுகிறது. மாணவர்கள் மத்தியில் அலங்கார மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக பாடசாலைகளில் அலங்கார மீன் வளர்ப்பு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அபாயகர மீன்கள் இறக்குமதி செய்வதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்ட ரீதியாக அலங்கார மீன் வளர்ப்பு சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# கின்னஸ் சாதனை படைத்த உலகின் குள்ளமான ஜோடி

உலகின் குள்ளமான ஜோடியின் திருமணத்தை கின்னஸ் உலக சாதனை அமைப்பு அங்கீகரித்துள்ளது.

பிரேசிலைச் சேர்ந்த பவ்லோ கேப்ரியல் டி சில்வா கட்யூசியா லி ஹோஷினோ ஜோடி உலகின் மிகவும் குள்ளமான ஜோடி எனப் பெயர் பெற்றவர்கள்.

பவ்லோவின் உயரம் 90.28 சென்டி மீட்டர் (35.54 அங்குலம்), கட்யூசியாவின் உயரம் 91.13 சென்டி மீட்டர் (35.88 அங்குலம்). இருவருமே எலும்பு வளர்ச்சி குறைபாடு கொண்டவர்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைதளம் மூலம் நட்பான இவர்கள் கடந்த 2006ஆம் ஆண்டு சந்தித்து கொண்டனர். அதன்பிறகு 15 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு முறை சந்தித்து பேசிய அவர்கள் தங்களது 31



28 வயதில் திருமணம் செய்து கொண்டனர். இந்நிலையில் உலகின் மிகவும் குள்ளமான ஜோடியென இவர்களை கின்னஸ் சாதனை அமைப்பு அங்கீகரித்து, தங்களின் அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

## IMF இலுள்ள...

குணவர்தனவிடம் கூறுவதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாளர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா எம். பி தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட விடயங்களை சட்டப்பூர்வமாக்குவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதை கண்டிப்பதாகவும், ஜனாதிபதியும் அரசாங்கமும் ஒப்புக்கொண்ட பல்வேறு குறிகாட்டிகளை மாற்றாமல் முன்னெடுத்துச் செல்லும்படி அடுத்து வரும் அரசாங்கங்களையும் வற்புறுத்துவதற்கு எவருக்கும் முடியாது எனவும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இந்த வேலைத்திட்டம் மாற்றப்படுமென, சர்வதேச நாணய நிதியத்துக்கு நேரடியாக அறிவித்துள்ளதாகவும், பந்துல குணவர்தனவை வேறு வேலை தேடிக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்வதாகவும் ஹர்ஷடிசில்வா தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சர்வதேச கடன் வழங்குநர்கள் முன்வைத்துள்ள பிரேரணைக்கு அரசாங்கத்தின் பதில் வெற்றியளிக்கும் பட்சத்தில், முகமதிப்பு அதாவது நிதியில் வரையறை, சந்தை மதிப்புடனான ஒப்பீடு 28 வீதமாக குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. மேலும், முக மதிப்பில் 28 சதவீதம் குறைப்பு போதுமானதா? என்ற பிரச்சினையும் எழுகிறது. எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் கருத்துக்களுக்கு அரசாங்கம் செவிசாய்க்காது மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக சர்வதேச கடன் வழங்குநர்கள் முன்வைத்த பிரேரணைக்கு அரசாங்கம் உடன்பட்டால், அது பாரிய சிக்கலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். கடன் மறுசீரமைப்பு 2038 ஆம் ஆண்டு வரை செய்யப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் திருத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி நேரடியாக சர்வதேச நாணய நிதியத்திடம் அறிவித்துள்ளது. இதற்கான காரணங்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளன .

நாட்டை ஸ்திரப்படுத்திய பின்னர், நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான வேலைத்திட்டம் சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் இல்லை. தற்போதைய பொருளாதார வளர்ச்சி விகிதத்தின்படி, நாடு விழுந்துள்ள பாதாளத்தில் இருந்து மீள்வது கடினம். நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 10 சதவீதமாக உயர்த்த வேண்டும். அடுத்த பத்தாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 10 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும். அது ஐக்கிய மக்கள் சக்தி அரசின் திட்டம். இதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அந்தத் திறன் ஐக்கிய மக்கள் சக்திக்கு உண்டு என்றும்தெரிவித்தார்.

## இலங்கை முன்னெடுத்த...

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை இலங்கையுடன் 48 மாத விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ், 2024 பிரிவுக் கூறு IV மற்றும் இரண்டாவது மதிப்பாய்வை நிறைவு செய்துள்ளது. நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 336 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கவுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு இது இதுவரை வழங்கப்பட்ட மொத்த தொகை 762 மில்லியன் ரூபா (சுமார் 1 பில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஆகும்.

சர்வதேச நாணய நிதியம் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி இலங்கைக்கு The Extended Fund Facility (EFF) ஏற்பாட்டுக்கமைவாக நிறைவேற்றுக் குழு ஒப்புதல் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைவாக இத்தொகை 2.286 பில்லியன் ரூபாவாகும். EFF இன் முதல் மதிப்பாய்வு டிசம்பர் 2023 ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி நிர்வாகக் குழுவால் நிறைவு செய்யப்பட்டது.

EFF ஒத்துழைப்புத் திட்டம் இலங்கையின் பேரினப் பொருளியல் (Macroeconomic) ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். அத்தோடு கடன் நிலைத்தன்மை , வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்கள் மீதான பொருளாதார தாக்கத்தை குறைத்தல் மற்றும் பாதிக்கப்படக்கூடிய , வெளிப்புற இடையகங்களை மீண்டும் உருவாக்குதல் , நிதித்துறை ஸ்திரத்தன்மையை பாதுகாப்பதுடன் ஆளுகை உள்ளார்ந்த ஆற்றலை மேம்படுத்துவதாகும்.

பொருளாதார மீட்சிக்கான அறிகுறிகள் தென்பட்டுள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தி 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு பகுதியில் 3 சதவீதமாக வளர்ச்சியடைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டு மே மாதம் பணவீக்கம் 0.9 சதவீதமாக இருந்ததுடன் மொத்த சர்வதேச கையிருப்பு ஏப்ரல் 2024 இன் இறுதியில் 5.5 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்ததுள்ளது. 2023ல் மொத்த உள்நாட்டு உற்பத்தி 9.8 சதவீதமாக அதிகரிப்பதற்கு வருமான மூலமான வரி வருவாய் உபரியாக அமைந்துள்ளது. செயல்படாத கடன்களில் முன்னேற்றங்கள் இருந்தபோதிலும் . வங்கி பண வருவாய் வள ஆதாரங்கள் குறித்தும் பொருளாதார மீட்சிக்கான அறிகுறிகள் குறித்தும் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை , சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவின் நேற்றை கலந்துரையாடலுக்குப் பின்னர் , பிரதி நிர்வாக பணிப்பாளரும் செயற்பாட்டு தலைவருமான கென்ஜி ஒகாமுரா (Mr. Kenji Okamura Deputy Managing Director and Acting Chair) வெளியிட்டுள்ள அறிக்கையில் 'நிதி ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் இலங்கையின் செயல்திறன் வலுவாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சமூக செலவினங்களுக்கான குறிகாட்டி இலக்கின் சிறிய பற்றாக்குறையைத் தவிர. அனைத்து அளவு இலக்குகளும் எட்டப்பட்டுள்ளன. பெரும்பாலான கட்டமைப்பு வரையறைகள் தாமதத்துடன் எட்டப்பட்டுள்ளன அல்லது செயல்படுத்தப்பட்டன. சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கை மறுசீரமைப்பு பலனைத் தந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் மீள வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. வருமான சேகரிப்பு மேம்பட்டு வருவதுடன் ,இருப்புக்களும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இந்த நேர்மறையான முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், பொருளாதாரம் இன்னும் மென்மையான போக்குடனேயே காணப்படுகிறது. கடன் நிலைத்தன்மைக்கான பாதை திருப் தியடையக்கூடிய வகையில் இல்லை என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் வலுவான சீர்திருத்த முயற்சிகள், போதுமான பாதுகாப்புகள் மற்றும் தற்செயல் திட்டமிடல் ஆகியவை இந்த பாதிப்புக்களை குறைக்க உதவும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதி நிலைத்தன்மையை மீட்டெடுக்க, நிலையான வருவாய் திரட்டல் முயற்சிகள், திட்ட இலக்குகளுக்கு ஏற்ப கடன் மறுசீரமைப்பை உடனடியாக இறுதி செய்வது அவசியம். சமூக மற்றும் மூலதனச் செலவினங்களைப் பாதுகாப்பது முக்கியமானதாகும். பொது நிதி நிர்வாகத்தை மேம்படுத்துவது நிதி ஒழுங்கு விதி முறைகளை மேம்படுத்த உதவும்.

## சர்வதேச நாணய நிதியத்தின்...

மாதத்தில் நாங்கள் எட்டிய பணியாளர் மட்டத்திலான இணக்கப்பாட்டுக்கமைவாக இந்த தவணை கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 336 மில்லியன் டொலர்கள் விடுவிக்கப்படவுள்ளது. இந்த மூன்று தவணைகளினூடாக மொத்தம் 1 பில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்க சர்வதேச நாணய நிதியம் ஏற்பாடுகளை செய்துள்ளது.

இதில் சர்வதேச நாணய நிதியம் எமக்கு சுட்டிக்காட்டிய சில விடயங்கள் அடங்கியுள்ளன. இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி முக்கியமானவர். சர்வதேச நாணய நிதியம் சமகால அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் சீர்திருத்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதையும் பாராட்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டின் வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுத்து 2024 ஆம் ஆண்டிற்கு நகர்த்துவதற்கு ஜனாதிபதி, மக்கள் மற்றும் சமகால அரசாங்கம் பாரிய தியாகங்களைச் செய்ததாக நாங்கள் நம்புகிறோம். அந்த காலப்பகுதியில் , இந்த சீர்திருத்த செயல்முறை குறுகிய காலத்திற்கு கடினமாக இருந்தாலும், நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு நல்ல பலனைத் தருமென தெளிவாக தெரிவித்திருந்தோம். ஆரம்பக் கஷ்டத்துக்குப் பிறகு இப்போது பலன் தரும் நிலையை நாம் எட்டியுள்ளோம்.

நாம், இந்தப் பணியை மேற்கொண்டிருந்தபோது,சமகாலஅரசாங்கம் என்ற வகையில் எதிர்கொண்ட குற்றச்சாட்டுகளில் ஒன்று, அதாவது "இன்று சர்வதேச நாணய நிதியமே நாட்டை நடத்துகிறது" என்று எதிர்க்கட்சிகள் கூறின. நாடு என்ற ரீதியில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாம் கோரினோம். ஒரு நாடாக 2022 ஆண்டு மார்ச்சில் அவர்களின் ஒத்துழைப்பை கோரினோம். இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

## புனித மக்காவில்...

கடந்த 11 ஆம் திகதி வரை 15 இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டு யாத்ரீகர்கள் சவூதி அரேபியாவுக்கு வருகைத்தந்துள்ளதாக தெரிவித்துள்ள அதிகாரிகள், எதிர்வரும் நாட்களில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு 18 இலட்சம் பேர் ஹஜ் யாத்திரையை மேற்கொண்டுள்ளனர். இவ்வாண்டு அதைவிட அதிகமான யாத்ரீகர்கள் மக்காவுக்கு வருகை தருவார்களென எதிர்பார்ப்பதாக சவூதி அரேபிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, புனித யாத்திரை இன்று அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கவுள்ளவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்புக்கிடையே நிலவும் போர் காரணமாக, காசா பகுதியில் உள்ள பாலஸ்தீனியர்கள் இவ்வாண்டு ஹஜ் யாத்திரையை மேற்கொள்ளவில்லையெனவும் குறிப்பிடப்படுகிறது.

எனினும், பலஸ்தீனத்தின் மேற்குக் கரையிலிருந்து சுமார் 4,200 பாலஸ்தீனர்கள் ஹஜ் கடமைக்காக சவூதி அரேபியா சென்றுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இந்திய மத்திய உள்துறை...

இலங்கை தொழிலாளர் காங்கிரசின். தலைவருமான செந்தில் தொண்டமான் விஜயவாடாவில் சந்தித்து, தேர்தலில் வெற்றி மற்றும் அவர்களின் மும்முறை தொடர்ச்சியாக ஆட்சிக்கான வாழ்த்துகளை தெரிவித்தார்.

இலங்கைக்கு அவர்கள் தொடர்ந்து அளித்து வரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்ததோடு, இலங்கைக்கு விஜயம் செய்ய அழைப்பு விடுத்தார். பொருளாதார அபிவிருத்தி தொடர்பான இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும் கலந்துரையாடல் மேற்கொண்டார்.

விஜயவாடா நகரில், இலங்கையில் பெருந்தோட்ட சமூகத்தின் 200 ஆவது ஆண்டு நினைவு முத்திரையையும் அவர்களுக்கு வழங்கி வைத்தார்.

## வாக்குகளை மட்டும்...

அரசியல்வாதிகள், வாக்குகளைப் பெறுவதற்காகவே இவ்வாறு செயற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்காக மட்டும் தங்கள் கொள்கைகளை மாற்றுபவர்கள் குறித்து தமிழ் மக்கள் மிகவும் அவதானமாகச் செயற்படவேண்டும். ஆரம்பம் முதலே 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆதரவளித்து வரும் கட்சிகளையும், அதனை எதிர்த்த கட்சிகளையும் தமிழ் மக்கள் அடையாளம் கண்டு கொள்ள வெண்டும்.

அத்துடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவளித்த அரசியல் கட்சிகள் தற்போது மாறிவிட்டன. இக் கட்சிகளின் இரட்டை வேடம் தற்போது வெளிப்பிட்டுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ எம்பி,மேலும் தெரிவித்துள்ளார்.

## முட்டையின் விலையை...

சங்கத்தின் தலைவர் அஜித் குணசேக்கர தெரிவித்துள்ளார்.

சந்தையில் 35 ரூபா முதல் 48 ரூபா வரை முட்டை விற்பனை செய்யப்படுகிறது. முட்டையை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தேசிய பாடசாலைகளுக்கு...

களுக்கு புதிதாக நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தையின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதற்கிணங்க ஆங்கில மொழி ஆசிரியர்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் ஓய்வு பெற்று சென்றுள்ள ஆங்கில மொழி ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கல்வி நிர்வாக சேவை மற்றும் ஆசிரிய கல்வி சேவை அதிகாரிகளின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக, துரித வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் கல்வியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டில் முதியோரின்...

தெரிவித்துள்ளார். சுகாதார அமைச்சில் இடம் பெற்றுள்ள விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் எமது நாட்டில் முதியோர் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகின்றது.

நாட்டில் சராசரி ஆயுட்காலம் 79.7 வயதாக காணப்படுகிறது. அந்த வகையில் பெண்களின் வயது 83 ஆக அதிகரித்துள்ளது. இதனால், முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அடுத்த 5 ஆண்டுகளுக்குள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அனைத்து மாகாண வைத்திய சாலைகளையும் உள்ளடக்கும் வகையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதற்காக சுமார் 70 பில்லியன் ரூபா நிதி செலவிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய பலன்கள்

(14.06.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும். சிறு சிறு கடன் தொல்லைகள் உருவாகலாம். இருப்பினும் அதனால் பெரிய பாதிப்புகள் ஏற்படாது.

**ரிஷபம் :**
கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த லாபம் காணப்படும். பிள்ளைகளின் கல்விக்காகவும் கலை நிகழ்ச்சிக்காகவும் தாராளமாக செலவு செய்ய நேரிடும். பெண்களுக்கு குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் மறையும்.

**மிதுனம்:**
பணியாளர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும்.

**கடகம்:**
உங்கள் திறமையால் வாடிக்கையாளர்களைக் கவருவீர்கள். குடும்பத்தில் மன வேறுபாடுகளால் சலசலப்பு உண்டாகக்கூடும். கடன்கள் கட்டுக்குள் இருக்கும்.

**சிம்மம்:**
குடும்பத்தில் செலவுகள் இருந்தாலும் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். கலைத்துறையினர் நல்ல திருப்பத்தை கண்டு மகிழ்வீர்கள்.

**கன்னி:**
குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டாலும் அவற்றை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். சுப காரியங்கள் நடைபெற முயற்சி மேற்கொள்வீர்கள்.

**துலாம்:**
குடும்பத்தில் சிறுசிறு தொல்லைகளை சந்திக்க நேரிடும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். சுப காரியம் தள்ளி போகலாம்.

**விருச்சிகம்:**
பிள்ளைகளின் கல்விக்காக செலவு செய்வீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெறுவர். பங்குச்சந்தையில் சுமாரான லாபம் கிடைக்கும்.

**தனுசு:**
கூட்டுத் தொழில் நன்றாக நடைபெறும். குடும்பத்தில் உற்சாகத்திற்கு குறைவிருக்காது. சுப காரியங்கள் சம்பந்தமான பேச்சு நடைபெறும்.

**மகரம்:**
கூட்டுத் தொழிலில் கூடுதலான ஆதாயம் கிடைக்கும். கூட்டாளிகளுடன் எதிர்வாதம் செய்ய வேண்டாம். அது தொழிலுக்கு பெரிய சிக்கலை ஏற்படுத்திவிடும்.

**கும்பம்:**
பெண்களுக்கு தாய் வழி சொத்துக்கள் வந்து சேரலாம். கலைஞர்கள் பணியாற்றும்போது கவனமாக இருங்கள். இரவில் நீண்ட தூரம் வாகனத்தில் பயணம் செய்வதை தவிர்ப்பது நன்மை தரும்.

**மீனம்:**
கூட்டுத் தொழில் நன்றாக இருந்தாலும் எதிர்பார்க்கும் லாபம் குறையலாம். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றக்கூடும். பழைய கடன்காரர்களின் மறைமுகத்தொல்லை இருக்கும்.

## நலன்புரி திட்டங்கள்... (03ஆம் பக்க தொடர்ச்சி)

தீர்க்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகத் தெரிவித்த கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம்ஜயந்த, தேசிய பாடசாலைகளுக்கு 2,500 புதிய ஆசிரியர் நியமனங்களை ஜுலை 03 ஆம் திகதி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## டெங்கு அபாய... (03ஆம் பக்க தொடர்ச்சி)

வேகமாக அதிகரித்துள்ளதாக அப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி இம்மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 900ற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

## நாட்டுக்கு கடத்தவிருந்த... (03ஆம் பக்க தொடர்ச்சி)

உள்ளதாக தமிழக மண்டபம் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.இதனடிப்படையில் (12) மரைக்காயர்பட்டிணம் கடற்கரை ஓரம் உள்ள வீடுகள் மற்றும் மீன் வைக்கும் கம்பெனி உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து அதிரடி சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது வீட்டின் பின்புறத்திலிருந்து 60 மூட்டைகளில் சுமார் 02 தொன் எடை கொண்ட இஞ்சி கைப்பற்றப்பட்டுள்ளது. விசாரணைகளில் இந்த இஞ்சி மூடைகள் கடல்வழியாக இலங்கைக்கு கடத்தப்பட இருந்தமை தெரிய வந்தது.

பறிமுதல் செய்யப்பட்ட இஞ்சியின் இந்திய மதிப்பு சுமார் 3 இலட்சம் இருக்கலாம் என சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து, வீட்டின் உரிமையாளரை கைதுசெய்ய விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## சவால்களை வெற்றிகொள்ள... (03ஆம் பக்க தொடர்ச்சி)

புதிய பொருளாதாரத்தை உருவாக்கத் தேவையான திட்டத்தை செயல்படுத்த வேண்டும். வியட்நாம், தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தியில் நாம் கவனம் செலுத்த வேண்டும். எனவே, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ஜோசப் அலோசியஸி... (03ஆம் பக்க தொடர்ச்சி)

அதேவேளை, குறித்த வெளிநாட்டு பயணத் தடையை தற்காலிகமாக நீக்கியுள்ளமை தொடர்பில் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறும் நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது. நீதிபதிகளான அமல் பெரேரா, கலாநிதி நாமல் பெரேரா பலல்லே மற்றும் ஆதித்ய படபெந்திகே ஆகியோரைக் கொண்ட நீதிபதிகள் குழாமே, இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

## கடத்தப்பட்ட சிறுமி... (03ஆம் பக்க தொடர்ச்சி)

கைதானவரிடம் விசாரணை மேற்கொண்டதில் குறித்த சிறுமி புத்தளயிலுள்ள அவரது மாமாவின் வீட்டில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாக தெரிய வந்தது.

உடனடியாகச் செயற்பட்ட புத்தல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜயதிலக பண்டார தலைமையிலான குழு, மேற்படி வீட்டுக்குச் சென்று பாதாள அறையொன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறுமியை அதிரடியாக மீட்டது.

சிறுமியை ஒளித்து வைப்பதற்காகவே பாதாள அறை கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் தயார் செய்யப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. ஐந்து அடி உயரமும் ஆறு அடி அகலமும் கொண்ட அந்த அறையில், காற்றோட்டத்துக்காக இரண்டு சிறிய துளைகள் மட்டுமே இடப்பட்டிருந்தது. சிறுமியை ஒளித்து வைப்பதற்கு உதவிய வீட்டின் உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபர் இதற்கு முன்னர் கடத்தப்பட்ட சிறுமியின் மூத்த சகோதரியுடன் காதல் தொடர்பு வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பல சந்தர்ப்பங்களில் அந்த யுவதியை தன்னுடன் வெளியில் வருமாறு அவ்விளைஞர் வலியுறுத்தியும் மூத்த சகோதரி அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். அவரது உறவை நிறுத்திவிட்டு கடத்தப்பட்ட 14 வயது சிறுமியுடன் இவர் காதல் உறவை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முன்னாள் MP...

வீதியிலுள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக் கிரியை நாளை சனிக்கிழமை (15) பிலியந்தலை, தும்போவில மயானத்தில் நடைபெறவுள்ளது.

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
# பல்கலைக்கழக அனுமதி — கல்வியாண்டு 2023/2024

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிகோரும் பொருட்டு 2023 கல்வியாண்டில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆகக்குறைந்த தேவைகளைத் திருப்தி செய்துள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும். பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தேவைகளை யார் திருப்திகரமாக பூர்த்தி செய்துள்ளார்கள் என்பது பற்றி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி ஊடாக விண்ணப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பது மாணவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

**பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தகைமைகள்**

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானோர் என அறிவிக்கப்பட்டுள்ள, பரீட்சார்த்திகள் பெற்றிருக்க வேண்டியவை.

(அ) அங்கீகரிக்கப்பட்ட சகல மூன்று பாடங்களிலும் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்திகளை ஆகக் கூடியது 3 அமர்வுகளுள் பெற்றிருத்தல்.

(ஆ) பொது சாதாரண வினாத்தாளில் ஆகக்குறைந்தது 30% புள்ளிகள் பெற்றிருத்தல்.

**குறிப்பு 1:** பொது சாதாரண வினாத்தாளில் ஆகக்குறைந்தது 30% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரிகள் Z புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவாயினும் நடப்பு வருட கல்வியாண்டில் பல்கலைக்கழக கற்கைநெறிக்கு பதிவுசெய்வதற்கு தகுதியற்றவர்களாவர்.
அவ்வாறான ஒரு விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட தேவையை முந்திய தடவையில் அதாவது க.பொ.த. (உ/த) பரீட்சையின் அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் ஆகக்குறைந்தது 30% புள்ளிகளைப் பெற்று பூர்த்தி செய்திருப்பின், அவ்விண்ணப்பதாரி தற்போது தெரிவாகியிருக்கும் கற்கைநெறியினை உரிய பல்கலைக்கழகத்தில் தொடர்வதற்காக பதிவு செய்வதற்குத் தகுதி பெறுவர்.

ஏற்கனவே அனுமதிக்குத் தெரிவாகி பொது சாதாரண வினாத்தாளில் ஆகக்குறைந்தது 30% புள்ளிகளையேனும் பெற்றுக்கொள்ளாத மாணவரொருவர் அடுத்துவரும் பல்கலைக்கழக அனுமதிக்காக அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் பொது சாதாரண வினாத்தாள் பரீட்சையில் தோற்றி குறிப்பிட்ட தேவையைப் பூர்த்தி செய்தால் மட்டுமே z புள்ளிகளின் அடிப்படையில் ஏற்கனவே தெரிவாகியிருக்கும் கற்கைநெறியினை எதிர்வரும் கல்வியாண்டொன்றில் குறித்த பல்கலைக்கழகத்தில் தொடர்வதன் பொருட்டு பதிவுசெய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

**2023/ 2024ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி கையேட்டினை பெற்றுக்கொள்ளும் முறை**

2023/2024ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலொன்றை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு இணையவழி ஊடாக 1000.00 ரூபாவைச் செலுத்தி, பல்கலைக்கழக அனுமதிக் கைநூலொன்றின் மென் பிரதியொன்றை **www.ugc.ac.lk** எனும் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**இணையவழி மூலம் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் முறை**

பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி மூலம் www.ugc.ac.lk எனும் பல்கலைக்கழக ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாக விண்ணப்பித்தல் கட்டாயமாகும்.

**குறிப்பு 2 :** விண்ணப்ப நடைமுறை தொடர்பான வழிகாட்டல்களுக்கு 2023/2024ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 4ஆம் பகுதியை வாசிக்குமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**குறிப்பு 3 :** இணையவழியாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் 2023/2024ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 5ஆம் பகுதியில் தரப்பட்டுள்ளது.

**குறிப்பு 4 :** இணையதள வசதியற்ற விண்ணப்பதாரிகள், நாடெங்கிலுமுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்கள் (OUSL R&Sc), கல்வியமைச்சின் கீழுள்ள தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக்கல்வி நிலையங்களுக்கு (ITDLH) அவர்களது அலுவலக நேரங்களில் சென்று எதுவித கட்டணமுமின்றி (இலவசமாக) பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி மூலமாக விண்ணப்பிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான வசதிகள் செய்யப்பட்டுள்ள நிலையங்கள் பற்றிய விபரம் 2023/2024ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் 5ஆம் பகுதியின் இறுதியில் தரப்பட்டுள்ளது.

**குறிப்பு 5 :** பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க செல்லுபடியான தேசிய அடையாள அட்டையினை விண்ணப்பதாரிகள் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

**குறிப்பு 6 :** பல்கலைக்கழக அனுமதிக்கு இணையவழி விண்ணப்பத்தை நிரப்புவதில் சிரமங்கள் ஏதும் ஏற்படின் அரச தகவல் நிலையத்தினை (1919) அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தகவல் நிலையத்தின் 011-2695301, 011-2695302 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பங்களை கோருவதற்கான ஆரம்பத் திகதி**

2023/2024 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான இணையவழி விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு 2024-06-14ஆம் திகதி முதல் விண்ணப்பதாரிகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி**

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2024-07-05ஆம் திகதி ஆகும்.

2024-07-05ஆம் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் அறிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்து, இணையவழி மூலமாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்ததன் பின் பெறப்படும் இணையவழி விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியை பிரதிச் செயலாளர் (பல்கலைக்கழக அனுமதிகள்). பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வோர்ட் பிளேஸ், கொழும்பு-07. என்று முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இதற்காக நீங்கள் **A4** அளவான கடிதவுறையை மட்டும் பயன்படுத்துதல் வேண்டும்.

அச்சிடப்பட்ட இணையவழி விண்ணப்பம் பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்பப்படல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வருகைதந்து விண்ணப்பத்தை நேரில் கையளிக்க முடியாது.

**பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியின்மை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் உள்வாரி மாணவர்களாக அனுமதிக்கு 2023/2024ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் 1.7ஆம் பிரிவிற்கமைய பின்வரும் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் தகுதியற்றோராவார்.

1. க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு மூன்றுக்கு (3) மேற்பட்ட அமர்வுகளில் தோற்றிய மாணவர்கள்.
2. 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க (திருத்தப்பட்ட) பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில்/உயர் கல்வி நிறுவனத்தில் கற்கைநெறியொன்றிற்கு உள்வாரி மாணவர்களாகப் பதிவுசெய்த/ பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

   (இப் பந்திக்கு இயைபான பல்கலைக்கழகங்களினதும் உயர் கல்வி நிறுவனங்களினதும் பெயர்கள் 2023/ 2024ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 1.6(8) மற்றும் 1.6(10) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன)
3. 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க (திருத்தப்பட்ட) பல்கலைக்கழகங்கள் சட்டம் அல்லாத ஏனைய பாராளுமன்ற சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் அல்லது ஏனைய உயர்கல்வி நிறுவனமொன்றில் முதல் பட்டக்கல்வி நெறிகளுக்காக இலவச கல்வி முறையின் கீழ் உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

   **அவையாவன:**

   i. இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்
   ii. இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்
   iii. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (As Enlisted Officer Cadets)
   iv. வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்
   v. இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் (2017 ஆண்டிலும் அதன் பின்னரும் பதிவு செய்த மாணவர்கள்)
4. கல்வியியற் கல்லூரி (College of Education) ஒன்றில் கற்கைநெறியொன்றினை தொடர்வதற்காக உள்வாரி மாணவர்களாக பதிவு செய்த / பதிவு செய்திருக்கின்ற மாணவர்கள்.
5. வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கீழ் வருகின்ற பல்கலைக்கழக கல்லூரிகளில் (University College) மூன்று (03) வருட டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு இலவச கல்வி முறையின் கீழ் உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்த/ பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.
6. பின்வரும் “முக்கியம்” என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக பின்வரும் நிறுவனங்களில் 03 வருடங்கள் அல்லது அதற்கதிகமான காலப்பகுதியின் கீழ் காட்டப்பட்டிருக்கும் கற்கைநெறியொன்றைப் பயில்வதற்கு முழுநேர மாணவர்களாக பதிவுசெய்த / பதிவுசெய்திருக்கின்ற மாணவர்கள்.

   (அ) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (HND)

   (ஆ) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கீழ் வரும் இயந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தில் (IET), இயந்திரவியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES)

   **முக்கியம் :**

   எவ்வாறாயினும், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (HND) அல்லது / அத்துடன் தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கீழ் வருகின்ற பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (IET) பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES) ஆகிய மூன்று வருட காலம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தினைக் கொண்ட முழுநேர கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்த மாணவரொருவர் தமக்கு இந்நிறுவனங்களில் பதிவுசெய்வதற்கு வழங்கப்பட்ட இறுதித்தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் தனது பதிவினை இரத்துச் செய்தால் மாத்திரம் அதற்குப் பிந்திய ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 1978ஆம் ஆண்டின் 16ம் இலக்க (திருத்தப்பட்ட) பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனமொன்றில் கற்கைநெறி ஒன்றைப் பின்பற்றுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகைமையைப் பெற்றுக்கொள்ளலாம்.

   மேற்கூறிய 6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிறுவனமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள கற்கைநெறியொன்றிற்குப் பதிவுசெய்த மாணவரொருவர், பதிவுசெய்வதற்கு கொடுக்கப்பட்ட இறுதித்திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் தனது பதிவை இரத்துச் செய்யாவிட்டால், அவர் மேற்கூறிய 6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரிவிற்குள் வருவதுடன் அதற்குப் பிந்திய ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் கீழ் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கற்கைநெறியொன்றைப் பின்பற்றுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவராவார்.

   ஆயினும், மேலே குறிப்பிட்ட இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனமொன்றில் உயர் தேசிய டிப்ளோமா (HND) அல்லது தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கீழ் வருகின்ற பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (IET) பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES) ஆகிய கற்கைநெறிகளுக்கு வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கூறிய 6ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 60 நாட்களுக்குள் பதிவினை இரத்துச் செய்து பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான சலுகை வழங்கப்பட மாட்டாது.

**குறிப்பு 7 :** மேற்கூறிய 6ஆம் பந்தியில் குறிப்பிட்ட ஓர் கற்கைநெறிக்கு பதிவுசெய்வதற்காக கொடுக்கப்பட்ட இறுதித் திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் நிறுவகமொன்றிலிருந்து பதிவை இரத்துச் செய்த மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பதுடன் குறித்த நிறுவனத்தில் பதிவை இரத்துச் செய்தமை தொடர்பான கடிதத்தின் பிரதியையும் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

7. ஆரம்ப பட்டக் கற்கைநெறியொன்றைக் கற்பதற்கு உயர் கல்வி அமைச்சினூடாக வழங்கப்பட்ட வெளிநாட்டுப் புலமைப் பரிசிலொன்றை ஏற்றுக்கொண்ட மாணவர்கள்.
8. மேலே 2,3,4,5,6 மற்றும் 7ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புகளிலிருந்து ஆரம்பப் பட்டமொன்றை அல்லது அதற்குச் சமமான தகைமையொன்றைப் பெற்றுக்கொண்ட மாணவர்.
9. தற்போதைய கல்வியாண்டில் அல்லது முன்னைய கல்வியாண்டு ஒன்றில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது தவறான பிரகடனங்களைச் செய்த மாணவர்கள் / மற்றும் போலியான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் மாணவர்கள்.

**குறிப்பு 8 :** பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட முன்னர் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய் / தவறானவை எனக் கண்டறியப்பட்டால் அக்கல்வி ஆண்டிற்காக அவரின் தேர்வு மற்றும் அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படுவதுடன் எந்தவொரு எதிர்கால கல்வியாண்டிலும் மீண்டும் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

மேலும், பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டதன் பின் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய் / தவறானவை என எவ்விதத்திலாவது கண்டுபிடிக்கப்பட்டால் அம்மாணவரை பல்கலைக்கழகத்தில் / உயர்கல்வி நிறுவனத்திலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கருத்திற் கொள்ளவும்.

**இதர முக்கிய தகவல்கள்**

(அ) விண்ணப்பத்தில் கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான விருப்பொழுங்கைக் குறிப்பிடுதல்

2023/2024ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற 16 தேசிய பல்கலைக்கழகங்களினாலும், 2 வளாகங்களினாலும் 2 உயர்கல்வி நிறுவனங்களினாலும் 125 பல்வேறு கற்கைநெறிகள் நடாத்தப்படும்.

குறித்தவொரு பல்கலைக்கழகத்தினால் / வளாகத்தினால் / நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்கைநெறி ஒவ்வொன்றிற்கும் தனியானதொரு குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் குறியீடுகள் “யுனி கோட்” (Uni-Code) என அழைக்கப்படும். மொத்தமாக 257 “யுனி கோட்” (Uni-Code) உள்ளன. “Uni-Codes”களின் பட்டியல் 2023/ 2024ஆம் கல்வியாண்டிற்கான கையேட்டின் 141 - 147ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

மாணவர்கள் தாம் தகுதி பெற்றுள்ள எவ்வளவு எண்ணிக்கையான யுனி-கோட்களுக்கும் (அதாவது பல்கலைக்கழகங்கள் மற்றும் கற்கைநெறிகள்) விண்ணப்பிக்கலாம். மாணவர்கள் சகல 257 “Uni-Codes” களுக்கும் விண்ணப்பிப்பதற்கு தகுதிபெறமாட்டார். விண்ணப்பதாரியினது யுனி-கோட் (Uni-Code) தெரிவுகள் அவர் க.பொ.த.(உ/த) பரீட்சையில் தோற்றிய பாடங்களின் அடிப்படையில் அமையும். ஆயினும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தில் ஆகக்கூடுதலாக 125 தெரிவுகள் வரை குறிப்பிடலாம்.

அவர்கள் தங்கள் “Uni-Code” களை அதிகூடிய விருப்பு யுனி-கோட்டிலிருந்து அதிகுறைந்த விருப்பு யுனி-கோட் வரை ஒழுங்குபடுத்தல் வேண்டும். ஒழுங்குபடுத்தலானது, மாணவனது மனதில், யுனி-கோட்களில் உள்ள ஆர்வம் குறைந்து செல்லும் வரிசையைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டும். மாணவர்கள் தமது விருப்பொழுங்கில் ஒரே யுனி-கோட்டை (Uni-Code) ஒரு தடவைக்கு மேல் பதிய அனுமதிக்கப்பட மாட்டார்.

அனுமதிக்கான தெரிவின் போது கற்கும் கற்கைநெறியும் பல்கலைக்கழகமும் ஒன்றாகவே கருத்திற்கொள்ளப்படும்.

மாணவர்கள் தங்களது விண்ணப்பத்தைக் குறிப்பிடும் போது தாம் தகுதிபெறுகின்ற ஆகக் கூடிய எண்ணிக்கையான யுனி-கோட்களைக் குறிக்குமாறு திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர். விண்ணப்பதாரிகள் தாம் விருப்புரிமை வழங்கிய கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு மாத்திரமே கருத்திற் கொள்ளப்படுவர். எந்தவொரு விண்ணப்பதாரரும் அவர் வேண்டிக்கொள்ளாத (விண்ணப்பிக்காத) யுனி-கோடொன்றுக்கு (Uni-Code) அனுமதிக்கப்படமாட்டார். இதன்படி, குறித்தவொரு பல்கலைக்கழகத்தின் குறித்தவொரு கற்கைநெறிக்கு அனுமதி பெறப் போதுமான z-புள்ளியை விண்ணப்பதாரியொருவர் பெற்றிருப்பினும், அவ்விண்ணப்பதாரி அதற்குரிய யுனி-கோட்டைத் தனது விண்ணப்பத்தில் கோரியிராதவிடத்து, அந்த யுனி-கோட் (Uni-Code) (அதாவது அதற்குரிய பல்கலைக்கழகமும் கற்கைநெறியும்) அவ்விண்ணப்பதாரிக்கு வழங்கப்படமாட்டாது என்பதுடன் அதற்குப் பதிலாக அவர் தனது விருப்பொழுங்கில் அடுத்த தெரிவாகக் குறிப்பிட்டுள்ள கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் (“Uni-Code”) அனுமதிக்கப்படுவது பற்றியே கவனத்திற் கொள்ளப்படுவார்.

**குறிப்பு 9 :** “யுனி-கோட்”களை பயன்படுத்தி விருப்பொழுங்கைக் குறிப்பிடுவது தொடர்பான வழிகாட்டல்களுக்கு 2023/2024ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 3ஆம் பகுதியை வாசிக்குமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**குறிப்பு 10 :** தெரிவு செய்யப்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு (**Uni-Code**) மாணவர் ஒருவர் பதிவு செய்யாது விடின், எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் அதே கற்கைநெறியை வேறு பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கு மாணவரது விண்ணப்பப்படிவத்தில் அவற்றிற்கு உயர் தெரிவு வழங்கப்பட்டிருப்பினும் அனுமதிக்கு கருத்திற் கொள்ளப்பட மாட்டார். பதிலாக, அவர்களது விண்ணப்பத்தில் அடுத்த விருப்பொழுங்கிலுள்ள கற்கைநெறியிற்கு அவர்கள் கருத்திற் கொள்ளப்படுவர்.

2023/2024ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 115-116ஆம் பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள “முக்கியம்” எனும் பகுதியை வாசிப்பதன் மூலம் மாணவர்கள் இது தொடர்பிலான மேலதிக விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்பு - 11**

“யுனி-கோட்களின்” வரிசையை இணையவழி மூலம் மாற்றுவதற்கு, 2023/2024ஆம் கல்வியாண்டு அனுமதிக்கான கைநூலின் 3.3 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கொடுக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குப் பதிலாக விண்ணப்பதாரர்களுக்கு **பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதியிலிருந்து இரண்டு (02) வார காலம் மட்டுமே** வழங்கப்படும் என இத்தால் மாணவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதியிலிருந்து இரண்டு (02) வார காலத்தினுள் விண்ணப்பதாரர்களின் புதிய கற்கைநெறி ஒழுங்கை முறையாக கையொப்பமிடப்பட்ட மற்றும் திகதியிடப்பட்ட அச்சிடப்பட்ட நகலை பிரதிச் செயலாளர் / பல்கலைக்கழக அனுமதி, பல்கலைக்கழக மானியங்களை அடைய பதிவு செய்யப்பட்ட பதவி ஆணைக்குழு, இல. 20, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07 எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
இது தொடர்பில் தேவையான ஏனைய விவரங்களுக்கு விண்ணப்பதாரர்கள் 2023/2024ஆம் கல்வியாண்டு அனுமதிக்கான கைநூலின் 3.3 பிரிவை வாசிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆ) **செயன்முறை / உளச்சார்பு பரீட்சையில் சித்தி பெறுவதற்கான தேவைப்பாடு**

கீழே பட்டியலிடப்பட்டுள்ள கற்கைநெறிகளுக்கு அனுமதி பெறுதல் தொடர்பாக பரிசீலிக்கப்பட விரும்பும் பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தினால்/ உயர்கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் செயன்முறை /உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைய வேண்டும். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனம் செயன்முறை / உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும் என்பதுடன் செயன்முறை / உளச்சார்புப் பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்களை மாணவர்கள் நேரடியாகவே உரிய பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளருடன் அல்லது நிறுவனத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் / உயர்கல்வி நிறுவனங்களின் தொலைபேசித் தொடர்பு இலக்கங்கள் பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 196ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், குறித்த கற்கைநெறிக்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு செயன்முறை / உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைவதற்கு மேலதிகமாக உரிய கற்கைநெறியின் வெட்டுப் புள்ளித் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்திருப்பதும் கட்டாயமாகும்.

| கற்கைநெறி | பல்கலைக்கழகம்/வளாகம்/ நிறுவகம் | Uni Code |
|---|---|---|
| கலை (SP) - வெகுசன ஊடகம் | கொழும்புப் பல்கலைக்கழகம் (ஸ்ரீ பாளி வளாகம்) | 020S |
| கலை (SP) - அரங்கேற்றல் கலை | கொழும்புப் பல்கலைக்கழகம் (ஸ்ரீ பாளி வளாகம்) | 041S |
| கட்டடக்கலை | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 023G |
| வடிவமைப்பு | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 024G |
| நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 034G |
| இசை | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 068C |
| இசை | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 068E |
| இசை | சுவாமி விபுலானந்தர் அழகியற் கல்வி நிறுவனம் | 068Y |
| இசை | கட்புல, அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 068Z |
| நடனம் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 069E |
| நடனம் | சுவாமி விபுலானந்தர் அழகியற் கல்வி நிறுவனம் | 069Y |
| நடனம் | கட்புல, அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 069Z |
| சித்திரமும் வடிவமைப்பும் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 070E |
| நாடகமும் அரங்கமும் | சுவாமி விபுலானந்தர் அழகியற் கல்வி நிறுவனம் | 071Y |
| நாடகமும் அரங்கமும் | கட்புல, அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 071Z |
| கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் | சுவாமி விபுலானந்தர் அழகியற் கல்வி நிறுவனம் | 072Y |
| உடற்றொழில் கல்வி | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 081E |
| உடற்றொழில் கல்வி | இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகம் | 081L |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 082C |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | களனிப் பல்கலைக்கழகம் | 082D |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகம் | 082L |
| நிலத்தோற்றக் கட்டிடக்கலை | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 097G |
| சினிமா தொலைக்காட்சி பற்றிய கற்கைகள் | களனிப் பல்கலைக்கழகம் | 100D |

(இ) **தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் கற்கைநெறிக்கான பதிவினை மேற்கொள்ளல்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2023/2024ஆம் கல்வி ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த z - பெறுபேறுகள் (வெட்டுப்புள்ளிகள்) வெளியிடப்பட்ட பின், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகம் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படும். பல்கலைக்கழக அனுமதிக் கைநூலின் 1.6(5), 1.6(6), மற்றும் 4.1ஆம் பந்திகளுக்கமைய, மாணவர் தரப்பட்ட வாய்ப்பை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யின், வங்கியில் அல்லது இணையவழி ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்கிற்கு பதிவுக் கட்டணமாக 50/- ரூபாவை வரவு வைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பதிவுசெய்வதற்கு வழங்கப்பட்ட இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் தாம் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு பதிவுசெய்தல் வேண்டும்.

மேலும் இணையத்தினூடாக பதிவு செய்யும் போது வங்கி மூலமாக கட்டணம் செலுத்தப்படின் ஸ்கேன் செய்யப்பட்ட கட்டணப் பற்றுச்சீட்டு பதிவேற்றப்பட்டு (Upload) உறுதி செய்துகொள்வதன் பொருட்டு இணையத்தினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இணையதளத்தில் பதிவு செய்த பின்னர், அச்சுப்பிரதி செய்யப்பட்டு சரியான முறையில் ஒப்பமிடப்பட்ட இணையதள பதிவுப் படிவத்துடன் (Online Payment Receipt) வங்கியில் செலுத்தியிருப்பின் தேவையான கொடுப்பனவை செலுத்தியமைக்கான அத்தாட்சி பத்திரத்தையும் [Paying-in-Voucher] இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**குறிப்பு 12 :** தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறி, பல்கலைக்கழகத்திற்கு இணையவழி ஊடாக பதிவுசெய்தலும் 2023/2024ஆம் கல்வியாண்டிற்குக் கட்டாய தேவையாகும் என்பதை கருத்தில் கொள்க.

**குறிப்பு 13 :** தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு இணையத்தினூடாக பதிவு செய்து முடிக்கும் போது மாணவர்கள் பகிடிவதையிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான பகிடிவதை எதிர்ப்பு பிரகடனம் ஒன்றினைத் தரவிறக்கி அதனை (இருபுறமும்) A4 அளவிலான தாளில் அச்சிட வேண்டும். பதிவு செய்யும் போது முறையாக கையொப்பமிடப்பட்ட பிரகடனத்தினை பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். தயவுசெய்து இந்தப் பிரகடனத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு தபால் மூலம் அனுப்ப வேண்டாம்.

**தலைவர்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,**
**இல. 20, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07.**
2024-06-14.

# இந்தியாவில் கரையொதுங்கிய இரு மீனவர்களையும் அழைத்துவர ஏற்பாடு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தகவல்

**பருத்தித்துறை விசேட நிருபர்**

தமிழகத்தில் கரையொதுங்கிய யாழ். அனலைதீவு கடற்றொழிலாளர்கள் இருவரை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அனலைதீவு கடற்பரப்பில் இருந்து கடந்த 10ஆம் திகதி மாலை 5.00 மணியளவில் கடற்றொழிலுக்கு சென்ற இந்த இரு கடற்றொழிலாளர்களும் கரைதிரும்பாத காரணத்தினால் பதற்றம் ஏற்பட்டிருந்ததுடன், அனலைதீவு கடற்பரப்பெங்கும் கடற்படையினர் மற்றும் கடற்றொழிலாளர்களால் தீவிர தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்து வந்தனர். இந்நிலையில் தேடப்பட்டு வந்த இவர்கள் இருவரும் தமிழக கடற்பரப்பில் கரையொதுங்கியதாக தகவல் கிடைக்கப்பெற்றது.



இந்நிலையில் இந்த கடற்றொழிலாளர்கள் இருவரதும் குடும்பத்தினர், நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினர். இந்த கடற்றொழிலாளர்கள் இருவரையும் இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுத்து தருமாறு அமைச்சரிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை அடுத்து கடற்றொழில் அமைச்சரினால் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அனலைதீவில் இருந்து கடற்றொழிலுக்கு சென்று காணாமல் போன கடற்றொழிலாளர்கள் இருவரும் இந்தியாவில் கரையொதுங்கியுள்ளனர்.

அனலைதீவை சேர்ந்த திருச்செல்வம் மைக்கல் பெர்னாண்டோ, நாகலிங்கம் விஜயகுமார் என்ற இருவருமே கடற்றொழிலுக்கு சென்று காணாமல் போயிருந்தனர்.

இவர்களின் படகு இயந்திரம் பழுதாகி தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் பகுதியில் கரையொதுங்கியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# வடக்கின் உதயம்

## குளவி கொட்டியதில் மூன்று பேர் பாதிப்பு

**தலைமன்னார் விசேட நிருபர்**

மன்னார் பாப்பாமோட்டை பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை குளவிக் கொட்டுக்கு உள்ளாகியுள்ளனர். இந்நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இவர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தாம் யாழ்ப்பாணம் சென்று விட்டு சம்பவ தினத்தன்று தமது வீடு திரும்பியதாகவும் வீட்டு முற்றத்தில் தமது உறவினர்களுடன் தாம் உரையாடிக் கொண்டிருந்த வேளையில் முதலில் தனது 10 வயது மகன் குளவிக் கொட்டுக்கு உள்ளாகியுள்ளார்.

அப்பொழுது பெருந்தொகையான குளவிகள் சூழ்ந்து வருவதை கண்டதும் தனது மகன் அவ்விடத்தை விட்டுச் சென்று குளத்தினுள் பாய்ந்து தலை மட்டும் தண்ணீருக்கு மேலே இருக்க குளத்தினுள் மூழ்கியிருந்துள்ளார். இந்நிலையில் தான் மகனை காப்பாற்ற முயன்றுள்ளதாகவும் அந்நேரத்தில் தங்களை பார்க்க வந்த தனது மனைவி, மகன், தானும் குளவிக் கொட்டுக்கு உள்ளாகியுள்ளதாக குளவிக் கொட்டுக்கு உள்ளான குடும்பஸ்தர் தெரிவித்துள்ளார்.

குளவிக் கொட்டுக்கு உள்ளான தாம் அடம்பன் வைத்தியசாலைக்கு சென்ற போது அங்கிருந்து தாம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இங்குள்ள ஒரு ஆல மரத்தில் நீண்டகாலமாக குளவிக் கூடு இருப்பதுடன், அடிக்கடி பலர் குளவிக் கொட்டுக்கு உள்ளாகுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊடகவியலாளர் வீட்டில் வன்முறை சம்பவம்

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், அச்சுவேலியில் ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்குள் இனந்தெரியாத நபர்கள் புகுந்து உடைமைகளுக்கு தீ வைத்துச் சென்றுள்ளனர். நேற்று வியாழக்கிழமை அதிகாலை 12.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட வன்முறை கும்பலே வன்முறையில் ஈடுபட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது வீட்டுக்கு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துகள் ஆயுதங்களால் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டதுடன், தீ வைத்தும் எரிக்கப்பட்டுள்ளது.

"திருநங்கைளின் உணர்வுகளை தவறாக சித்தரிக்காதே" என அச்சடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள வீட்டில் போடப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கான காரணம் தெரியவராத நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# அளம்பில் அந்தோனியார் தேவாலய திருவிழா





**புதுக்குடியிருப்பு விசேோட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட அளம்பில் அந்தோனியார் தேவாலய திருவிழா நேற்று வியாழக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. அளம்பில் அந்தோனியார் தேவாலயத்தில் வெஸ்பர்ஸ் ஆராதனை நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை நடைபெற்றது. இந்நிலையில் திருவிழா திருப்பலியானது அருட்பணி டேவிட் அடிகளார் தலைமையில் நடைபெற்று, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழாவானது மறைக்கோட்ட குருக்கள், அருட் தந்தையர்கள் பங்கு தந்தையர்கள், அருட் சகோதரிகள் உள்ளிட்டவர்களின் பங்குபற்றலுடன் சிறப்பாக நடைபெற்றதுடன், அரசாங்கத் திணைக்கள அதிகாரிகளும் திருவிழாவில் பங்கெடுத்துள்ளார்கள்.

திருவிழா திருப்பலி நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

# மானிப்பாயில் கிரிக்கெட் துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

**பருத்தித்துறை விசேட நிருபர்**

"இந்து சகோதரர்களின் சமர் "எனும் தொனிப்பொருளின் கீழ் மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் துடுப்பாட்ட சுற்றுப்போட்டி இன்றும் (14), நாளையும் (15) மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் யாழ். ஊடக அமையத்தில் துடுப்பாட்ட சமர் குறித்து ஊடகங்களுக்கு அறிமுக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் சர்வேஸ்வரன் தெரிவிக்கையில்,

"மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு இடையில் பெரும் சமர் ஒன்றினை ஆரம்பிக்கிறோம். இரு கல்லூரிகளுக்கு இடையிலான துடுப்பாட்ட மோதல் என்பது ஒரு வரலாற்று நிகழ்வு முதல் தடவையாக இடம்பெறுகின்றது" என்றார்.




இதேவேளை மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் இளங்கோ தெரிவிக்கையில்,

"எமது மாணவர்களின் கிரிக்கெட் திறனை வளர்க்கும் முகமாக இந்த சமரினை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். பிக் மச்சினூடாக மாணவர்களின் திறன் இன்னும் வளர்ச்சியடையும். இவ் வருடம் முதல் இரண்டு பாடசாலைகளிலும் இந்த சமர் இடம்பெறும். இந்த போட்டி முதன் முறையாக நாளை காலை 9.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகி, நாளை மறுதினம் 90 ஓவர்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டி இடம்பெற்று, தொடர்ச்சியாக 16ஆம் திகதி பழைய மாணவர்களுக்கு இடையில் ஒருநாள் சுற்றுப்போட்டி இடம்பெறவுள்ளது" என்றார்.

# டெங்கு நுளம்புகள் பெருகும் சூழல்; மூவருக்கு நீதிமன்றம் அபராதம்

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்தமை தொடர்பில் மூவருக்கு எதிராக நீதிமன்றத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் தொடரப்பட்ட வழக்கில் 4 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். இணுவில் மற்றும் தாவடிப் பகுதிகளில் கடந்த 8ஆம் திகதி இணுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் டெங்கு சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது டெங்கு நுளம்புக் குடம்பிகள் அதிகளவில் இருந்த இடங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கண்டறியப்பட்டதுடன், நுளம்புகள் பரவும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்த மூவருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் அவர்களால் செய்யப்பட்டது.

இந்நிலையில் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இவர்கள் மூவரும் தங்கள் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர்.



இதனை அடுத்து இந்த மூவரையும் எச்சரித்த மல்லாகம் நீதவான் நீதிமன்றம், இவர்கள் மூவர் மீதும் 4 ஆயிரத்து 500 ரூபாவை அபராதமாக விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பசு வதையை தடுத்த

# சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு பாராட்டு



**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ். தென்மராட்சியில் மட்டுவில் பிரதேசத்திலிருந்து துன்னாலை பிரதேசத்துக்கு கடத்திக்கொண்டு செல்லப்பட்ட பசுக்களை உயிருடன் மீட்டு எடுத்த சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவை நேற்று வியாழக்கிழமை சிவசேனை அமைப்பினர் பாராட்டி கௌரவித்துள்ளனர்.

அண்மையில் தென்மராட்சியின் மட்டுவில் பிரதேசத்திலிருந்து சில பசுக்களை சட்டவிரோத கும்பல் கடத்திக்கொண்டு சென்றிருந்தது. இந்நிலையில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து விரைந்து செயற்பட்ட சாவகச்சேரி பொலிஸார், துன்னாலை காட்டுப்பகுதியில் வைத்து இறைச்சிக்கு வெட்டப்படவிருந்த பசுக்களை மீட்டதுடன், இதன் பிரதான சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்திருந்தனர். இதன்போது சட்டவிரோத மாடறுக்கும் மடுவத்தையும் அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர். இந்நிலையில் பசு வதையை தடுத்த சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை சிவசேனை அமைப்பினர் நேரடியாக தேடிச் சென்று பாராட்டி கௌரவித்துள்ளனர். இந்த பாராட்டும் நிகழ்வில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தமும் கலந்துகொண்டார்.

## இலுப்பைக்கடவை

# விவசாயிகளுக்கு காணி ஆவணம் வழங்க கோரிக்கை

**மன்னார் குறூப், தலைமன்னார் விசேட நிருபர்கள்**

மன்னாரின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக்கடவை சோழமண்டல குளத்தின் கீழ் கடந்த 30 ஆண்டுகளாக காணி வசதியற்ற நூறு ஏழை விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு இதுவரை காணிக்குரிய ஆவணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. எனவே இந்த விவசாயிகளுக்கு காணி வழங்குவதாக உறுதியளிக்குமாறு ஜனாதிபதியிடம் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

# அடையாள வளைவு வேலை; யாழ். கோவில் வீதி மூடல்

**யாழ். விசேட நிருபர்**

யாழ். கோவில் வீதி எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 3ஆம் திகதி வரை மூடப்பட்டு இருக்கும் என யாழ். மாநகர ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் அறிவித்துள்ளார்.

கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில் இல. 331, கோவில் வீதி நல்லூர் எனும் இடத்தில் நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக்கூடல் அமைப்பின் அடையாள வளைவு அமைத்தல் வேலை முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த வீதியினை பயன்படுத்துவோர் போக்குவரத்தினை சிரமமின்றி மேற்கொள்ள மாற்றுப் பாதையினை பயன்படுத்துமாறும் பயணிகளை ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# வடமராட்சியில் 135Kg கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு பகுதியில் 135 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.



வடமராட்சியின் கிழக்கு தாளையடி பகுதியில் பெருமளவான கஞ்சா போதைப்பொருள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கடற்படை புலனாய்வு பிரிவினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த கடற்படையினர் கஞ்சா பொதிகளை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சா போதைப் பொருள் 135 கிலோ எனவும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக அவற்றினை மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# தேயிலை சாய நிறத்தில் மதுபானம்; பொலிஸ் விசாரணை முன்னெடுப்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ். நெடுந்தீவு பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட மதுபானம், தேயிலை சாய நிறத்தில் மாறியது தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பகுதியில் அளவுக்கு அதிகமான மதுபான போத்தல்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் நெடுந்தீவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, அவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதன்போது நெடுந்தீவு பொலிஸாரினால் சந்தேக நபரிடம் இருந்து மீட்கப்பட்ட மதுபான போத்தல்கள் சீல் வைக்கப்பட்டு, சான்றுப் பொருட்களாக நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது தன் மீதான குற்றச்சாட்டினை சந்தேக நபர் ஏற்றுக் கொண்டதை அடுத்து அவருக்கு நீதிமன்று அபராதம் விதித்துள்ளது.

இந்நிலையில் சான்றுப் பொருளாக நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்ட மதுபான போத்தல்களில் 10 போத்தல்களை மீள அந்நபரிடம் ஒப்படைக்கப்பட்ட போது, அவற்றில் சில போத்தல்களில் இருந்த மதுபானம் நிறம் மாறி இருந்ததுடன், அடியில் மண்டி படிந்த மாதிரி காணப்பட்டுள்ளது.

அதனை அடுத்து அது தொடர்பில் நீதிமன்ற பதிவாளரிடம் முறையிடப்பட்டுள்ளது. பதிவாளர் எழுத்து மூல முறைப்பாட்டினை பெற்று, நீதவானின் கவனத்திற்கு கொண்டு சென்றார். இதன் பின்னர் து , நீதவானின் உத்தரவில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# புனித ஹஜ் யாத்திரை செல்வதற்கு 20 இலங்கையருக்கு இம்முறை வாய்ப்புக் கிடைத்தமை பெரும் பாக்கியம்

இம்முறை புனித ஹஜ் யாத்திரை மேற்கொள்வதற்காக சவூதி மன்னர் சல்மானின் விசேட விருந்தினர்களாக இலங்கையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 20 ஹஜ் யாத்திரிகர்களை கௌரவித்து வழியனுப்பி வைக்கின்ற விசேட வைபவம் கொழும்பிலுள்ள சவூதி அரேபிய உயர்ஸ்தானிகராலயத்தில் உயர்ஸ்தானிகர் காலித் பின் ஹமூத்அல் கஹ்தானி தலைமையில் சமீபத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புதுடில்லியில் உள்ள சவூதி அரேபியாவின் அரச தூதரகத்தின் மத விவகார இணைப்பாளர் அஷ்ஷெய்க் பத்ர் பின் நாசர் அல் அனாசி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதில் ஹஜ் கிரியை மேற்கொள்ள உள்ள மன்னரின் விசேட விருந்தாளிகளுக்கான வரவேற்பு வைபவம் காலை 9.15 மணிக்கு உத்தியோகபூர்வமாக குறித்த நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. விசேட விருந்தினர்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு வருகை தந்த உயர்ஸ்தானிகர் ஒவ்வொருவராகச் சந்தித்து கைகொடுத்து சலாம் கொடுத்தார். அதன் பின்னர்ஒவ்வொருவர்பற்றிய அறிமுகம் இடம்பெற்றது. பிரதம விருந்தினரும். உயர்ஸ்தானிகரும் இணைந்து ஒவ்வொருவரையும் பாராட்டி நல்லாசி வழங்கியதுடன் விசா, பரிசுப் பொதிகள் வழங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் ஹஜ் கிரியை மேற்கொள்ளவுள்ள தெரிவு செய்யப்பட்ட இஸ்லாமிய அறிஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள், மற்றும் புகழ் பெற்ற சிரேஷ்ட அரச அதிகாரிகள் 20 பேர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளையில் இதன்போது இலங்கை முப்படை வீரர்களுக்கும் புலனாய்வுத் துறையினருக்கும் இந்த இலவச ஹஜ் வாய்ப்புக்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய கொழும்பிலுள்ள சவூதி அரேபியா உயர்ஸ்தானிகராலத்தின் உயர்ஸ்தானிகர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி தெரிவித்ததாவது:

"இலங்கை நாட்டில் இருந்து இம்முறை புனித ஹஜ் யாத்திரைக்கு 3500 பேர் சென்றுள்ளனர். மேலும் அவர்களுடன் 1500 பேரை அனுப்புவதற்கு முயற்சிகள் மேற்கொண்டோம். இருந்த போதிலும் அவை பயனிக்கவில்லை. இம்முறை 25 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஹஜ் யாத்திரையாளர்கள் வருகை தருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. எனவே நாம் மேலதிகமாக 1500 பெற்றுக் கொள்ள எடுத்த முயற்சிகள் பயனிக்கவில்லை. இந்த ஹஜ் யாத்திரிகர்கள் 3500 பேரும் இலங்கையிலுள்ள பல தரப்பட்ட முகவர்களின் மூலம் பயணம் சென்றுள்ளார்கள். ஆனாலும் மன்னரின் விருந்தாளிகளாக இந்நாட்டில் இருந்து 20 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த 20 நபர்களும் ஒவ்வொரு துறை சார்ந்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இதில் இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள், மற்றும் புகழ்பெற்ற சிரேஷ்ட அரச அதிகாரிகள் உட்பட அனைத்து தரப்புக்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தக் குழுவினர் இரண்டு புனித தலங்களின் பாதுகாவலரின் விருந்தினராக 2024 ஜுன் 8 ஆம் திகதி இலங்கையில் இருந்து மக்காவிற்கு யாத்திரை மேற்கொள்ள சகல விதமான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் 20 பேர் இம்முறை புனித ஹஜ் யாத்திரை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அனைவரும் தகுதிவாய்ந்தவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அந்த வகையில் நீங்கள் அனைவரும் ஏதோ வகையில் பாக்கியசாலிகளே. இதில் அநேகமானவர்கள் முதல் முறையாக ஹஜ் யாத்திரை செல்லக் கூடியவர்களும் இருக்கிறார்கள். முதலாவது முறை சென்றவர்கள் எனும் போது அவர்களுக்காக புனித ஹஜ் யாத்திரை சென்றார்கள் என்று குறிப்பிட முடியும். ஆனால் இரண்டாவது முறை செல்பவர்களை நாங்கள் எவ்வாறு பார்க்கின்றோம் என்றால் இந்த நாட்டுக்காகவும் இந்த நாட்டிலுள்ள சகல முஸ்லிம்கள் சார்பாகவும் இந்த ஹஜ் யாத்திரை வழங்கப்படுகின்றது. அவர்கள் இந்த நாட்டுக்காக முஸ்லிம் சமூகத்திற்காகவும் அவர்கள் தங்களுடைய பிரார்த்தனைகளை மேற்கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் அழைப்பின் பேரில் புனித இரண்டு பள்ளிவாசல்களின் பாதுகாவலர் மன்னர் முஹம்மது பின் சல்மான் அவர்கள் இதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளார். உலகிலுள்ள நாடுகளில் இருந்து 2300 பேர் இந்த விசேட அழைப்பின் பேரில் புனித ஹஜ் யாத்திரை மேற்கொண்டுள்ளார்கள்.



இந்த 2300 பேர் என்பது பெரியதொரு தொகை அல்ல. அதில் இங்கே இலங்கையில் இருந்து 20 பேர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் அதிகமானவர்கள் ஹஜ் யாத்திரைக்காக சென்று இருந்தாலும் கூட கடந்த வருடம் மன்னரின் விசேட விருந்தினர்களாக 10 பேர்தான் விஜயம் செய்தார்கள். இம்முறை அதில் இருந்து 10 பேரை அதிகரிக்க முடியுமாக இருந்தது. இது நான் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக கிடைக்கப் பெற்றதாகும். இந்தக் குழுவின் வழிகாட்டியாக மௌலவி சேகுதீன் அவர்கள் கடமையாற்றுவார் .

எனது தொலைபேசி இலக்கம் எல்லோருரிடத்திலும் இருக்கிறது. எந்தச் சந்தர்ப்பத்திலும் என்னுடன் தொடர்பு கொள்ளலாம். ஹஜ் யாத்திரை சென்று வந்தாலும் நீங்கள் அனைவரும் வந்து என்னைச் சந்திக்க வேண்டும். குழுவாக வந்து சந்திக்கவும் முடியும். அல்லது தனித்தனியாகவும் வந்து சந்திக்கலாம். இதில் துறைசார்ந்தவர்களும் இளைஞர்களும் இப்பயணத்தில் அங்கம் வகிக்கின்றனர். எல்லோரும் எங்களோடு இணைந்து செயலாற்ற வேண்டும். இப்பயணத்தில் செல்லவுள்ள அனைவருக்கும் சகல ஏற்பாடுகளையும் சவூதி அரேபியா நாட்டு அரசாங்கம் செய்து கொடுத்துள்ளது. சவூதி அரசாங்க மன்னரின் ஒரு விருந்தாளியாகத்தான் நீங்கள் பயணத்தை மேற்கொள்ளவுள்ளீர்கள்.

நீங்கள் இங்கு இருந்து சென்று மக்காவில் உம்மாராவை முடித்துக் கொண்டு மதீனா செல்ல சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. சில இடங்கள் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சவூதி அரேபியாவில் உங்களுடைய பயண ஏற்பாடுகள் இடம்பெறுவதற்காக பங்காற்றிய இங்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட புதுடில்லியில் உள்ள சவூதி அரேபியாவின் அரச தூதரகத்தின் மத விவகார இணைப்பாளர் அஷ்ஷெய்க் பத்ர் பின் நாசர் அல் அனாசி பத்ர் அவர்களுடைய பங்களிப்பு முக்கியமானது. அவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அல்லாஹ்விடமும் பிரார்த்தனை மேற்கொள்வோம். அதேவேளையில் உங்களது சமய கிரியைகளை அனைத்தையும் எளிதாகவும் சிரமமின்றியும் கடமையை முடிக்க சகல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன".

இவ்வாறு அவர் தெரிவித்தார்

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட புதுடில்லியில் உள்ள சவூதி அரேபியாவின் அரச தூதரகத்தின் மத விவகார இணைப்பாளர் அஷ்ஷெய்க் பத்ர் பின் நாசர் அல் அனாசி அவர்கள் உரையாற்றும் போது குறிப்பிட்டதாவது:

"இந்தப் புனித பயணம் அல்லாஹ்வின் ஏற்பாட்டில் உங்கள் எல்லோருக்கும் கிடைத்தமை ஒரு பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் விருப்பத்தின் பேரில் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். இதற்காக பல பேர் விண்ணப்பம் கோரி இருந்தார்கள். இருப்பினும் இதில் மிக முக்கியமானவர்கள்தான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இந்தத் தெரிவு முறைக்கு நூற்றுக்கு நூறு வீதம் பங்களிப்பு நல்கிய உங்கள் தூதுவர் உட்பட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அவருக்காக துஆப் பிரார்த்தனை செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

அதேபோல் இதில் நீங்கள் 20 பேரும் தெரிவு செய்யப்பட்டமையானது அது அல்லாஹ்வின் அழைப்பாகும். கடந்த வருடம் சவூதி அரசாங்க மன்னரின் விருந்தினர்களாக 10 பேர்தான் விஜயம் செய்தார்கள். இம்முறை 20 பேர் பயணம் செய்வது என்றால் அதற்குக் காரணம் இலங்கையிலுள்ள சவூதி ஆரேபிய உயர்ஸ்தானிகராலயத்தின் உயர் ஸ்தானிகர் அவர்களுடைய உன்னதமான சேவையாகும். உயர்ஸ்தானிகருக்கு நாம் எல்லோரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளதோடு அவருடைய சேவைக்காகவும் நாம் அனைவரும் துஆப் பிரார்த்தனை செய்யக் கட்மைப்பட்டுள்ளோம்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சவூதி அரேபியாவுக்கும் இலங்கைக்கு மிகவும் நெருக்கமான உறவை வலுப்படுத்திக் கொள்வதற்காக குறிப்பாக ஒவ்வொரு வருடமும் சவூதி அரேபியா மன்னர் சல்மான் அவர்களின் செயல் திட்டத்திற்கு இணங்க அவருடைய விசேட விருந்தாளிகளாக கடந்த காலங்களிலும் இலங்கையில் இருந்து பலர் புனித ஹஜ் கிரியை மேற்கொண்டுள்ளார்கள்.

இத்துறையில் மட்டுமல்ல இலங்கை, சவூதி அரேபியா ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான நல்லலுறவு பல்வேறுபட்ட அபிவிருத்தி நடடிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பாதை அபிவிருத்தி, சுகாதாரம், கல்வி என்று நாட்டின் மேம்பாட்டுக்கான பல்வேறுபட்ட உதவிகளை சவூதி அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றன. அதேவேளை சமயம் சார்ந்த விடயங்களிலும் ஒரு வலுவான உறவை இலங்கையுடன் சவூதி அரேபியா மேற்கொண்டு வருகின்றது.





இலங்கை மக்களின் சுபிட்சமான நல்வாழ்வுக்கும், நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும், எமது நாட்டு முஸ்லிம் மக்களின் விடிவுக்காகவும் விசேடமான பிரார்த்தனை புரிவோம்



## சவூதி அரேபிய மன்னர் சல்மானின் விசேட விருந்தினராக இம்முறை புனித ஹஜ் யாத்திரை மேற்கொண்டுள்ள அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி வெளியிட்ட கருத்துகள்



ஹஜ்ஜின் மகிமையையும், அதன் தாற்பரியத்தையும், சவூதி அரசாங்கத்தினால் ஹஜ் யாத்திரையாளர்களுக்கு முன்னெடுக்கப்படும் நன்மைகளையும் பங்களிப்புக்களையும் வார்த்தைகளால் சொல்லி எழுத முடியாது.

எமக்கு இந்த புனித ஹஜ் கிரியை மேற்கொள்வதற்காக சந்தர்ப்பம் வழங்கிய சவூதி அரேபியா மன்னர் மற்றும் சவூதி அரேபியா உயர் ஸ்தானிகராலயத்தின் உயர்ஸ்தானிகர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி மற்றும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட புதுடில்லியில் உள்ள சவூதி அரேபியாவின் அரச தூதரகத்தின் மத விவகார இணைப்பாளர் அஷ்ஷெய்க் பத்ர் பின் நாசர் அல் அனாசி அவர்களுக்கும் எனது உள்ளா ர்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை நாட்டின் மக்களுடைய சுவிட்சமான நல்வாழ்வுக்கும் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் மற்றும் எமது நாட்டு முஸ்லிம் மக்களுடைய விடிவுக்காகவும் விசேடமான பிரார்த்தனைகளை இந்தப் புனித பயணத்தை மேற்கொண்டுள்ள நாங்கள் நிச்சயமாக அல்லாஹ் விடம் துஆப் பிரார்த்தனை புரிவோம் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அங்கு பகை இல்லை, வஞ்சகமுமில்லை, விரோதங்கள் இல்லை, உயர்வு தாழ்வு இல்லை. அங்கு எல்லோரும் இஸ்லாம் என்ற கயிற்றைப் பற்றிப் பிடித்து, எல்லாம் கடந்த ஏகநாயகனின் கட்டளைக்கு அடிபணிந்த சகோதரர்கள். உலகத்தில் வேறெங்கும் காணாத ஓர் அரிய காட்சி வாழ்க்கைக்கோர் முன்மாதிரியான காட்சி. அங்கு ஆண்டி இல்லை. அரசன் இல்லை. முதலாளி பாட்டாளி என்ற வேற்றுமை இல்லை. எல்லோரும் ஒரே வித ஆடம்பரமற்ற வெண்ணுடை தரித்து உலகத்தை முற்றும் மறந்து உலக சிந்தனைகளை எல்லாம் ஒழித்து ஆண்டவனின் அழைப்பிற்கு இணங்க இணைற்ற அவன் சந்நிதானத்தை தரிசிக்கக் கிடைத்த வாய்ப்பை பெரும் பாக்கியமாக நாங்கள் கருதுகின்றோம்.

அவை மட்டுமல்ல சமுதாயத் தலைமைகளுக்கு அநேகமாக ஒதுக்கப்படும் இந்த சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி. எதிர்காலத்தில் மென்மேலும் சமூகத் தொண்டுகளில் ஈடுபட இது போன்ற அவகாசங்கள் உந்துசக்தியாக அமையும். இன்ஷா அல்லாஹ்.

குறிப்பாக இரு புனிதஸ்தலங்களின் சேவகர் சவூதி மன்னரின் ஹஜ்ஜுக்கான விருந்தினர்கள் என்ற நிகழ்ச்சி நிரல் பல வருடங்களாக சவூதி அரேபியா உலக முஸ்லிம்களுக்கு வழங்கும் இலவச நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்று. இது சுமார் 26 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு அதனூடாக சுமார் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் தமது ஹஜ் கடமையினை இலவசமாகவும் இலகுவாகவும் நிறைவேற்றியுள்ளார் என்ற செய்தியை எனக்கு அறியக் கிடைத்தது. இந்நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்பார்வை செய்யும் சவூதி இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சர் இது விடயமாக தமது அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தில் தெரிவித்திருந்தார்.

இவ்வருடம் மாத்திரம் வழமைபோன்று 2000 ஆயிரம் பாலஸ்தீனர்கள் உள்ளடங்களாக 88 நாடுகளைச் சேர்ந்த 3322 யாத்திரீகர்களுக்கு இவ்வாய்ப்புக் கிட்டியுள்ளது.

அதேவேளை இலங்கையர்களாகிய எமக்கு இவ்வருடம் முதன்முதலாக 20 பேருக்கான வாய்ப்புக் கிடைத்தமையை இட்டு நான் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் கௌரவ காலித் அல் கஹ்தானி அவர்களுக்கும், சவூதி இஸ்லாமிய விவகார அமைச்சின் பொறுப்பாளிகளுக்கும் நன்றி தெரிவிக்கிறேன். சவூதி அரேபியாக இஸ்லாமிய கலாசார அமைச்சும் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் எனது உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

**இக்பால் அலி...**

# அட்டாளைச்சேனை றஹுமானியா மாணவி அனபா தேசிய மாணவர் பாராளுமன்ற அமைச்சராக நியமனம்

அட்டாளைச்சேனை, ஆலம்குளம் றஹுமானியா வித்தியாலய மாணவி செல்வி எம். அனபா, தேசிய மாணவர் பாராளுமன்றத்தில் பௌதிகவள அபிவிருத்தி மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சராக நியமனம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இந்நியமனம், மாணவி கல்வி கற்கும் றஹுமானியா வித்தியாலயம், அட்டாளைச்சேனை கல்விக் கோட்டம், அக்கரைப்பற்று கல்வி வலயம், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், மாகாண கல்வி அமைச்சு என்பனவற்றுக்கு நிச்சயம் பெருமையையும், புகழையும் பெற்றுத்தருகின்றது.

றஹுமானியா வித்தியாலயத்தில் தற்பொழுது தரம்11 வகுப்பில் கல்விகற்கும் மாணவி எம்.அனபா, சுமார் 30 அங்கத்தினர்களைக் கொண்ட, அக்கரைப்பற்று கல்வி வலய மட்ட மாணவர் பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகராக நியமனம் பெற்று தனது பணியை முன்னெடுத்து வந்தார். இந்நிலையில் அவர் தேசிய மாணவர் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகி அமைச்சரவையில் அங்கம் வகித்துள்ளார்.

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள், இலங்கை நாட்டின் பாராளுமன்ற நடைமுறையை தெளிவாக அறிந்து, தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்தும் விஷேட தேசிய வேலைத்திட்டம் இதுவாகும். பாடசாலை மட்டத்தில் ஆரம்பமாகும் மாணவர் பாராளுமன்றம், தேசிய பாராளுமன்றத்தில் நிறைவுபெறுகின்றது.

இது கல்வி அமைச்சு, நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கியுள்ள நல்லதொரு சந்தர்ப்பமாகும்.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக, சமூகவிஞ்ஞானப் பிரிவு இம்மாணவர்களுக்கு தேர்தல்கள் நடாத்தப்படும் விதம், பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுமுறை, அமைச்சரவை நியமனம், பாராளுமன்ற நடைமுறைகள் என்பன தொடர்பில் விளக்கமளிப்பதுடன், பாடசாலை ரீதியாக மாணவர் பாராளுமன்றத் தேர்தல்களை நடாத்தி உறுப்பினர்கள் தெரிவை மேற்கொண்டு வருகின்றது. பின்னர் அவர்களிலிருந்து வலய மட்ட மாணவர் பாராளுமன்றம், தேசிய மட்ட பாராளுமன்றம் என்பன அமைக்கப் படுகின்றன.

தேசிய மாணவர் பாராளுமன்ற அமைச்சரவையில் நியமனம் பெற்றுள்ள, மாணவி செல்வி அனபாவை பாராட்டி கௌரவிக்கும் விழா றஹுமானிய வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் கே.எல். எம்.முனாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் (நழீமி) பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.





சாதனை மாணவிக்கு பாராட்டு

பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) எம்.எம்.சித்தி பாத்திமா, உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பிள்ளைப் பருவம்) ஏ.எல்.பாயிஸ், சமாதானக் கல்வி இணைப்பாளர் ஏ.றியாஸ் முகம்மட், வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ.தாஹிர் உள்ளிட்ட பிரதேச முக்கியஸ்தர்கள் ஏனைய அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

றஹுமானிய வித்தியாலய பிரதி அதிபர் ஏ.அன்ஸார், பொறுப்பாசிரியர் ஏ.எச். இம்றான் ஹுஸைன் உள்ளிட்ட ஆசிரியர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழவுக்கு ஆலம்குளம் ஜும்மாப் பள்ளிவாயல், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள், பொது அமைப்புக்கள் என்பன அனுசரணை, ஒத்துழைப்பு நல்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், சாதனை மாணவி எம். அனபா மாலை அணிவித்து, அதிதிகள் சகிதம் ஊர்வலமாக விழா மேடைக்கு அழைத்துவரப்பட்டு, பொன்னடை போர்த்தி, பதக்கம் அணிவித்து, பொற்கிளி மற்றும் பரிசில் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் பெற்றார்கள், பொதுமக்கள் என அதிகமானோர் கலந்து சிறப்பித்தனர்.

விழாவில் உரையாற்றிய, பிரதம அதிதி அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் கூறுகையில், மாணவி அனபா அடைந்துள்ள வெற்றியை எவரும் சாதாரணமாக மதிப்பிட முடியாது. மாணவியின் உள்ளார்ந்த திறமையினால் கிடைக்கப்பெற்றுள்ள இம்மகத்தான அடைவுகுறித்து, கல்வி அதிகாரிகளான நாம் பெருமைப்படுகின்றோம் என்றார்.

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# இஸ்லாத்தில் அரபாவும் உழ்ஹிய்யாவும் பெற்றுள்ள முக்கியத்துவம்



துல்ஹஜ் மாதத்தின் முதல் 10 நாட்களும் இஸ்லாத்தின் பார்வையில் மிகச் சிறந்த தினங்களாகும். ரமழான் மாதத்தின் பிந்திய 10 தினங்களும் சிறப்பு பெறுவதற்கு லைலத்துல் கதர் இரவு காரணமாக இருப்பது போன்று துல்ஹஜ்ஜின் முதல் 10 இரவுகளும் சிறப்பு பெறுவதற்கு அதில் ஒன்பதாம் தினத்தில் இடம்பெற்றுள்ள அரபா தினம் காரணமாக அமைந்துள்ளது. அதனால் தான் துல்ஹஜ்ஜின் முதல் பத்து தினங்களும் ரமழானின் பிந்திய பத்து இரவுகளுக்கு சமமானது என அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், மனிதர்கள் துல்ஹஜ் முதல் பத்தில் செய்யும் அமல்களை அல்லாஹ் விரும்புவது போன்று எந்தக் காலத்திலும் அவ்வளவு அதிகம் அமல்களை விரும்புவதில்லை என்ற போது இறைபாதையில் போரிடுவதை விடவும் இக்காலப் பகுதியில் இபாதத் செய்வது அல்லாஹ்வுக்கு விருப்பமானதா? என ஸஹாபாக்கள் வினவ, 'ஆமாம் ஜிகாதை விடவும் நல்லமல்கள் அல்லாஹ்வுக்கு இக்காலப்பகுதியில் விருப்பமானவை தான். போருக்கு புறப்பட்டு போரிலேயே ஷஹீதாகிவிடும் உயிர்த்தியாகியைத் தவிர. எனவே அந்நாட்களில் அதிகம் தக்பீர், தஹ்லீல், திக்ர் ஆகியவற்றில் ஈடுபடுங்கள்' என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

மற்றொரு தடவை நபியவர்கள், அரபா தினத்தன்று அல்லாஹுத்தஆலா கீழ் வானத்துக்கு இறங்கி வந்து அரபா மைதானத்தில் ஒன்று கூடியிருக்கும் மக்களைக் கண்டு பூரிப்படைந்து மலக்குகளிடம் இவர்கள் எதற்காக இங்கு ஒன்று கூடி இருக்கின்றார்கள் என்று பெருமை பாராட்டி பேசுகின்றான்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

ஆனால் ஹஜ்ஜுக்கு செல்லாத முஸ்லிம்கள் அரபா நாளான ஒன்பதாம் தினத்தன்று நோன்பு நோற்பது சுன்னத்தாகும். 'நபி (ஸல்) அவர்கள் துல்ஹஜ் பிறை ஒன்பதிலும் ஆஷூரா தினத்திலும் மற்றும் ஒவ்வொரு மாதத்தின் மூன்று தினங்களும் நோன்பு நோற்கும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள் என்று அபூதாவூதில் பதிவாகியுள்ளது.

அதேநேரம் நபில் தொழுகைகள் திகில், திலாவத், தஸ்பீர், இஸ்திஃபார் தக்பீர் போன்றவற்றில் இந்நாட்களில் நேரத்தை செலவிடுவது மிகச் சிறந்ததாகும்

**உழ்ஹிய்யாவின் சட்டங்கள்**

மேலும் ஹஜ் பெருநாளின் நிமித்தம் முஸ்லிம்கள் நிறைவேற்ற வேண்டிய இபாதத்களில் உழ்ஹிய்யாவும் முக்கியமானது. ஹஜ் பெருநாளன்றோ அல்லது அதற்கு அடுத்த மூன்று தினங்களிலோ அல்லாஹ்வுக்காக அறுத்து கொடுக்கப்படும் குர்பானி ஆடு, மாடு, ஒட்டகங்களுக்கு உழ்ஹிய்யா எனப்படும். நபியவர்கள் மதீனாவில் வாழ்ந்த பத்து வருடகாலத்தில் ஒரு தடவை கூட தவறாது நிறைவேற்றி வந்த முக்கியமான ஸுன்னாவே இது. இதனலேயே சில அறிஞர்கள் உழ்ஹிய்யாக் கொடுப்பது கட்டாய கடமை என்றும் கூறுகின்றனர். ஆனாலும் அது ஓர் வலியுறுத்தப்பட்ட சுன்னத் என்பதே ஏராளமான அறிஞர்களின் கருத்தாகும்.

என்றாலும் உழ்ஹிய்யா என்பது உயிரோடு இருப்பவர்களுக்காக நிறைவேற்றப்படும் ஓர் கிரியையாகும். நாம் நமக்காகவும் நமது குடும்பத்தினருக்காகவும் குர்பானி கொடுக்கும் போது மரணித்தவர்களான எமது உறவினர்களுக்கும் நன்மை கிடைக்க வேண்டும் என நிய்யத் வைத்துக் கொள்ளலாம். தவிர மரணித்தவர்களுக்கென பிரத்தியேக உழ்ஹிய்யா கொடுப்பதற்கு ஸுன்னாவில் எந்த ஆதாரமும் இல்லை. அது மரணித்தவருக்காக ஸதகா செய்ததாகவே ஆகும்.

அவ்வாறே உழ்ஹிய்யா ஒரு வருக்கு ஆயுளில் ஒரு தடவை தான் என்று சிலர் கருதுகின்றனர். இதுவும் தவறானது. வசதியிருந்தால் ஒவ்வொரு வருடமும் இதனை நிறைவேற்றலாம்.

ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய மூன்று பிராணிகளையும் மாத்திரமே உழ்ஹிய்யாக் கொடுக்கலாம். ஒரு ஆட்டை ஒரு நபருக்காகவும் அவரது குடும்பத்தினருக்காகவும் கொடுக்கலாம். ஒரு மாட்டையோ, ஒட்டகத்தையோ ஒருவர் தனக்காகவும் தன் குடும்பத்திற்காகவும் வழங்கலாம். விரும்பினால் ஏழு பேர் வரைக்கும் கூட்டு சேர்ந்தும் கொடுக்கலாம். அந்த ஏழு நபர்களுடன் அவர்களின் குடும்பங்களும் அடங்கும்.

நபியவர்கள் தனக்காகவும் தனது குடும்பத்தினருக்காகவும் ஒரு ஆட்டை அறுத்து உழ்ஹிய்யாக் கொடுத்தார்கள். அதன் மாமிசத்தை அவர்களும் உண்டு ஏனையவர்களுக்கும் கொடுத்தார்கள்

(ஆதாரம்: திர்மிதி).

ஒட்டகம் மற்றும் மாட்டில் எங்களில் ஏழு பேர் கூட்டு சேர்ந்து கொள்ளலாம் என்றும் நபியவர்கள் கட்டளையிட்டார்கள்

(ஆதாரம்: முஸ்லிம்).

மேலும் நான்கு குறைபாடுள்ள பிராணியை உழ்ஹிய்யாக் கொடுக்க முடியாது. அதாவது தெளிவான குருடு, தெளிவான ஊனம், தெளிவான நோயற்றது, கடுமையாக மெலிந்தவை ஆகியவை யாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹுல் ஜாமிஉ).

அதேநேரம் உழ்ஹிய்யாவுக்காக அறுக்கப்படும் பிராணியின் எப்பகுதியையும் விற்பதோ கூலியாக கொடுப்பதோ கூடாது. அதனால் தான் நபியவர்கள், குருபானி பிராணியின் தோலை யாராவது விற்றால் அவருக்கு குர்பானியே கிடையாது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: அல் ஜாமிஉ).

உழ்ஹிய்யாவை ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையை நிறைவேற்றியது முதல் அன்றைய தினமும் அதற்கடுத்த அய்யாமுத் தஷ்ரீக் தினங்களான துல்ஹஜ் 11,12,13 ஆம் தினங்களிலும் மாலை நேரம் வரை நிறைவேற்ற முடியும். ஆனாலும் முதல் தினத்தில் அறுத்து விடுவது சிறந்ததாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், பெருநாள் தொழுகைக்கு முன் யாராவது குர்பானி பிராணியை அறுத்து விட்டால் அவர் வேறொரு பிராணியை குர்பானி கொடுக்கட்டும் என்றுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

ஒரு முறை அலி (ரழி) அவர்கள், அறுக்கும் தினங்களாக பெருநாள் அன்றும் அதற்கடுத்த மூன்று தினங்களும் விளங்குகின்றன. ஹஜ் பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பின் உடனடியாக குர்பானி கொடுத்து அப்பிராணியின் மாமிசத்தில் இருந்து புசிப்பது நபியவர்கள் செய்து வந்த வழிமுறை என்றுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாள் தினத்தன்று காலை உணவு அருந்தாமல் தொழச் செல்வதில்லை. ஹஜ் பெருநாளன்று காலை உணவு உண்ணாமல் தொழுகைக்குச் சென்று தொழுதுவிட்டு வந்து குர்பானி கொடுத்து பிராணியின் மாமிசத்திலிருந்து உண்பார்கள். (ஆதாரம்: மிஷ்காத்)

அதேவேளை குர்பானி கொடுத்த பிராணியின் மாமிசத்தை மூன்று பகுதிகளாக பிரித்து ஒன்றை தனக்கும் அடுத்ததை உறவினர்களுக்கும் மற்றையதை ஏழைகளுக்கும் பகிர்ந்தளிப்பது விரும்பத்தக்க வழிமுறையாகும்.

'உங்களில் குர்பானி கொடுக்க நிய்யத்து வைத்தவர் தலைப்பிறை பிறந்ததிலிருந்து குர்பானி கொடுக்கும் வரை தனது உடலிலுள்ள முடிகள், ரோமங்களை அகற்றாமல் பார்த்துக் கொள்ளட்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

குர்பானி பிராணியை உரியவரே தன் கையினால் அறுப்பது சிறந்தது. அவர் விரும்பினால் அறுப்பதற்கு வேறு ஒருவரையும் பொறுப்பாக்கலாம். அவ்வாறே தனது குர்பானி பிராணியை வாங்குவதற்கும் அறுத்து விநியோகிப்பதற்கும் ஒருவரை நியமிப்பதும் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. நபியவர்கள் ஹக்கீம் பின் ஹிஸ்ஸாம் எனும் நபித்தோழரிடம் ஒரு தீனாரை கொடுத்து தனக்காக ஒரு குர்பானி பிராணியை வாங்குமாறு பணித்தார்கள். (ஆதாரம்: அஹமத்)

அவ்வாறே நபியவர்கள் இறுதி ஹஜ்ஜின் போது குர்பானிக்காக வந்திருந்த பிராணிகளில் 63 பிராணிகளை தனது கைகளினாலேயே அறுத்தார்கள். அதன் பின்பு கத்தியை அலி (ரழி) அவர்களிடம் கொடுத்து மீதி பிராணிகளை அறுக்குமாறு பணித்தார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

எனவே துல்ஹஜ் மாதத்தின் ஆரம்பப்பகுதியில் நிறைந்துள்ள இறையருள் நன்மைகளை அடைந்து கொள்ள உச்சளவில் முயற்சிப்போம்.

மௌலவி ஏ.ஜி.எம்.ஜெலீல்...
(மதனி) மஃஹதுஸ் ஸுன்னா அரபுக் கல்லூரி, காத்தான்குடி

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# ஹஜ்: ஒரு பார்வை



அல்லாஹ்தஆலா தன் இறைத்தூதர்களில் ஒருவரான இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு பலவிதமான சோதனைகளை வழங்கினான். குறிப்பாக இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட சோதனைகள், எந்த மனிதனும் நிறைவேற்ற தயங்கும் அளவிற்கு மிகவும் கடுமையானது.

இச்சோதனைகள் அனைத்தும் உள்ளுணர்வு மற்றும் கனவுகள் மூலம் அவருக்கு தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும், இறைக்கட்டளையை எந்த சந்தேகமும் இன்றி அப்படியே அவர் ஏற்றுக்கொண்டார். ஏன், எதற்கு என்று எந்தக்கேள்வியும் கேட்காத இறைத்தூதராக விளங்கினார் இப்றாஹீம் (அலை) அவர்கள்.

அதன் பயனாக அல்லாஹ்தஆலா, இப்றாஹீம் (அலை) அவர்களை, 'தன் உற்ற தோழன்' என்று அழைத்து அவருக்கு பெருமை சேர்த்தான். அத்தனை சிறப்பு மிக்க இப்றாஹீம் (அலை) அவர்கள், இறைவனிடம் இவ்வாறு பிரார்த்தனை செய்தார்கள்:

'என் இறைவா! ஒரு மகனை எனக்கு நீ வழங்குவாயாக... அவர் உத்தமரில் ஒருவராக இருக்கவேண்டும்..' (அல் குர்ஆன் 37:100)

இப்பிரார்த்தனையை அங்கீகரித்த அல்லாஹ் அவருக்கு ஒரு மகனை (இஸ்மாயில்) வாரிசாக வழங்கினான். வயது முதிர்ந்த நிலையில் பெரும் அருட்கொடையாக மகனைப் பெற்ற இப்றாஹீம் (அலை) மகிழ்ச்சியடைந்தார்கள்.

ஆனால் 'பால்குடி மாறா அக்குழந்தையையும் அவரது மனைவி ஹாஜரா அம்மையாரையும் பாலை வனத்தில் விட்டுவிட்டு செல்லுங்கள் என்று இறைக்கட்டளை வந்தது. அதற்கு இப்றாஹீம் (அலை) அவர்கள் உடனே அடிபணிந்தார்கள். இதன் ஊடாக ஸம்ஸம் ஊற்றும், சபாமர்வா குன்றுகளிடையே ஓடும் 'தொங்கோட்டம்' என்ற சிறப்பு அமலும் கிடைக்கப்பெற்றது. பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தும் கூட ஹாஜிகள் அந்த கடமையை நிறைவேற்றி வருகிறார்கள். உலகம் இருக்கும் வரை இக்கடமையை இறை விசுவாசிகள் நிறைவேற்றுவார்கள்.

அதேநேரம் மக்கா பள்ளத்தாக்கில் மனைவியையும், மகனையும் விட்டுச் சென்ற இப்றாஹீம் (அலை) அவர்கள், பல ஆண்டுகள் கடந்த பின்னர் தன் குடும்பத்தினரை மீண்டும் காணச் சென்றார்கள். அங்கு அருமை பாலகன் இஸ்மாயிலோடு கொஞ்சிக் குலவி சிறிது காலம் வாழ்ந்தார்கள். மகனும் நடந்து திரிந்து விளையாடும் பருவத்தை அடையும் போது மற்றொரு அல்லாஹ்வின் கட்டளை இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு கிடைக்கப் பெற்றது.

இதுபற்றி அவர், தன் மகனிடமே இவ்வாறு குறிப்பிட்டார். 'என் அருமை மைந்தனே... நான் உன்னை என் கை கொண்டு அறுத்துப் பலியிடுவதாக மெய்யாகவே நான் கனவு கண்டேன். இதைப்பற்றி நீ என்ன அபிப்பிராயப்படுகிறாய்...?'

(அல் குர்ஆன் 37:102).

அப்போது மகன், 'தந்தையே! இது இறைவனின் கட்டளை என்று உறுதியாகத் தெரியுமா? என்று வினவுகிறார். அப்போது அவர், 'ஆம் நான் மெய்யாகவே கனவு கண்டேன்', என்றார் தந்தை. 'அப்படியானால் நீங்கள் கவலை கொள்ளாதீர்கள். அல்லாஹ்வே எனக்கு போதுமானவன். எல்லா செயலாக்கங்களும் அவன் கட்டளைப்படியே நடக்கின்ற போது, இதுவும் அல்லாஹ்வின் எண்ணப்படியே நன்றாகவே நடக்கும்.

இதை அல் குர்ஆன் வசனம் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது, 'என்னருமைத் தந்தையே! உங்களுக்கு இடப்பட்ட கட்டளைப்படியே நீங்கள் செய்யுங்கள். அல்லாஹ் அருள் புரிந்தால் அதை சகித்துக்கொண்டு உறுதியாய், இருப்பவனாகவே நீங்கள் என்னை காண்பீர்கள்' என்று கூறினார். (அல் குர்ஆன் 37:102)

அதற்கேற்ப அவர்கள் இருவரும் நடந்து மினா என்ற இடத்தை அடைந்த போது, சைத்தான் இப்றாஹீம் (அலை) அவர்களிடம் வந்து, 'இப்றாஹீமே...! ஏதோ நீங்கள் கனவு கண்டதாக சொல்கிறீர்கள். அல்லாஹ் எங்காவது தன் அடியார்களை உயிரோடு அறுத்து பலியிடச் சொல்வானா? உங்கள் சிதறிய சிந்தனையால் ஏற்பட்ட மனக் குழப்பமே இதற்கு காரணம். அருமைப் பிள்ளையை அறுத்து பலியிடாதீர்கள்' என்று அவர்கள் மனதில் ஊசலாட்டத்தை விதைத்தான்.

அப்போது இப்றாஹீம் (அலை) அவர்கள், அல்லாஹ் எனக்கு அளித்த கட்டளையில் நான் தெளிவாக இருக்கிறேன்.

எனவே என்னை நீ வழிகெடுக்க முடியாது. என்னை விட்டு ஓடிவிடு என்று கூறியவர்களாக அவன் மீது கல்லால் எறிந்தார்கள்.

அந்த செயலை ஏற்றுக்கொண்ட அல்லாஹ், ஹஜ் கடமைகளில் ஒன்றாக சைத்தான் மீது மூன்று இடங்களில் கல் எறிவதையும் அங்கீகரித்தான்.

குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும், இப்றாஹீம் (அலை) அவர்கள், தன் மகனை மண்ணில் கிடத்தினார்கள். அப்போது இஸ்மாயில் (அலை) அவர்கள், 'அருமை தந்தையே என்னை முகங்குப்புற படுக்க வையுங்கள். ஏனெனில், நீங்கள் அறுப்பதற்காக கத்தியை கையில் எடுக்கும் போது என் முகத்தை பார்க்க நேரிட்டால் உங்கள் மனம் இளகி அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றாமல் விட்டு விடுவீர்களோ என்று நான் அஞ்சுகிறேன்' என்றார்.

எப்படியான இறையச்சம் இது. அவர்கள் சொல்லியபடியே முகங்குப்புற படுக்க வைத்து கூரிய கத்தியால் அறுக்க முயற்சி செய்த போதிலும் கத்தி அறுக்க மறுக்கிறது. கோபத்தோடு அருகில் இருந்த பாறையில் அடிக்கிறார்கள். பாறை இரண்டாக பிளவு பட்டது. மீண்டும் அறுக்க முயற்சித்தும் முடியவில்லை. காரணம் அல்லாஹ்வின் உத்தரவு இருந்தால் மட்டுமே கத்தியால் அறுக்க முடியும். கத்தி அறுப்பதற்காகவே படைக்கப்பட்டது. இருந்தாலும் அறுப்பதற்கும், அல்லாஹ்வின் கட்டளை வேண்டும் என்பது இதன் ஊடாக எடுத்தியம்பப்பட்டுள்ளது. அப்போது இறைகட்டளை இறங்கியது. 'இப்றாஹீமே நாம் உமது இறைபக்தியை ஏற்றுக்கொண்டோம். இஸ்மாயிலுக்கு பதிலாக ஒரு ஆடு அனுப்பியுள்ளோம். அதனை அறுத்து உங்கள் கனவை பூர்த்தி செய்யுங்கள்' என்றான் அல்லாஹ். அதற்கேற்ப அன்று முதல் இறை விசுவாசிகள் அனைவரும் துல்ஹஜ் மாதத்தில் 10 ஆம் பிறையில் ஓர் ஆட்டை குர்பானி செய்து அந்நாளை தியாக திருநாளாக கொண்டாடுகின்றனர்.

அபூ முஷீரா...

# துல்ஹஜ்ஜின் முதல் பத்து நாட்கள்

அல்லாஹுதஆலா பன்னிரெண்டு மாதங்களை விதியாக்கி அதில் நான்கு மாதங்களை கண்ணியப்படுத்தியுள்ளான். இதனை அல் குர்ஆனின், 'வானங்களையும் பூமியையும் படைத்த நாள் முதல் அல்லாஹ்வின் பதிவேட்டில் மாதங்கள் பன்னிரெண்டாகும். அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை யாகும். '(9:36) என்ற வசனம் தெளிவுபடுத்துகிறது.

அதுபோன்று இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறந்த நான்கு மாதங்கள் எவை என்பதையும் குர்ஆன் குறிப்பிட்டுள்ளது.

அந்த புனிதமான நான்கு மாதங்கள் துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம், ரஜப் ஆகும். அந்த மாதங்களில் போர் செய்யக் கூடாது, வீணானதும் பாவமானதுமான காரியங்களிலும் சண்டை சச்சரவுகளிலும் ஈடுபடக் கூடாது என்ற மேலான தத்துவங்களை உபதேசமாக இஸ்லாம் கூறுகிறது.

சிறப்பிக்கப்பட்ட அந்த நான்கு மாதங்களில் ஒன்று தான் இந்த துல்ஹஜ் மாதமாகும். இது தியாகத்தை பறைசாட்டும் மாதமாகும். இம்மாதத்தின் முதல் பத்து நாட்களும் மிகவும் சிறப்பு பொருந்திய தினங்களாக விளங்குகின்றன. இத்தினங்கள் மீது அல்லாஹ் சத்தியம் செய்து இவை சிறப்புப் பொருந்திய தினங்கள் என்பதை அல் குர்ஆனில் எமக்கு உணர்த்தியுள்ளான்.

'விடியற்காலையின் மீது சத்தியமாக! பத்து இரவுகள் மீதும் சத்தியமாக' (அல்பஜ்ர் 12)

இவ்வசனத்திற்கு இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களும் ஏனைய அறிஞர்களும், இங்கு குறிப்பிடப்படும் இரவுகள் துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து இரவுகள் என விளக்கமளித்துள்ளார்கள். ஆகவே இத்தினங்களை பாரமாகக் கருதாமல் பாக்கியமாகக் கருதி நல்லமல்களில் இயலுமான வரை நிலைத்திருக்க முயற்சிக்க வேண்டும்.

குறிப்பாக இம்மாதத்தின் முதல் பத்து தினங்களிலும் புரியப்படும் நல்லமல்களுக்கு ஈடாக வேறு எந்த நாட்களிலும் ஆற்றப்படும் நல்லமல்கள் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானதாக இல்லை. ஸஹீஹுல் புஹாரியில் இடம் பெற்றுள்ள ஹதீஸின் அடிப்படையில் பிறை ஒன்றிலிருந்து நோன்பு நோற்க முடியும். எனினும் துல்ஹஜ் பிறை பத்து, பெருநாள் தினமாகையால் அத்தினத்தில் நோன்பு நோற்கக் கூடாது.

துல் ஹஜ் மாதத்தின் பிறை ஒன்பதாவது தினம் அறபா தினமாகும். அத்தினத்தில் நோன்பு நோற்பது விசேட ஸுன்னாவாக உள்ளது.

அபூ கதாதா (ரழி) அவர்கள், அரபா தின நோன்பு பற்றி நபியவர்களிடம் வினவப்பட்ட போது, சென்ற வருடத்திற்கும் தற்போதைய வருடத்திற்கும் (அவற்றில் செய்யப்பட்ட சிறு பாவங்களுக்கு) குற்றப்பரிகாரமாக அது அமையும்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹு முஸ்லிம்)

மேலும் இப்னு உமர், அபூ ஹுறைரா றழியல்லாஹு அன்ஹுமா ஆகியோர் (துல்ஹஜ் மாத முதல்) பத்து நாட்களில் சந்தை பகுதிகளுக்கு செல்லும் போது தக்பீர் கூறுவார்கள். (ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி)



துல்ஹஜ்ஜாவின் முதல் பத்து நாட்களில் மேற்கோள்ளப்படும் அமல்களை விட அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானதும் மகத்தானதும் வேறு ஏதும் இல்லை. எனவே, அந்நாட்களில் லாஇலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர், அல்ஹம்து லில்லாஹ் அதிமதிகம்கூறுங்கள் என நபி (ஸல்) கூறியதாக இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

(ஆதாரம்: முஸ்னத் அஹ்மத்)

அதேநேரம் பெருநாள் தினத்தில் விசேடமாக பெருநாளுக்காக குளிப்பது ஒரு முக்கியமான ஸுன்னா விளங்குகிறது. நறுமணம் பூசிக் கொள்வதும் இருக்கின்ற ஆடைகளுள் அழகான ஆடைகளை அணிந்து கொள்வதும் தக்பீர் சொல்லுவதும் பெருநாள் தினத்திலே நாம் கடைபிடிக்க வேண்டிய ஸுன்னாக்களாக உள்ளன. ஆடை அணிகலன்கள் புத்தம் புதியதாக இருக்க வேண்டும் என்பதில்லை. சிறந்த ஆடையாக இருந்தால் போதுமானது.

ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாளைப் பொறுத்தவரை நேரகாலத்தோடு பெருநாள் தொழுகையை நிறைவேற்றி விட்டு வீடு திரும்பியதன் பின்னரே காலை உணவை உட்கொள்ள வேண்டும். அதுதான் ஸுன்னா. இப்படித்தான் நபி (ஸல்) அவர்கள் எமக்கு வழிகாட்டியுள்ளார்கள்.

பெருநாள் தொழுகை எந்த இடத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் எனும் விடயத்தில் ஷாஃபிஈ மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்களைப் பொறுத்தவரையில் ஓர் ஊரின் மஸ்ஜித் மக்களுக்குப் போதுமானதாக இருக்குமாயின் மற்றைய இடங்களில் தொழுவதைவிட மஸ்ஜிதில் தொழுவதே மிகச் சிறப்பானதாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் முற்றவெளியை நாடிச் சென்றது ஊர்மக்கள் அனைவரும் ஓரிடத்தில் ஒன்று சேர வேண்டுமென்ற நோக்கத்தினாலாகும். அந்நோக்கம் மஸ்ஜிதில் கைகூடிவிட்டால் அங்கு தொழுவதே சாலச் சிறந்தது என குறிப்பிடுகின்றனர்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் தனது மஸ்ஜிதில் இடவசதி போதாமை காரணமாகவே முற்றவெளிக்குச் சென்றார்கள் என்று ஸுனன் அல்பைஹகீ எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள உமர் (ரழி) அவர்களின் கூற்றை இக்கருத்துக்கு வலுவாக எடுத்துக் கொள்ளலாம். இது தொடர்பான தெளிவுகளை இமாம் நவவி (ரஹி) அவர்களின் 'அல்மஜ்மூஃ' வின் பெருநாளுடைய பாடத்தில் காண முடியும்.

எனவே துல்ஹிஜ்ஜாவின் ஆரம்ப பத்து நாட்களை மிகப் பேணுதலாகப் பயன்படுத்தி நன்மைகளை அடைந்து கொள்ள முயற்சிப்போம். நபியவர்கள் காட்டிய பிரகாரம் பெருநாள் தினத்திற்காக தயாராகுவோம்.

அஷ்ஷைக் அப்துல் காலித் முப்தி மின்ஹாஜ்...
(பி.ஏ) நிந்தவூர்



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

சரியான விடையின் கீழ் கோடிடுக.

- **பின்வரும் கருத்துக்களுக்குப் பொருத்தமான உருவைத் தெரிந்து கோடிடுக.**

01. முள் உள்ளதும், அழகானதும், காலத்தோடு தொடர்புடையதுமான உரு,

i.  ii.  iii. 

02. பின்வருவனவற்றுள் எப்போதும் உண்மையான கூற்று,
i. கதிரைகள் மரத்தால் செய்யப்பட்டவை. ii. நாளை அடைமழை பெய்யும்.
iii. இலங்கை ஒரு தீவு ஆகும்.

- **மாணவர்கள் சிலர் பெற்ற புள்ளிகள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. அதன்படி கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

| மாணவர்கள் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| A | 0 - 20 |
| B | 21 – 40 |
| C | 41 – 60 |
| D | 61 – 80 |
| E | 81 – 100 |

03. இவர்களில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்,
i. C ii. A iii. E

04. 50 புள்ளிகளை பெற்றிருக்கக் கூடியவர்கள்,
i. C ii. D iii. A

05. 18 புள்ளிகளைப் பெற்றிருக்கக் கூடியவர்கள்,
i. D ii. B iii. A

06. நாம் தினமும் சுத்தத்தைப் பேணாவிடின் ஏற்படக் கூடிய விளைவாக அமையக் கூடியது,
i. ஆரோக்கியமான வாழ்வு கிடைக்கும். ii. கொடிய நோய்கள் பரவும்.
iii. சுத்தமான காற்றைப் பெறலாம்.

07. குளம் ஒன்றில் உள்ள பூக்கள் ஒவ்வொரு நாளும் முதல் நாளில் உள்ள பூக்களைப் போன்று இரண்டு மடங்காகும். முதல் நாள் குளத்தில் இரண்டு பூக்கள் இருந்தன எனின் ஆறாம் நாள் முடிவில் குளத்தில் உள்ள பூக்களது எண்ணிக்கை யாது?
i. 32 ii. 64 iii. 128

08. பாடசாலை ஒன்றில் எப்போதும் இருக்கக்கூடியது,
i. தளபாடம் ii. மாணவர்கள் iii. ஆசிரியர்கள்

09. முயன்றால் வெற்றி பெறலாம் என்பது
i. எப்போதும் உண்மையாகும் ii. பெரும்பாலும் உண்மையாகும்
iii. கூறமுடியாது

10. கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பேருந்து ஒன்று காலை 7.25க்குப் புறப்பட்டு 6 மணித்தியாலம் 25 நிமிடங்கள் பயணித்தது எனின் எத்தனை மணிக்கு குறித்த பேருந்து மட்டக்களப்பை அடைந்திருக்கும்?
i. பி.ப. 1.50 ii. பி.ப. 2.05 iii. பி.ப. 12.50

11. சிற்றூர்ந்து ஒன்று 5ஆவது மைல் கல்லில் இருந்து 15 ஆவது மைல் கல்லினைச் சென்றடைய 30 நிமிடங்கள் எடுக்கும் எனின் 15ஆவது மைல் கல்லில் இருந்து 40 ஆவது மைல் கல்லை அடைவதற்கு எவ்வளவு காலமெடுக்கும்?
i. 1 மணி 15 நிமிடம் ii. 1 மணி 25 நிமிடம் iii. 1 மணி 20 நிமிடம்

12. கீழ்வரும் கூற்றுக்களில் சில வேளைகளில் நிகழக் கூடியது
i. கிழக்கில் சூரியன் உதயமாதல் ii. மழைக்கு முன் வானவில் தோன்றுதல்
iii. இரவு வானில் நட்சத்திரம் தோன்றுதல்

13. 2016 ஜனவரி முதலாந் திகதி வெள்ளிக்கிழமை எனின் டிசெம்பர் 25 என்ன நாளாகும்?
i. ஞாயிறு ii. சனி iii. திங்கள்

14. ஒரு குழாயை இரு துண்டுகளாக வெட்டுவதற்கான செலவு ரூபாய் 50.00 எனின் அவ்வாறான ஒரு குழாயை 6 துண்டுகளாக வெட்டுவதற்கான செலவு யாது?
i. ரூபாய் 250.00 ii. ரூபாய் 200.00 iii. ரூபாய் 300.00

15. கமல் தினமும் தனது தந்தையிடம் ரூபாய் 50.00 வாங்கி ரூபாய் 30.00ஐ செலவழிப்பான். ஐந்தாம் நாள் முடிவில் அவனிடம் எவ்வளவு பணம் இருக்கும்?
i. ரூபாய் 120.00 ii. ரூபாய் 200.00 iii. ரூபாய் 100.00

16. 3 மாம்பழங்களின் விலை ரூபாய் 19.00 எனில் 9 மாம்பழங்களின் விலை யாது?
i. ரூபாய் 60.00 ii. ரூபாய் 58.00 iii. ரூபாய் 57.00

17. எந்த எண்ணின் எட்டு மடங்கு எழுபத்திரண்டு ஆகும்,
i. 10 ii. 9 iii. 11

18. வரிசை ஒன்றில் எனக்கு முன்னால் 4 பேரும், எனக்குப் பின்னால் 5 பேரும் உள்ளனர். அவ்வரிசையில் உள்ளோரின் மொத்த எண்ணிக்கை
i. 9 ii. 10 iii. 8

19. கடிகாரத்தில் மணித்தியால முள்ளுக்கும், நிமிட முள்ளுக்கும் இடையே உள்ள கோணம் செங்கோணத்திலும் பார்க்க கூடுதலாக இருக்கும் சந்தர்ப்பம்
i. பி.ப. 1.00 ii. பி.ப. 3.00 iii. பி.ப. 5.00

20. 300 தொடக்கம் 310 வரையுள்ள எண்களை எழுதும் போது 0 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை?
i. 9 ii. 10 iii. 12

21. எனக்கு 9 வயதாக இருக்கும் போது எனது அப்பாவின் வயது 34 ஆகும். அப்பாவிற்கு 30 வயதாக இருந்த போது எனது வயது,
i. 6 ii. 5 iii. 7

22. அடுத்துள்ள இரு இலக்கங்களை கூட்டும் போது வரும் விடை 7 ஆகவும். பெருக்கும் போது வரும் விடை 12 உம் ஆகும் எனின், அவ்விலக்கங்கள்
i. 5, 2 ii. 3, 4 iii. 2, 6

23. ரூபாய் 5000 பெறுமதி உடைய தொலைபேசி ஒன்றை வாங்குவதற்கு என்னிடம் ரூபா 2500.00 இருந்தது. மிகுதியை இரு நண்பர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டேன் பெற்றுக் கொண்ட பணம்,
i. ரூபாய் 1000.00 உம், ரூபாய் 500.00 உம் ஆகும்.
ii. ரூபாய் 1750.00 உம், ரூபாய் 750.00 உம் ஆகும்.
iii. ரூபாய் 1000.00 உம் ரூபாய் 2000.00 உம் ஆகும்.

24. வட்ட வடிவமான மைதானம் ஒன்றைச் சுற்றி 15 கொடிக்கம்பங்கள் சம இடைவெளியில் நடப்பட்டுள்ளன. இரு கொடிக்கம்பங்களுக்கு இடையேயான தூரம் 3m எனின் மைதானத்தைச் சுற்றி உள்ள தூரம்?
i. 42m ii. 45m iii. 48m

25. ஒரு கைக்குட்டை தைக்க துணி 45cm துணி தேவை எனின், 10 கைக்குட்டைகள் தைக்க தேவையான துணியின் அளவு,
i. 450m ii. 4m 50cm iii. 45m 50cm

26. 2015 ஜனவரி 10ஆம் திகதியில் தொடங்கிய வேலை ஒன்று அவ்வாண்டின் மார்ச் மாதம் 10ஆம் திகதி முடிந்தது ஆயின் வேலைக்குச் செலவாகிய நாட்கள் எத்தனை?
i. 60 நாட்கள் ii. 59 நாட்கள் iii. 61 நாட்கள்

27. பாடசாலை சிரமதானத்திற்கு வருகை தந்தோர்களில் ½ பங்கினர் மாணவர்கள் ஆவர். வருகை தந்த ஏனையோர்களில் பெண்களின் இருமடங்கினர் ஆண்கள் ஆவர். வருகை தந்த பெண்களின் எண்ணிக்கை 30 எனின், சிரமதானத்தில் பங்குபற்றியோர் எத்தனை பேர்?
i. 90 பேர் ii. 120 பேர் iii. 180 பேர்

28. கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்ட யாழ்தேவி புகையிரதத்தில் 1001 பிரயாணிகள் இருந்தனர். முதலாவது தரிப்பிடத்தில் புகையிரதம் நிற்கும் போது 129 பிரயாணிகள் ஏறினர். 10 பிரயாணிகள் இறங்கினர். இரண்டாவது தரிப்பிடத்தில் புகையிரதம் நிற்கும் போது 187 பிரயாணிகள் ஏறினர். ஒருவரும் இறங்கவில்லை. மூன்றாவது தரிப்பிடத்தில் 12 பிரயாணிகள் ஏறினர். ஒருவரும் இறங்கவில்லை. நான்காவது தரிப்பிடத்தில் இறங்குவதற்கு 35 பிரயாணிகள் ஆயத்தமாக இருந்தனர். புகையிரதத்தில் மொத்தமாக இருக்கும் பிரயாணிகளின் எண்ணிக்கை யாது?
i. 965 ii. 1132 iii. 1319

29. அமுதன் நிமிடம் ஒன்றிற்கு 450m தூரம் வரை ஓடுவான். பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் அவன் விளையாட்டு மைதானம் முழுவதையும் 6 நிமிடத்தில் மூன்று தடவைகள் ஓடி முடித்தான் எனின் அமுதன் மைதானத்தில் ஓடிவந்த தூரம் எத்தனை மீற்றராகும்?
i. 2700 m ii. 1350 m iii. 1650 m

30. அடுத்தடுத்துள்ள மூன்று பச்சைக் கொடிகளுக்கு நடுவே ஒரு சிவப்புக் கொடி நடப்பட்டு இருந்தது. முதலாவதாக பச்சைக் கொடி இருந்தது. மைதானத்தில் உள்ள கொடிகளின் மொத்த எண்ணிக்கை 60 எனின், அங்குள்ள பச்சைக் கொடிகளின் எண்ணிக்கை,
i. 15 ii. 30 iii. 45

31. 2.5*l* கொள்ளளவுடைய பாத்திரத்தை முழுமையாக நிரப்ப 250ml கொள்ளளவுடைய அளவுச்சாடியால் எத்தனை தடவை ஊற்ற வேண்டும்.
i. 5 ii. 10 iii. 12

32. எந்த எண்ணின் 1/3 பங்கு 99 ஆகும்.
i. 33 ii. 297 iii. 201

33. கரீமிற்கு சிவப்புத் தவிர்ந்த எல்லா நிறமும் பிடிக்கும், நிஸாமுக்கு மஞ்சள் தவிர்ந்த எல்லா நிறமும் பிடிக்கும், முகமதுவுக்கு நீலம் தவிர்ந்த எல்லா நிறமும் பிடிக்கும். மூவரிற்கும் பிடித்த நிறம்
i. மஞ்சள் ii. நீலம் iii. கறுப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

(11 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

34. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் சிவப்பு பேனாக்கள் 3 உம், நீலப் பேனாக்கள் 3 உம், கறுப்பு பேனாக்கள் 3 உம் உண்டு. ஒரே நிறத்திலான 2 பேனாக்களை பெறுவதற்கு எடுக்க வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை
i. 3 ii. 4 iii. 5

35. குமரன் விளையாட்டுப் பொம்மை ஒன்றை ரூபா 400.00 இன் அரைவாசியை விட ரூபா 75.00 கூடுதலாகக் கொடுத்து வாங்கினான் எனின், அவன் பொம்மை வாங்கச் செலவிட்ட பணத்தொகை,
i. ரூபாய் 475.00 ii. ரூபாய் 175.00 iii. ரூபாய் 275.00

36. சேகரின் பணப்பையில் 3 வகையான நாணயங்கள் 12 உண்டு. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 36.00 எனின், பையில் இருக்கும் நாணயங்கள்
i. ரூபா 1 நாணயங்கள் 5, ரூபா 2 நாணயங்கள் 3, ரூபா 5 நாணயங்கள் 4
ii. ரூபா 1 நாணயங்கள் 2, ரூபா 2 நாணயங்கள் 4, ரூபா 5 நாணயங்கள் 6
iii. ரூபா 1 நாணயங்கள் 3, ரூபா 2 நாணயங்கள் 4, ரூபா 5 நாணயங்கள் 5

37. 3cm பக்க அளவுடைய சதுர அட்டைகளைப் பயன்படுத்தி 9cm பக்க அளவுடைய சதுரமொன்றை ஆக்குவதற்குத் தேவையான சதுர அட்டைகள் எத்தனை?
i. 12 ii. 6 iii. 9

38. ரூபினி தமிழையும், கணிதத்தையும் விரும்புகின்ற போதிலும் ஆங்கிலத்தை விரும்பவில்லை. மதுரா சுற்றாடலையும், கணிதத்தையும் விரும்புகின்ற போதிலும் தமிழை விரும்பவில்லை. ராஜி கணிதத்தையும் ஆங்கிலத்தையும் விரும்புகின்ற போதிலும் சுற்றாடலை விரும்பவில்லை. மூவரும் விரும்பும் பாடம் எது?
i. தமிழ் ii. கணிதம் iii. ஆங்கிலம்

39.




A என்ற பாடசாலை படலையிலிருந்து புறப்பட்ட ரவி J என்ற மைதானம் வரை பயணித்தான். பாடசாலையிலிருந்து மைதானத்தை அடையும் வரை அவன் எத்தனை தடவை இடப்புறமாக திரும்பினான்?
i. 4 ii. 6 iii. 3

40. நகரமொன்றில் மணிக்கூட்டு கோபுரத்திற்கு மேற்கே 50m தூரத்தில் வங்கி உள்ளது. வங்கியிலிருந்து வடக்கே 50m தூரத்தில் பாடசாலை அமைந்துள்ளது. பாடசாலைக்கு கிழக்கே 100m தூரத்தில் பேருந்து தரிப்பிடம் அமைந்துள்ளது. மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து எத்திசையில் பேருந்து தரிப்பிடம் அமைந்துள்ளது?
i. வடக்கு ii. தென்கிழக்கு iii. வடகிழக்கு

# கடந்த வார (07.06.2024) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**
01. வண்ண வண்ண
02. விறுவிறு
03. விவசாயிகள்
04. காலைக்காட்சி
05. விரைகின்றனர்
06. இயற்கை
07. i. வானம் ii. மணம் iii. கனி
08. i. அரிவாள் ii. ஆற்றங்கரை iii. ஒன்று iv. செலவு
09. i. கற்ற இளைஞர்கள் விவசாயம் செய்ய முன்வர வேண்டும்.
ii. மீன்கள் நீரில் வாழும்
iii. குரங்குகள் மரத்திற்கு மரம் தாவித் திரிந்தன.
iv. மரங்களின் வேர்கள் நீரை நாடிச் சென்றன.

**II.**
10. நானும் அப்பாவும் சந்தையில் இருந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தோம்.
11. நல்லவர்களோடு சேர்ந்தால் நாய்க்கும் பகுத்தறிவு ஏற்பட்டுவிடும்.
12. அவள் தனது அவசர புத்தியை எண்ணிக் கவலைப்பட்டாள்.
13. மயில்கள் அழகாக நடனம் ஆடின.
14. அவர்கள் சிறந்த விளையாட்டு வீரர்கள்.
15. யானைகள் மரங்களை முறித்தன.
16. i. மாங்காய் ii. ஆற்றங்கரை iii. அகமகிழ்ந்து iv. வெந்நீர்
17. i. கம்பி ii. சட்டி iii. தம்பி
18. i. விளையாட்டு வீரன் மைதானத்தில் விளையாடினான்.
ii. பூனை பாலைக் குடித்ததும் பூனையின் தாகமும் களைப்பும் நீங்கியது.
19. i. குரங்கு ii. கப்பல்

**III.**
20. i. Knife ii. Carrot
ii. i. This is my Father ii. I am reading a book
21. 648
22. i. XII ii. XVI
23. 0.2
24. i. வடகிழக்கில் ii. மேற்கு
25. 650ml
26. i. 3 மணித்தியாலம் 25 நிமிடம் ii. 10:50 / 15:25
27.



28. 8
29. i. 38
ii. 5A
iii. 51
iv. 102

**IV.**

| | | |
|---|---|---|
| 30. 2 | 39. 3 | 49. 1 |
| 31. 1 | 40. 3 | 50. 3 |
| 32. 2 | 41. 2 | 51. 1 |
| 33. 1 | 42. 3 | 52. 3 |
| 34. 1 | 43. 3 | 53. 1 |
| 35. 2 | 44. 2 | 54. 3 |
| 36. 3 | 45. 1 | 55. 3 |
| 37. 2 | 46. 2 | 56. 3 |
| 38. 1 | 47. 3 | 57. 2 |
| | 48. 3 | 58. 2 |
| | | 59. 3 |



பேருவளை சீனன்கோட்டையிலிருந்து இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற புனித மக்காவுக்கு சென்றுள்ள ஷாதுலிய்யா தரீக்காவின் முக்கியஸ்தர்கள், இஹ்வான்கள் ஷாதுலிய்யாத் தரீக்காவின் உலக ஆன்மீக தலைவர் மர்ஹூம் செய்ஹுஸ் ஸஜ்ஜாதா அஷ் செய்ஹ் அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி (ரஹ்) அவர்களின் புதல்வரான அஷ் செய்ஹ் முஹம்மத் அஜ்வாத் அல் பாஸி நாயகம் ஜித்தாவிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தனர். சீனன்கோட்டை ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட பணிப்பாளர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.ஜே.எம். பஸ்லான் (அஷ்ரபிபீ.ஏ.) அக்கலாபீட இணைப் பொருளாளர் அல்ஹாஜ் மிஸ்ராஜ் மதீன்,அல்ஹுமைஸ்ரா தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்க முக்கியஸ்தர் அல்ஹாஜ் அப்ராஸ் அப்துல்லாஹ்,சீனன் கோட்டை பாஸியா பெரிய பள்ளிவாசல் பிரதம முஅத்தின் அல்ஹாஜ் ஸஹ்ரான் முர்ஸி,சமூக சேவையாளர் அல்ஹாஜ் ரவ்ஸான் முர்ஸி ஆகியோர் இச்சந்திப்பில் பங்குபற்றினர். (படம்: பேருவளை நிருபர்)

# கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி

**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி கண்டி போகம்பறை விளையாட்டு மைதானத்தில் அதன் அதிபர் நதீரா இஸ்மாயீல் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேசிய கெடட் குழு அலுவலக உத்தியோகத்தர் லெப்டினல் கேணல் எம். டப்ளியூ. டி.எம்.குமாரி பண்டார, கண்டி கல்வி வலய தமிழ் மொழி பிரிவுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் நூருல் அமீன், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார், கண்டி மாநகர சபை முன்னாள் அங்கத்தவர் அஸ்மி மரிக்கார் உட்பட பலர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதில் போட்டியிட்ட ஆயிஷா, பாத்திமா, ஆமீனா , கதீஜா ஆகிய நான்கு இல்லங்களில் கதீஜா இல்லம் 427 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், ஆமீனா இல்லம் 377 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், ஆயிஷா இல்லம் 272 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், பாத்திமா இல்லம் 270 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். மேற்படி விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு வைபவத்தில் எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம்.







அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமான இராஜதந்திர உறவின் 76 வருடங்களை முன்னிட்டு அமெரிக்கா இலங்கை முப்படையினருக்கு ஆயுத உபகரணங்கள் உதவித்திட்டங்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமானப்படை அதிகாரிகளிடம் கையளித்தனர். இந்நிகழ்வு விமானப்படைத் தளபதி உதயனி ராஜபக்ச மற்றும் அமெரிக்காவின் தூதுவர் ஜுலி சங் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. (படம் : தெஹிவளை, கல்கிசை விசேட நிருபர்)

# தலவாக்கலையில் ரயில் தடம்புரள்வு மலையக போக்குவரத்து சேவை பாதிப்பு

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**



பதுளையிலிருந்து கொழும்பு கோட்டையை நோக்கி பயணித்த 1008 பயணிகள் போக்குவரத்து ரயில் நேற்று (13) பிற்பகல் 3 மணியளவில் தண்டவாளத்திலிருந்து தடம்புரண்டமையால் மலையக ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

தலவாக்கலை ஹற்றன் ரயில் மார்க்கத்தில் 118 மைல் கல்லுக்கு அருகில் ரயில் தடம்புரண்டுள்ளது.

இதனால் மலையக ரயில் போக்குவரத்து தற்காலிகமாக தடைப்பட்டுள்ளளதாக நாவலப்பிட்டி ரயில்வே காரியாலய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், IOM உடன் இணைந்து காலநிலை மாற்றத்திற்கான இளைஞர் ஊக்குவிப்பு திட்டம் (YAP4C)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கையில் இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்புடன் (IOM) இணைந்து காலநிலை நகர்வுக்கான இளைஞர் முடுக்கித் திட்டத்தைத் தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்து.

இந்த இயக்கத்தின் (YAP4C) முக்கிய நோக்கம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், இலங்கையில் ஒன்றிணைந்து செயல்படுவதற்கும் ஒத்துழைப்பதற்கும் காலநிலை மாற்றத்திற்கு எதிராக விரைவான மற்றும் பயனுள்ள நடவடிக்கை தேவைப்படும் இளைஞர்களின் இயக்கத்தை பரப்புவதாகும்.

இலங்கையில் இடம்பெயர்வதற்கான சர்வதேச அமைப்பின் தலைவர் சரத் டாஷ் தெரிவிக்கையில், மில்லியன் கணக்கான மக்களை பாதிக்கும் காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்களை நிவர்த்தி செய்வதில் இலங்கையில் இடம்பெயர்வதற்கான சர்வதேச அமைப்பு முன்னணியில் இருக்கும் அதே வேளையில், இந்த முயற்சிகளில் இளைஞர்களின் குரல்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை. எனவே இளைஞர்களின் தேவைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இடத்தின் அவசியத்தை உணர்ந்து, இந்த செயல்முறையூடாக இளைஞர் யுவதிகளுக்கு காலநிலை நடவடிக்கைக்கு அர்த்தமுள்ளதாக பங்களிக்க தேவையான கருவிகள் மற்றும் வாய்ப்புகளை வழங்க முற்படுகின்றோம் என்றார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் பசிந்து குணரத்ன கருத்துத் தெரிவிக்கையில், "உலகளாவிய போராட்டத்தில் இலங்கை இளைஞர்களை ஈடுபடுத்துவதில் இது ஒரு முக்கியமான முன்னேற்றத்தைக் குறிக்கிறது. இளைஞர்களுக்கு தேவையான கருவிகள், அறிவு மற்றும் வாய்ப்புகளை வலுவூட்டுவதன் மூலம், மேலும் நிலையான மற்றும் நெகிழ்ச்சியான எதிர்காலத்திற்காக அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க முடியும் என நம்புகிறோம். என தெரிவித்தார்.




# அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்

ஹோமாகம, வலவ்வ வீதி, இலக்கம் 20/5/B என்னும் முகவரியில் வசிக்கும் அத்தநாயக்க முதியான்சேலாகே சுரங்க புத்திக அத்தநாயக்க, முழு தீவுக்குமான சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.



கடந்த 04.06.2024 ஆம் திகதி ஹோமாகம மாவட்ட நீதிமன்றத்தில் இவர் சத்தியபிரமாணம்செய்த பின்னர் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டார்.

பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலயத்தின் திறமையான பழைய மாணவரான அவர் சாரணர் இயக்கத்தின் மூலம் மாணவர்களுக்காக பாரிய சேவையை ஆற்றி வருகின்றார்.




# நவீன அடிமைத்தனத்திற்கு எதிரான சர்வதேச மாநாடு இலங்கையில்

THE SRI LANKA SUMMIT
BALI PROCESS GOVERNMENT AND BUSINESS FORUM
COLOMBO 2024

ஆட்கடத்தல் மற்றும் அத்துடன் தொடர்புடைய சர்வதேச குற்றங்கள் தொடர்பான பாலி செயன்முறை (Bali Process) 2002 ஆம் ஆண்டு 45 உறுப்புநாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் நான்கு முகவர் நிறுவனங்களின் கூட்டிணைவாக ஸ்தாபிக்கப்பட்டது.

பாலி செயன்முறை மாநாட்டின் அரச மற்றும் வர்த்தக ஒன்றியத்தின் முதலாவது இலங்கை மாநாடு 2024 ஜூன் 13 ஆம் திகதி இரத்மலானை ஸ்டைன் கலையகத்தில் நடைபெற்றது.

நவீன அடிமைத்தனத்தின் அழிவுகள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக முக்கிய கொள்கை வகுப்பாளர்கள் சர்வதேச, வர்த்தகப் பிரமுகர்கள், இராஜதந்திரிகள், அரச நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் பலவற்றின் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இம்முறை மாநாட்டை அவுஸ்திரேலியாவின் The WalkFree மன்றம் மற்றும் கெப்பிட்டல் மஹாராஜா குழுமம் என்பன இணைந்து நடாத்தின.



கலாநிதி அன்ட்ரூ பொரஸ்ட்
நிறைவேற்றுத் தலைவர் -
போர்ட்டேஸ்கியூ



கரி போல்டி தொஹேர்
பிரதம நிறைவேற்று அதிகாரி -
பி.ரி. அடாரோ எனர்ஜி
இந்தோனேஷியா



ஏற்பாடு
சஷி ராஜமகேந்திரன் -
தலைவர்/ முகாமைத்துவ
பணிப்பாளர்
கெப்பிட்டல் மஹாராஜா குழுமம்



இலங்கைத் தலைவர் -
பாலி மாநாட்டின் அரச மற்றும்
வர்த்தக ஒன்றியம்.
ஷெவான் டானியல்
குழுமப் பணிப்பாளர் -
கெப்பிட்டல் மஹாராஜா குழுமம்

# ஹஜ் யாத்திரையை சிறப்பாக நிறைவேற்ற சவூதி வகுத்துள்ள விசேட ஏற்பாடுகள்

சவூதி அரேபிய இராச்சியம், அதன் நிறுவனர் மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துல் ரஹ்மான் ஆல் சஊத்தின் காலத்திலிருந்து, இரண்டு புனிதத் தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத்தின் காலம் வரை, அதிக எண்ணிக்கையிலான ஹஜ் மற்றும் உம்ரா யாத்ரீகர்களுக்கு இடமளிக்கும் வகையில் இரண்டு புனிதத் தலங்கள் மற்றும் மற்ற புனித இடங்களை விரிவுபடுத்தி, அங்குள்ள வசதிகளை மேம்படுத்தவும், நவீன சேவைகளை வழங்கவும் தொடர்ந்து மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வருகிறது. யாத்திரிகர்களுக்கு சேவை செய்வது என்பது சவூதி அரேபிய இராச்சியத்தின் தலைமைத்துவத்தின் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாகும். சவூதி அரேபியாவின் அனைத்து மன்னர்களும் இதை தமக்குக் கிடைத்த சிறப்பாகக் கருதி வருகின்றனர்.

சவூதி அரேபியா, அதன் தலைமையின் வழிகாட்டுதலின் கீழ், அதிகரித்து வரும் ஹஜ் மற்றும் உம்ரா யாத்ரீகர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய, இரண்டு புனிதத் தலங்களின் விரிவாக்கத் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், புனிதத் தலங்களின் பரப்பளவை அதிகரித்து, உள்கட்டமைப்பை



மேம்படுத்தி, நவீன வசதிகள் மற்றும் மேம்பட்ட போக்குவரத்து அமைப்புகளை வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இது யாத்திரிகர்களின் நடமாட்டத்தை எளிதாக்குவதோடு, அவர்களின் வசதிகளையும் உறுதி செய்கிறது.

பட்டத்து இளவரசரும் பிரதம மந்திரியுமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அறிவித்த 'விஷன் 2030' இன் கீழ், சவூதி அரேபியா இறைவனின் விருந்தினர்களுக்கு சேவை செய்ய பல திட்டங்களை வடிவமைத்துள்ளது, அதில் முக்கியமானது 'கடவுளின் விருந்தாளிகள்' திட்டம். இத்திட்டம், ஹஜ் மற்றும் உம்ரா யாத்ரீகர்களின் அனுபவங்களின் தரத்தை மேம்படுத்துவதையும், அவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை ஒழுங்குபடுத்தி வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது, இதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் இச்சேவைகளின் பயனைப் பெற முடியும்.

நவீன தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் மூலம் ஹஜ் மற்றும் உம்ரா யாத்திரிகர்களுக்கு அதி சிறந்த சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட பல முயற்சிகளை இந்த 'விஷன் 2030' உள்ளடக்கியுள்ளது. திறன்பேசிகளின் பயன்பாடுகளைப் பயன்படுத்தி, யாத்திரிகர்கள் கிரியைகள் மற்றும் கிடைக்கக்கூடிய சேவைகள் பற்றிய துல்லியமான மற்றும் நிகழ்நேர தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும், மின்னணு ஹஜ் மற்றும் உம்ரா விசா வழங்குதல் மற்றும் ஹஜ் மற்றும் உம்ரா நடைமுறைகளை நெறிப்படுத்த மின்னணு முன்பதிவு முறையை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

புனித தலைநகரின் நகர சபை, 2024 ஆம் ஆண்டிற்கான ஹஜ் திட்டத்தை தயாரித்துள்ளது. இது 11,800 ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊடாக செயல்படுத்தப்படுகிறது. அவர்கள் புனிதப் பிரதேசங்கள் முழுவதும் 28 நகராட்சி சேவை மையங்களை நிறுவியுள்ளனர். இந்த மையங்கள் 24/7 செயல்படும் மற்றும் தேவையான மனித வளம் மற்றும் தளவாட ஆதரவுடன் முழுமையாகத் தயார்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே, அவசரகால சூழ்நிலைகளைக் கையாள மத்திய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சந்தைகள், உணவுக் கடைகள், உணவகங்கள் மற்றும் தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேற்பார்வையிட பல்வேறு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.



சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில், சுகாதார அமைச்சு 16 மருத்துவமனைகள் மற்றும் 123 சுகாதார மையங்களையும், மக்கா மற்றும் புனித தளங்களில் 5 பருவ கால சுகாதார மையங்களையும் தயார் செய்துள்ளது. இம்மையங்களுக்கு, அஜ்யாத் அவசர மருத்துவமனை, அல்ஹராம் மருத்துவமனை மற்றும் மக்காவில் உள்ள புனித மசூதியின் தாழ்வாரத்தில் அமைந்துள்ள 3 சுகாதார மையங்கள் மற்றும் மக்காவில் உள்ள புனித மசூதியின் மையப் பகுதிக்கு அருகிலுள்ள இரண்டு சுகாதார மையங்கள் தேவையான உதவிகளை வழங்கி வருகிறது.



அவசரகால நிலைமைகளைப் பொறுத்தவரையில், நிம்ரா பள்ளி, அராஃபத்தின் ஜபல் அல் ரஹ்மா மற்றும் மினாவில் உள்ள ஜமாரத் பகுதி ஆகியவற்றில் 33 துணை ஆம்புலன்ஸ் குழுக்களுடன் 155 உயர் வசதிகள் கொண்ட ஆம்புலன்ஸ்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகள் யாத்திரிகர்களுக்கு சேவை செய்ய 24/7 தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

யாத்திரிகர்களின் போக்குவரத்தை கண்காணிக்கும் உச்ச நிறுவனம், இறைவனின் விருந்தினர்களை ஏற்றிச் செல்ல 3,500 பேருந்துகளை ஏற்பாடு செய்துள்ளது. இந்த பஸ் வண்டிகள் ஹஜ் பருவ காலத்தில் 12 மில்லியன் பயணங்களை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 'மஸ்ஜித் அல்ஹரம்'ஐச் சுற்றியுள்ள ஒன்பது நிலையங்கள் வழியாக போக்குவரத்துச் சேவைகளை வழங்குகிறது. 'அய்யாமுத் தஷ்ரீக்'நாட்களில் மினாவிற்கும் 'மஸ்ஜித் அல்ஹரம்' இற்கும் இடையில் யாத்திரிகர்கள் செல்வதற்கு வசதியாக 12 வழிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. சவூதி உணவு மற்றும் மருந்து ஆணைக்குழுவைப் பொறுத்தவரையில், அது தற்போதைய ஹஜ் பருவ காலத்தில் யாத்திரிகர்களின் உணவு, மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விரிவான திட்டத்தை தயாரித்துள்ளது.

இந்த ஹஜ் பருவ காலத்தின் முன்முயற்சிகளின் ஒரு பகுதியாக, மஸ்ஜித் அல்ஹரம் மற்றும் நபிகள் நாயகத்தின் மதீனாப் பள்ளிகளுக்கான மத விவகாரங்களை தலைமையகம் 'மனிதாபிமானம்' என்ற ஒரு முன்முயற்சியைத் தொடங்கியுள்ளது. யாத்திரிகர்களில் நோயுற்றோர், முதியோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரைப் பராமரித்தல், அவர்களுக்குப் பொருத்தமான வழிபாட்டுச் சூழலை உருவாக்குதல் ஆகியவை இதில் உள்ளடங்கும்.

சவூதி உள்துறை அமைச்சு, இறைவனின் விருந்தினர்களுக்கு உதவுவதற்கான பல முன்முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில், ஹிஜ்ரி 1445 ஆம் ஆண்டிற்கான ஹஜ் விசாவில் சவூதி அரேபியாவுக்குள் வருபவர்களுக்கான டிஜிட்டல் அடையாள சேவை மிகவும் முக்கியமானது. சவூதியின் 'விஷன் 2030' இன் இலக்குகளுடன் இணங்கி, மனிதகுலத்திற்கு சேவை செய்ய, டிஜிட்டல் மாற்றம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக இம்முன்முயற்சி உள்ளது.

இரண்டு புனிதத் தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத், 88 நாடுகளைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்கிய 2,300 யாத்திரீகர்களை தனது விருந்தினர்களாக அழைக்க உத்தரவிட்டுள்ளார். இதில் 1,000 யாத்திரிகர்கள் தியாகிகள், கைதிகள், காயமடைந்த பலஸ்தீனியர்களின் குடும்பங்களையும், சவூதி அரேபியாவில் பிரிக்கப்பட்ட சியாமி இரட்டையர்களின் குடும்பங்களையும் சேர்ந்த 22 யாத்திரீகர்களையும் உள்ளடக்கியுள்ளனர். இது ஹஜ் மற்றும் உம்ராவுக்கான இரண்டு புனிதத் தலங்களின் பாதுகாவலரின் விருந்தினர்களுக்கான நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகும்.

இறுதியாக, இறைவனுடைய புனித பள்ளிவாயில்களின் யாத்ரீகர்களின் வசதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு சவூதி மேற்கொண்டு வரும் விரிவான திட்டங்கள் மற்றும் நவீன முன்னேற்றங்கள் அதன் அர்ப்பணிப்பை தெளிவாக வெளிப்படுத்துகின்றன. இரண்டு புனிதத் தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் ஆகியோருக்கு சிறந்த வெகுமதிகளை இறைவன் வழங்க பிரார்த்திக்கின்றோம். அவ்வாறே, சவூதி அரேபியா பாதுகாப்பும் செழிப்பும் நிரம்பி, இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் கலங்கரை விளக்கமாக நீடிக்கவும் பிரார்த்திக்கின்றோம்.



**காலித் ஹமூத் அல்கஹ்தானி**
இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர்

---

புனித கெப்ரியல் மகளிர் கல்லூரியில்

## தமிழ்மொழிமூல உயர்தர விஞ்ஞான பிரிவை விரைவாக ஆரம்பிக்குமாறு வேண்டுகோள்

ஹற்றன் புனித கெப்ரியல் மகளிர் கல்லூரியில் தமிழ்மொழிமூல உயர்தர விஞ்ஞான பிரிவை விரைவாக ஆரம்பிக்குமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட ஹற்றன் புனித கெப்ரியல் மகளிர் கல்லூரியில் நிலவிவரும் விஞ்ஞான பாடத்துறைக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறையால் இங்கு தமிழ் மொழிமூல உயர்தர விஞ்ஞான பிரிவை ஆரம்பிப்பதற்கான இயலாமை நீடித்துவருகிறது.

ஆகவே இக்கல்லூரியின் இந்நிலைமையைக் கருத்திற்கொண்டு மிக விரைவாக தமிழ் மொழிமூல உயர்தர விஞ்ஞான பிரிவை ஆரம்பிப்பதற்கு ஆவன செய்யுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளரை எழுத்துமூலம் வலியுறுத்தியுள்ளார்.



இதுதொடர்பில் அவர் மத்திய மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது,

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட ஹற்றன் புனித கெப்ரியல் மகளிர் கல்லூரியில் சிங்கள மொழிமூல உயர்தர விஞ்ஞான பிரிவு சீராக இயங்கிவருகிறது. எனினும் தமிழ் மொழிமூல உயர்தர விஞ்ஞான பிரிவை இங்கு ஆரம்பிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இதனால் இக்கல்லூரியில் உயர்தர விஞ்ஞான பிரிவுக்கு தகுதிபெறும் மாணவியர் வேறு பாடசாலைகளை நாடிச்செல்ல வேண்டிய நிலைமை நீடித்து வருகிறது.

இவ்விடயம் சம்பந்தமாக ஹற்றன் வலயக்கல்விப் பணிப்பாளருடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் துறைசார் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவர் தனது இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார் என்பதை தங்களுக்கு அறியத்தருகிறேன். ஆகவே ஹற்றன் புனித கெப்ரியல் மகளிர் கல்லூரியில் மிக விரைவாக தமிழ் மொழிமூல உயர்தர விஞ்ஞான பிரிவை ஆரம்பிப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தின் பிரதிகள் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, ஹற்றன் வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் ஹற்றன் புனித கெப்ரியல் மகளிர் கல்லூரி அதிபர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சரின் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

---

மலைச்சாரல்

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு மரக்கன்று நடும் நிகழ்வு





உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனம், சுற்றாடல் அதிகார சபை வனவிலங்கு திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் அண்மையில் நானுஓயா சமர்செட் மற்றும் பெயாரவெல் பகுதிகளில் மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நுவரெலியா பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரிகள், வனவிலங்கு திணைக்களத்தின் அதிகாரிகள், தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் நிஷாந்த அபேசிங்க, பிராந்திய முகாமையாளர் கோசல விஜயசேகர, சிரேஷ்ட பொதுமுகாமையாளர் ஏரங்க எகடோவில மற்றும் தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனத்தின் முகாமையாளர்கள், கார்லிபேக் தமிழ் வித்தியாலயத்தின் மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனத்தின் ஏற்பாட்டில் சென் கிளேயார் நீரேந்தும் பிரதேசத்தை அண்மித்த தோட்டங்களில் பத்து இலட்சம் மரக்கன்றுகள் நட்டும் ஐந்தாண்டு வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக மரக்கன்று நடும் நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



மாத்தளை நாவுல கல்வி வலயத்துக்குட்பட்ட நாலந்த மகா வித்தியாலயத்தில் ரூ.10 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்தி பணிகள் அண்மையில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க இதன் நிர்மாண பணியை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

(படம் : மாத்தளை சுழற்சி நிருபர்)

---

## சிறைக்கைதி திடீர் மரணம்

பதுளை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக் கைதியொருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்குளி பகுதியை சேர்ந்த 50 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதி ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என தெரிய வருகின்றது.

தல்தென திறந்தவெளி சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்டு எதிர்வரும் ஜூலை மாதம் விடுதலை செய்யப்படவிருந்த நிலையில் திடீர் சுகவீனம் காரணமாக பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் நேற்றுமுன்தினம் (12) 12.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

---

## நிதிமோசடி குற்றச்சாட்டிலிருந்து ரஞ்சன் ராமநாயக்க விடுதலை

(அக்குறணை குறூப் நிருபர்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல சிங்கள சினிமா நடிகருமான ரஞ்சன் ராமநாயக்க மீது சுமத்தப்பட்ட நிதிமோசடி குற்றச்சாட்டிலிருந்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.



கண்டி பிரதான நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் சகல குற்றங்களிலிருந்தும் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

கண்டி பிரதேச பெண் ஒருவரை திருமணம் செய்வதாக ஏமாற்றி அவரிடமிருந்து ரூ.10 இலட்சம் பணத்தை மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கட்டுகஸ்தோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முறைப்பாடு தொடர்பாக கடந்த 13 வருடங்களாக விசாரணைகள் இடம்பெற்ற வேளை கடந்த 12ஆம் திகதி மேற்படி வழக்கு விசாரணைகள் நிறைவடைந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

கண்டி மாஜிஸ்திரேட் மற்றும் மேலதிக மாஜிஸ்திரேட் உட்பட பல நீதிமன்றங்களில் இதுதொடர்பான விசாரணைகள் இடம்பெற்றன. இறுதியாக விசாரணை நடைபெற்ற போது கண்டி பிரதான நீதவான் சாமர விக்ரமநாயக்க மேற்படி தீர்பை வழங்கி அவரை விடுதலை செய்தார்.

---

## அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

உடத்தலவின்ன மடிகேயைச் சேர்ந்த ஹனீப் மேர்ஸா அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.



உடத்தலவின்ன மடிகே ஜாமிஉல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் கல்லூரியின் அபிவிருத்தி அமைப்புக்களில் சிறப்பாக செயற்படுவதோடு திட்டங்களையும் செயற்படுத்தி வருகிறார். இவர் கூட்டுறவு அபிவிருத்தி அதிகாரி எம். சி. எம். அன்வர் நஜிமுன் நிஸா தம்பதிகளின் புதல்வராவார்.

---

## அஞ்சல் ஊழியர் சங்கத்தினர் சுகவீன விடுமுறை போராட்டம்

நாடளாவியரீதியில் ஒன்றிணைந்த அஞ்சல் ஊழியர் சங்கத்தினர் சுகவீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டனர்.

தொழிற்சங்க நடவடிக்கைக்காக பணி புறக்கணிப்பில் அஞ்சல் ஊழியர்கள் ஈடுபட்டனர். இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்தனர்.



பணி புறக்கணிப்பு காரணமாக நுவரெலியா பிரதான தபால் நிலையத்தின் ஊடாக விநியோகிக்கக்கூடிய தபால்கள் பொதியிடப்பட்ட நிலையில் ஓரங்கட்டப்பட்டுள்ளது.

தபால் நிலையங்களைப் பாதுகாக்கவும், தபால் ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுக்கவும், என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நுவரெலியா பிரதான தபால் நிலைய ஊழியர்கள் சுகவீன விடுமுறை அடையாள பணி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அதேநேரத்தில் நுவரெலியா தபால் நிலையத்துக்கு வருகை தரும் வெளிநாட்டு உல்லாச பயணிகளின் நன்மைகருதி முத்திரை வழங்கும் பிரிவு மற்றும் பதிவு தபால் ஒப்படைக்கும் பிரிவு மாத்திரம் இயங்கியது.

இதற்கென மூன்று அதிகாரிகள் மாத்திரம் கடமையில் ஈடுபட்டனர்.

# மட்டக்களப்பு பாலர்சேனை கிராமத்தின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

## தொழிலதிபர் வழங்கிய உதவி




மட்டக்களப்பு பாலர்சேனை கிராமத்தின் மிக நீண்ட காலப் பிரச்சனையாக இருந்து வந்த குடிநீர் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வினை பிரபல தொழிலதிபரும் மட்டக்களப்பு வர்த்தக சங்க தலைவருமான தேசபந்து முத்துக்குமார் செல்வராசா பெற்றுக்கொடுத்துள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவின் வேப்பவெட்டுவான் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பாலர் சேனை கிராமத்தில் சுமார் 400 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில், இங்கு குடிநீர் பிரச்சினை நீண்ட காலமாக பாரிய பிரச்சினையாக இருந்து வந்தது. இங்கு 90 வீதமான மக்கள் கூலித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த கிராமத்தில் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் குடிநீரை பெற்று வந்திருந்த போதிலும் அவை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பழுதடைந்து பாவனைக்கு உதவாமல் காணப்பட்டு வரும் நிலையில் அவற்றை திருத்தி அமைத்து அவற்றை பயன்படுத்துவதற்கான பணிகளை தேசபந்து செல்வராசா மேற்கொண்டுள்ளார்.

இக்கிராமத்தில் 06 குழாய் கிணறுகளும், கல்லால் கட்டப்பட்ட சில பொது கிணறுகளும் காணப்பட்ட நிலையில் பொதுக்கிணறுகள் அனைத்தும் கோடை காலத்தில் வற்றி விடும் நிலையில், குழாய்கிணறுகளில் தண்ணீர் இருந்தாலும் அவை பழுதடைந்துள்ளதால், தண்ணீரை பெற்று கொள்ள முடியாத நிலையில் அப்பகுதி மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை அனுபவித்து வந்தனர்.

இதனடிப்படையில் குறித்த கிராமத்திற்கு நேரடியாக சென்று மக்களிடம் பிரச்சனைகளை கேட்டறிந்து கொண்ட தேசபந்து செல்வராசா உடனடியாக பழுதடைந்த மூன்று குழாய் கிணறுகளையும் திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்துள்ளார். அத்தோடு கொங்கிறீட் குழாய்களை பொருத்தி நிரந்தரமான சில கிணறுகளையும் அமைத்து கொடுப்பதற்குமான உரிய நடவடிக்கைகளையும் இவர் ஆரம்பித்து வைத்துள்ளார்.

அத்தோடு பால்சேனை கிராமத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினையை படிப்படியாக தீர்த்து வைக்க தான் முயற்சிகளை மேற்கொண்டு தீர்வை பெற்றுத் தருவதாகவும் தேசபந்து செல்வராசா இதன் போது தெரிவித்துள்ளார். தேசபந்து செல்வராசா அவர்களின் மனிதநேய செயற்பாட்டினை பாராட்டிய இக்கிராம மக்கள் அவருக்கும் அவருடன் இணைந்து செயற்பட்டுவரும் சமூக செயற்பாட்டாளரான ஆர்.வசந்தராசாவுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

**எம். எஸ். எம். நூர்தீன்**
புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

# தீப்பெட்டி கைத்தொழில் வீழ்ச்சி

*(அக்குறணை குறூப் நிருபர்)*

பிளாஸ்டிக் 'லைட்டர்' இறக்குமதியால் பாரம்பரிய தீப்பெட்டி கைத்தொழில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்து ஊழியர்கள் கண்டியில் ஆர்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

கண்டியை மையமாக கொண்டு இயங்கும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் ஊழியர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கண்டி 'ட்ரொரிங்டன் ' பிரதேசத்தில் இடம்பெற்ற ஆர்பாட்டத்தில் கண்டி, குண்டசாலை, பல்லேகல போன்ற இடங்களைச் சேர்ந்த முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களைச் சேர்ந்த ஊழியர்களே கலந்து கொண்டனர்.

பெண்கள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இதில் பங்கு கொண்டனர்.

நவீன தயாரிப்புக்களான 'பிளாஸ்டிக் லைட்டர்கள்' தற்போது குறைந்த விலையில் விற்பனைக்கு வந்துள்ளதாகவும் இவற்றால் சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படுவது மட்டுமல்லாது பாரம்பரிய தீப்பெட்டி கைத்தொழில் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## நிதி, பெறுமதி பரிமாற்ற சேவை நிறுவனங்கள்

# மத்திய வங்கியில் பதிவு செய்யப்படுவது கட்டாயம்

*லோரன்ஸ் செல்வநாயகம்*

நிதி அல்லது பெறுமதி பரிமாற்ற சேவைகள் வழங்கும் அனைத்து நிறுவனங்களும் இலங்கை மத்திய வங்கியில் கண்டிப்பாக பதிவு செய்யப்பட வேண்டும் என, மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதனை ஜூன் 03 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் செயற்படுத்த வேண்டுமென்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள மத்திய வங்கி,

பதிவு செய்யப்படாத அல்லது அனுமதிப்பத்திரம் இல்லாத நிதி அல்லது பெறுமதியான சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் நடவடிக்கைகளை முறைப்படுத்துவதே இதன் நோக்கம்.

முறையான நிதி பரிமாற்றங்களில் ஈடுபடுவதற்கு மத்திய வங்கி வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் நிதிக் கட்டமைப்பை உறுதிப்படுத்தவே இந்த ஒழுங்கமைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சில நிதி நிறுவனங்கள் முறையான கட்டமைப்புக்கு வெளியிலிருந்து செயற்படுகின்றன. இதனால், நிதி பரிவர்த்தனை செயற்பாடுகளை சீர்குலைக்கிறது.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணவே, நிதி மற்றும் பெறுமதியான சேவைகள் வழங்குதல் கட்டளைச் சட்டம் வெளியிடப்பட்டது.

# சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு மக்கள் வாக்களிக்கப் போவதில்லை

## எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் இது தெரிய வரும்

ஜனாதிபதி தேர்தலில் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்களென, இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பது தொடர்பாக மக்கள் இருமுறை சிந்திப்பார்கள். கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணியினரின் செயற்பாடுகளை மக்கள் மறக்கவில்லை.

கடந்த காலங்களில் மக்கள் எதிர்நோக்கியிருந்த நெருக்கடிகளை சாதகமாக பயன்படுத்தியே, வாக்கு எண்ணிக்கையை பெறுவதற்கு தேசிய மக்கள் சக்தியினர் முயற்சிக்கின்றனர்.

ஆனால், இன்று நிலைமை மாறியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்கள் சுமுகமாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார்.

இன்று நாட்டில் அத்தியாவசிய பொருட்கள், எரிவாயு, எரிபொருள் ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு இல்லை. மக்களின் வாழ்க்கை சுமையைக் குறைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடந்தும் முயற்சித்து வருகின்றார்.

நாட்டின் பொருளாதாரம் ஸ்திர தன்மை அடைந்துள்ளது. நாட்டுக்குள் சுமுகமான சூழ்நிலை காணப்படுகிறது.

எனவே, இவ்வாறான ஒரு சூழலில் தேர்தல் நடைபெறவுள்ளதால் நாட்டுக்கு பொருத்தமான தலைவர் ஒருவரே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்றும் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.


# பெறுகை அறிவித்தல்

## வெகுசன ஊடக அமைச்சு

N-75

வெகுசன ஊடக அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் அரச அச்சுத் திணைக்களத்திற்கு பின்வரும் இயந்திரங்களை வழங்குதல், பொருத்துதல், செயற்படுத்துதல் மற்றும் ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களின் இலங்கையின் அதிகாரபூர்வ முகவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| **குறிப்பீட்டிலக்கம்:** | SI 2024/11 |
| **இயந்திரம்:** | Both Side Four Colour Vertical Web Offset Printing Machine For Book Printing |
| **எண்ணிக்கை:** | 01 |
| **விலைக்கோரல் இறுதி நாள்:** | 2024-07-05 - பி.ப. 2.00 மணி வரை |
| **மீளளிக்கப்படாத கட்டணம்:** | ரூபா 4,500,000.00 |
| **விநியோகிக்க வேண்டிய இடம்:** | அரச அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 08. |

இதற்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-06-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அரச அச்சுத் திணைக்களத்தின் கூட்ட மண்டபத்தில் இடம்பெறும்.

2024-07-05ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை அரச அச்சுத் திணைக்களத்தில் மேற்கூறிய விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் அவ்வேளையிலேயே விலைமனுக்கள் திறக்கப்படும்.

விலைமனுக்களை அரச அச்சுத் திணைக்களத்தில் வெளிநாட்டு வழங்கல் பிரிவில் 2024-06-14ஆம் திகதி முதல் 2024-07-04ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். சகல விலைமனுக்களுக்காகவும் மேற்கூறிய மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இதன் பொருட்டு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரையில் அரச அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைக்கோரலுக்கு இயைபான ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**வெகுசன ஊடக அமைச்சு,**
**இல. 163, எசிதிசி மந்திரய,**
**கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொட,**
**கொழும்பு-05.**

**தொலைபேசி/தொலைநகல்: 011-2513467 / 011-2513458**
**இணையதளம்: www.media.gov.lk**

2024-06-13.



# இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்

## கைத்தொழில் அமைச்சு

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்காக அழைப்பு

## கொக்கிலாயில் உள்ள முழுமையான கனரக கனிப்பொருளை வேறாக்கும் பொறித்தொகுதியை நிறுவுவதற்கு செயற்றிட்ட முன்மொழிவுகள் மற்றும் செயற்றிட்ட வியாபார திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஆலோசகரொருவரைத் தெரிவு செய்தல்

**கேள்வி இல. LMSL/SUP/CPCD/01/2024**

01 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதில் தங்களின் ஆர்வத்தைக் குறிப்பிட தகுதியான ஆலோசகர்களை இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்டின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார். ஆர்வமுள்ள ஆலோசகர்கள் சேவைகளைச் செய்யத் தகுதியானவர்கள் என்பதைக் குறிக்கும் தகவல்களை வழங்க வேண்டும். ஆலோசகர்கள் தங்கள் தகுதிகளை மேம்படுத்திக் கொள்ளலாம்.

02. அரசாங்க வழிகாட்டுதலில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின்படி ஆலோசனை நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படும்: தரம் மற்றும் செலவு அடிப்படையிலான (QCBS) முறையை பின்பற்றி ஒரு ஆலோசகரைத் தெரிவு செய்து பணிக்கமர்த்தப்படும்.

03. இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், வழங்கல் முகாமையாளரிடமிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-06-14ஆம் திகதி முதல் 2024-07-11ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும், மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள் 011-2882025/2883951/2883951

04. இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் வழங்கல் முகாமையாளருக்கு ஒரு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரம் ரூபாவை (ரூ. 2,000.00) ரொக்கப் பணமாக செலுத்துவதன் மூலம் 2024-06-14ஆம் திகதி முதல் 2024-07-11ஆம் திகதி வரையில் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை ''குறிப்பு விதிமுறைகள்'' மற்றும் ''EOI தகவல் படிவங்கள்'' தற்போது கிடைக்கத்தக்கதாகவுள்ளது என்பதுடன் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

05. முன்மொழிவுகளை 2024-07-12ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், 341/21, சரண மாவத்தை, இராஜகிரிய எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்டில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. ஆர்வ வெளிப்பாடுகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்டிற்கு கொக்கிலாயில் உள்ள முழுமையான கனரக கனிப்பொருளை வேறாக்கும் பொறித்தொகுதியை நிறுவுவதற்கு செயற்றிட்ட முன்மொழிவுகள் மற்றும் செயற்றிட்ட வியாபார திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஆலோசகரொருவரைத் தெரிவு செய்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

07. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-06-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்டின் மாநாட்டு அறையில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள ஆலோசகர்கள் பெறுகைக் குழு (CPCD),**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**341/13, சரண மாவத்தை, இராஜகிரிய.**



EDCS

# வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கம்

## பதவி வெற்றிடங்கள்

வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கம் நாட்டின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்களுக்காக உருவாக்கப்பட்ட கூட்டுவுச் சங்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சிக்கன கடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகச் செயற்படும் கூட்டுறவுச் சங்கமாகும்.

இந்தச் சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள உதவிக் கணக்காளர், உதவிக் கணக்காய்வாளர் மற்றும் பயிற்சியளிக்கும் அதிகாரி எனும் பதவி வெற்றிடங்களுக்காக திறமை மிக்க, சுறுசுறுப்பான மற்றும் அர்ப்பணிப்புடன் வேலை செய்யக்கூடிய தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### உதவிக் கணக்காளர் பதவி - E.3.2.1 (நிறைவேற்றுத் தரத்தின் IIIம் வகுப்பு)

**தகைமைகள்:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வர்த்தகம் / நிதி முகாமைத்துவம் / கணக்கியல் போன்ற துறைகளில் பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் இடைநிலை பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது பட்டயக் கணக்காளர்களின் முகாமைத்துவ நிறுவனத்தில் CIMA இறுதிக் கட்டத்தில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப நிறுவனமொன்றில் கணக்கியல் துறையில் நிறைவேற்றுத் தர பதவியொன்றில் 2 வருட அனுபவம்

அல்லது

- இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமொன்றில் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப நிறுவனமொன்றில் கணக்கியல் துறையில் நிறைவேற்றுத் தர பதவியொன்றில் 3 வருட அனுபவம்

அல்லது

- இலங்கை கணக்கியல் நுட்பவியல் நிறுவனத்தின் AAT இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப நிறுவனமொன்றில் கணக்கியல் துறையில் நிறைவேற்றுத் தர பதவியொன்றில் 4 வருட அனுபவம்
- பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் கணக்கியல் தொடர்பான உயர் டிப்ளோமா அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப நிறுவனமொன்றில் நிறைவேற்றுத்தர பதவியொன்றில் 6 வருட அனுபவம்

அல்லது

- இலங்கை தேசிய கூட்டுறவு சபையில் கூட்டுறவு அபிவிருத்தி உயர்தரத்தில் சித்தி அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப நிறுவனமொன்றில் கணக்கியல் துறையில் நிறைவேற்றுத் தர பதவியொன்றில் 7 வருட அனுபவம்

**சம்பள அளவு:** மாதாந்தம் ரூபா 29,900 - 250x10 - 275x10 - ரூபா 26,950.00

**முகாமைத்துவ உதவியாளர் பதவி: 0.1 (செயற்பாட்டுத் தரத்தின் IIIம் வகுப்பு)**

**தகைமைகள்:**

- க.பொ.த. உயர் தரத்தில் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம், மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி

அல்லது

- கணிதம், மொழி மற்றும் ஆங்கில பாடங்கள் உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியுடன் தேசிய கூட்டுறவுச் சபையினால் வழங்கப்படும் கூட்டுறவு அபிவிருத்தி சாதாரண தரத்தில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில்நுட்ப நிறுவனத்தில் அலுவலக வேலைகள் தொடர்பில் ஒரு வருடகால அனுபவம்

அல்லது

- அலுவலக முகாமைத்துவ பாடத்தில் திறமைச் சித்தியுடன் தேசிய கூட்டுறவுச் சபையினால் வழங்கப்படும் கூட்டுறவு அபிவிருத்தி சாதாரண தரத்தில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில்நுட்ப நிறுவனத்தில் அலுவலக வேலைகள் தொடர்பில் 02 வருடகால அனுபவம்

அல்லது

- அலுவலக வேலை உதவியாளர் பதவியின் 1ம் தரத்தில் 05 வருட அனுபவம்

**சம்பள அளவு:** மாதாந்தம் ரூபா 21,700 - 250x10 - 275x10 - ரூபா 26,950.00

மேற்கூறிய மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக 17,800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு உரித்தாகும்.

### கணக்காய்வாளர் - E.3.3.1 (நிறைவேற்றுத் தரத்தின் IIIம் வகுப்பு)

**தகைமைகள்:**

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

- இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமொன்றில் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறை பதவியொன்றில் ஒரு வருட கால அனுபவம்

அல்லது

- இலங்கை கணக்கியல் நுட்பவியல் நிறுவனத்தின் AAT இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையில் 02 வருட கால அனுபவம்

அல்லது

- பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் கணக்கியல் தொடர்பான உயர் டிப்ளோமா அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையில் 03 வருட கால அனுபவம்

அல்லது

- இலங்கை தேசிய கூட்டுறவு சபையினால் நடாத்தப்படும் கூட்டுறவு அபிவிருத்தி உயர்தரத்தில் சித்தி அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையில் 05 வருட கால அனுபவம்

அல்லது

- முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 1ஆம் தரத்தில் கணக்கியல் அல்லது கணக்காய்வுப் பிரிவிற்கு இயைபாக 05 வருட கால அனுபவம்

**சம்பள அளவு:** மாதாந்தம் ரூபா 28,700 - 425x10 - 450x10 - ரூபா 37,450.00

மேற்கூறிய மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக 17,800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு உரித்தாகும்.

### பயிற்சியளித்தல் அதிகாரி - E.3.2.1 (நிறைவேற்றுத் தரத்தின் IIIம் வகுப்பு)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01 - தலைமை அலுவலகம்**

**தகைமைகள்:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மனித வளம் / முகாமைத்துவம் / சமூக விஞ்ஞானம் போன்ற துறைகளில் பட்டம் சகிதம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிற்சியளித்தல் துறையில் ஒரு வருட கால அனுபவம்

அல்லது

- பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா சகிதம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிற்சியளித்தல் துறையில் 03 வருட கால அனுபவம்

அல்லது

- இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் கூட்டுறவு அபிவிருத்தி உயர் தரத்துடன் சகிதம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிற்சியளித்தல் துறையில் 06 வருட கால அனுபவம்

**சம்பள அளவு:** மாதாந்தம் 29,900 - 475X10 - 500X10 - ரூபா 39,650.00

**பொது நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரர் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சுய தரவுகள் சகிதம் சகல கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உள்ளடக்கி தங்களாலேயே தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் தற்போது நீங்கள் கூட்டுறவுச் சங்கமொன்றில் சேவையில் உள்ளவராயின், குறித்த விண்ணப்பத்தை அந்த கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- இப்பதவிகள் ஓய்வூதியம் அற்ற பதவிகளாகும். தேர்ந்தெடுக்கப்படுபவரின் சம்பளத்தில் 10%, நிறுவனத்தினால் 15% சகிதம் ஊழியர் சேமலாப நிதியில் வைப்புச் செய்யப்படும்.
- நேர்முகப்பரீட்சையின் மூலம் தகைமை வாய்ந்தவர் தேர்ந்தெடுக்கப்படுவார். பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
- உதவிக் கணக்காளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் போன்ற பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் சங்கத்தின் எந்தவொரு மாவட்ட அலுவலகத்திலும் சேவையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.
- தமது கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி, பிறப்புச் சான்றிதழின் பிரதி மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி சகிதமான விண்ணப்பப் படிவத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2024-06-29ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்புதல் வேண்டும்.

**பிரதான தலைவர்,**
**வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கம்,**
**294, காலி வீதி, கொழும்பு-03.**
**தொலைபேசி இல. 011 2370717 தொலைநகல் இல. 011 2577475**

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## விலைமனுக்களுக்கானஅழைத்தல்

### இலங்கை போக்குவரத்து சபை (SLTB)

### SUPPLY AND DELIVERY OF ASHOK LEYLAND NEW CRANKSHAFTS & TATA NEW CRANKSHAFTS

**பெறுகை இல.: SLTB/TS/GEN/02-III/2024**

1. 2024.07.05 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிவரையும் 30 நாட்கள் கடன் அடிப்படையில் Ashok Leyland New Crankshafts & Tata New Crankshafts இன் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்காக தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இபோச பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார். விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கள் நடைமுறை மூலம் நடத்தப்படும். 2024.06.14 ஆம் திகதியிலிருந்து 2024.07.04 ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 20000 ரூபாவை செலுத்தியபின்னர், கொழும்பு-05, கிருள வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகைக் குழுவின் செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| விளக்கம் | விலைமனு பாதுகாப்பு பெறுமதி (ரூ) |
|---|---|
| Supply & delivery of Ashok Leyland New Crankshafts & Tata New Crankshafts on 30 days credit basis | 1.2 mn |

2. ஏகநியமிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகள்/தரஅங்கீகாரம் பெற்ற ஓம்னி பஸ் உதிரிப்பாகங்களின் உற்பத்தியாளர்களின் உள்ளூர் முகவர்கள் ஆகியோர் இந்த கேள்விக் கோரலுக்கான கேள்விக் கோரல்களை சமர்ப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.
3. உரித்தான வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியான இறக்குமதிக்கான உற்பத்தியாளர்களின் அதிகாரம் மற்றும் சாட்சியமில்லாத முன்வைப்புக்கள் அல்லது உள்ளூர் உற்பத்தியாளர்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.
4. 2024.06.24 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைப் பிரிவில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
5. ஒவ்வொரு கேள்விதாரரும் மற்றும் முகவரொருவராக அல்லது பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக கேள்விதாரருக்கு அல்லது எந்தவொரு கேள்விதாரரின் சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்விக் கோரல்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக தன்னை 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்தல் வேண்டும். பதிவின் மூலப்பிரதியானது கேள்விக்கோரலுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் கேள்விதாரர்களின் கேள்விக்கோரல்கள் நிராகரிக்கப்படும்.
6. கேள்விக் கோரல்கள் 2024.10.06 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் கோரப்பட்ட விலைகள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து ஒரு (01) வருட காலத்திற்கு நிலையாகவிருத்தல் வேண்டும்.
7. 2024.11.06 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தலும் வேண்டுமென்பதுடன் இபோச இனால் விண்ணப்பிக்கும் எழுத்து மூலமான முதலாவது கோரிக்கையின் பேரில் மாற்ற இயலாததும் நிபந்தனையற்ற தன்மையில் மாற்றக் கூடியதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவினால் பதிவு பெற்றதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனு பாதுகாப்பு பெறுமதியில்லாமல் இணைக்கப்படும் எந்தவொரு கேள்விக்கோரலும் நிராகரிக்கப்படும்.
8. கேள்விக்கோரல் ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் கேள்விதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது இலட்சினை பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. கேள்விக் கோரல்கள் 2024.07.05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் ஒன்றில் கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை இபோச பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்தில் பேணப்படும் விலைமனுப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் கிடைக்கும் தன்மையில் அனுப்பப்படல் வேண்டும். முத்திரைக்குறி பொறிக்கப்பட்டு விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Bid for the Supply and delivery of Ashok Leyland New Crankshafts & Tata New Crankshafts" என குறிப்பிடப்படல் வேண்டும்.
10. விலைமனுக்கோரல்கள் அவைகளை மூடிய பின்னர், கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை, பெறுகைப் பிரிவில் உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கோரல்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**இலங்கை போக்குவரத்து சபை,**
**இல.: 200, கிருள வீதி,**
**கொழும்பு-05.**
**விசாரணைகள்:** **செயலாளர், இபோச பெறுகைக் குழு,**
**தொலைபேசி : 011 2588457, 011 7706110, 0771056110.**

---

## விலைமனுக்கோரல்களுக்கான அழைத்தல்

### வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலைய மற்றும் விமான சேவைகள்

**BID No.: 021/T/2024**

### SUPPLY OF THERMAL AND OPTICAL CCTV CAMERAS AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE

Supply of Thermal and Optical CCTV Cameras at Bandaranaike International Airport, Katunayake என்பதற்காக வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் ஆகியவற்றின் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான கோரிக்கைக் கடிதத்துடன் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவண கட்டணமாக மூவாயிரத்து எழுநூறு (3,700 ரூபா) ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.06.17 ஆம் திகதியிலிருந்து 2024.07.08 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிகமாக விரும்பின், மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம்.

விலைமனுக்கள் 2024 ஜூலை 09 ஆம் திகதியன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன்பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் கோரும்போது பெறக்கூடிய வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கில் ஒரு இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரம் இலங்கை ரூபாவிற்கு (162,000 இ. ரூபா) நிகரான வங்கி உத்தரவாதமொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக தகவலையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலைய சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து 011-2264103 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் head.scm@airport.lk என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது www.airport.lk என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீலங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

---

### வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

## விலைமனுக்கோரல்

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் அதிரடிப்படை படையணி கட்டிடத் தொகுதி இலக்கம் 2 சுற்றி எல்லைப்புற சுவர் அமைப்பதற்காக விலைக் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.**

### CONSTRUCTION OF BOUNDRY WALL AT BILLET FOR COMMANDO BRIGADE BUILDING NO. II.BIA, KATUNAYAKE

**விலைக் கேள்வி இலக்கம் : 033/T/2024**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி சார்பில், தவிசாளரால் 'கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் அதிரடிப்படை படையணி கட்டிட இலக்கம் 2 சுற்றி எல்லைப்புற சுவர் அமைப்பதற்காக' முத்திரை குறியிடப்பட்ட விலைக் கேள்விகள், தகுதி மற்றும் தகைமைப் பெற்ற விலைக் கேள்வியாளர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன. கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு எல்லைப்புற சுவர் அமைப்பதற்காக சுமார் 19 மில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்துக்குரிய கட்டுமானப் பணிகளுக்கும் தேவையான அனைத்து கட்டிடப் பொருட்கள், தொழிற்படை தேவைப்பாடுகள், விவரக் குறிப்பீட்டில் உள்ளவாறும் மற்றும் குறித்த திட்டமிடல்கள் மற்றும் விவரக் குறிப்பீடுகளுக்கமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

நிறைவு செய்யப்பட வேண்டிய காலவெல்லை நூற்று இருபது நாட்களாகும் (120)

தேசிய போட்டியிடல் விலைக்கூறல் நடைமுறைகளுக்கமைவாகவே விலைக் கூறல்கள் இடம் பெறும்.

இவ் ஒப்பந்தம் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ள தகைமைகளைக் கொண்ட விலைக் கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன் இந்த நிறுவனத்தில் இதற்கு முன்னர் தடுப்புப் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர்/ தாபனமாக இருத்தல் வேண்டும். கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA), கட்டிடங்கள் நிர்மாணம் அல்லது நெடுஞ்சாலைகள் கட்டுமானம் தொடர்பாக C6 தரத்தில் மற்றும் C5 தரத்தில் மாத்திரம் பதிவு செய்த அனுபவமுள்ள ஒப்பந்ததாரராக இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக் கேள்வியாளர்களுக்கு மேலதிக தகவல்களை பெற வேண்டுமாயின் 2024.06.17 முதல் 2024.07.08ஆம் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 09.00 மணிக்கும் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் கிளைத் தலைவர் கருத்திட்டங்கள் தொலைபேசி இலக்கங்கள் 011-2263700/011-2263713 அழைப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

இவ் விடயம் தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைக் கேள்வியாளர்களுக்கு 2024.06.17ஆந் திகதி முதல் 2024.07.08ஆம் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 09.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கீட்டுத் தொடர் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றினை முன்வைத்ததன் பின்னர் விலைக் கேள்வி கட்டணமாக திருப்பித்தரப்படாத ரூபா ஆறாயிரம் (ரூபா 6,000.00) காசாகச் செலுத்தி, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட அக்குறித்த விலைக் கேள்வி ஆவண இணைக்கோப்புகளைக் கொள்வனவு செய்துகொள்ள முடியும். உரிய விலைக்கேள்வி ஆவணங்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு நேரடியாக சமுகமளித்து 2024.06.17ஆம் திகதி முதல் 2024.07.08ஆம் திகதி வரை மு.ப. 09.00 மணிக்கும் பி.ப. 03.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் கட்டணமின்றி இலவசமாக பார்வையிடுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்விகள் 2024.07.09ஆந் திகதி பி.ப. 02.00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாக சமுகமளித்து அல்லது பதிவுத் தபால் மூலம் பெறுகைக் குழு இலக்கம் 02, வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கபபட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, கட்டுநாயக்க என்ற விலாசத்தில் பெறுகைக் குழுவின் தலைவருக்கு கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் அக்குறித்த நேரத்திற்கு விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிந்ததும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

விலைக் கேள்விகள் உத்தரவாதத்திற்காக சகல விலைக் கேள்வியாளர்கள், ஒரு விலைக்கேள்விக்காக ரூபா இரண்டு இலட்சம் (ரூபா 200,000.00) காசாக அல்லது விலைக்கேள்வி தகவல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தாபனமொன்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி பிணை முறியுடன் அக்குறித்த விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

சகல விலைக்கேள்வியாளர்களுக்கும் மற்றும் அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிக்கு 2024.06.28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பண்டார நாயக்க சர்வதேச விமானநிலையத்தின் கருத்திட்டப் பிரிவின் கலந்துரையாடும் அறையில் நடைபெறுகின்ற ஆரம்ப விலைக்குறிப்பீட்டுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இத்துடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

---

## விலைமனுக்கோரல்

### வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

**விலைக்கேள்வி இலக்கம். 039/T/2023**

### கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வெளிப்புற ரக முப்பத்து மூன்று கிலோவோட்ஸ் வெற்றிடம் சார்ந்த சுற்று முறிப்பான் OUTDOOR TYPE 33 KV VACUUM CIRCUIT BREAKER வழங்குதல் பொருத்துதல் மற்றும் செயல்நிலைப்படுத்துவதற்கானது

தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வெளிப்புற ரக முப்பத்து மூன்று கிலோவோட்ஸ் வெற்றிடம் சார்ந்த சுற்று முறிப்பான் OUTDOOR TYPE 33 KV VACUUM CIRCUIT BREAKER வழங்குதல் பொருத்துதல் மற்றும் செயல்நிலைப்படுத்துவதற்காக விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்பு திருப்பி தரப்படாத ரூபா ஐயாயிரம் (5,000.00) தொகை வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளரால் எழுத்து மூலமான கோரிக்கை விடுக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் www.airport.lk என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவிறக்கங்கள் மூலமும் (அமெரிக்கா டொலர் 15.00 / ரூபா 5,000.00 ஆன தொகை நிகழ்நிலையில் செலுத்துவதனூடாக) இந்த விலைக்கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் மூலம் 2024/06/17ஆம் திகதி முதல் 2024/07/08ஆம் திகதி வரை அலுவல்கள் இடம்பெறும் ஏதேனும் நாளொன்றில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் விலைக்கேள்வி இணைப்புக் கோப்புகள் பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேலேயுள்ள விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களினால் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையிலும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2024.07.09ஆந் திகதி புதன் பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்களின் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகள் திறக்கும்போது அதில் கலந்துகொள்ள முடியும். விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியிற்கு கேள்வியின் அடிப்படையில் செலுத்தக்கூடியவாறு வெளியிடப்பட்ட ரூபா மூன்று இலட்சம் (ரூபா 300,000.00) பெறுமதியான வங்கி பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய, வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) தனியார் கம்பனியின் புதிய பராமரிப்பு வேலை கட்டிடத்தொகுதியின் கூட்ட அறையில் 2024.06.02ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்ட மொன்று நடைபெறும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கங்கள். 011-2252117 / 011-2264102 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

# பெறுகை அறிவித்தல்

## வெலிகம நகர சபை - 2024ம் ஆண்டு

வெலிகம நகர சபையின் விலங்குப் பண்ணையில் மாடுகளை விற்பனை செய்வதற்காக கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் 2024.06.14 முதல் 2024.07.04 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வெலிகம நகர சபை அலுவலகத்தில் மாதிரிப் பத்திர கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

02. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் 2024.07.05 பி.ப. 2.00 வரை இடம்பெறுவதால் பொறியிடப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் "செயலாளர், நகர சபை, வெலிகம" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொண்டு வந்து ஒப்படைக்கலாம். மேலும், குறித்த முகவரியில் இடது பக்க மேல் மூலையில், "விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

03. கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2024.07.05 பி.ப. 2.30 இற்கு இடம் பெறும்.

தலைவர்,
பெறுகைக் குழு,
வெலிகம நகர சபை

தொ.பே. இலக்கம் : 041 - 2250274
041 - 2250275

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் பிட்டிபன வடக்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520006, கண்ட இல. 11, பத்திர இல. - துண்டு இல. 0082 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 523/30 வடக்கு பிட்டிபன, ஹோமாகம எனும் விலாசத்தைக் கொண்ட வெடிப்புலி அச்சிகே சோமாவதீ எனும் ஆள் 2022.04.06 ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல.06, முதலாம் ஒழுங்கை, புகையிரத நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.07.14 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

Repeat Your ad For Better Offers

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/24/PT/03/055 | Spare parts for Isuzu 4JBI Engines | 15,000.00 | 1,000.00 | 2024.07.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/03/053 | Injector Pump spares for Mitsubishi S6S Engines of Mitsubishi/Caterpillar Forklifts | 20,000.00 | 1,000.00 | 2024.07.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்துசாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்படவிரும்பினால்,பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவுசெய்து உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுசான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் (பிசிஏ 03 படிவம்)
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பொருட்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 ஜுன் 14 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கிலமொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# தெஹிவளை, களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை

## மருத்துவ உபகரணம் மற்றும் வைத்தியசாலை உபகரணம் ஆகியவற்றின் வழங்கலுக்கான பெறுகை அறிவித்தல்

தெஹிவளை, களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் கோரப்பட்ட அம்சங்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரரிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

**MEDICAL EQUIPMENT**

| No | Item | Qty | Estimated cost (Rs) (In Million) | Non refundable fee (Bid document fee) Rs. |
|---|---|---|---|---|
| 1 | Anesthesia Working Station | 3 | 36 | 9,000.00 |
| 2 | Dental X ray System | 1 | 1 | 500.00 |
| 3 | High Pressure Sterilizer | 1 | 12 | 3,500.00 |
| 4 | Multipara Monitor HighEnd | 5 | 20 | 5,000.00 |
| 5 | HolterMonitor Systems | 2 | 3 | 1,000.00 |
| 6 | ICU Ventilator (Adult) | 2 | 16 | 4,000.00 |
| 7 | Microscope - Laboratory | 1 | 0.5 | 500.00 |
| 8 | Ventilator (Neonatal) | 1 | 8 | 2,500.00 |
| 9 | R/O Plant | 1 | 5 | 1,500.00 |
| 10 | Tripple phototherapy | 1 | 0.5 | 500.00 |
| 11 | Tympanometer | 1 | 0.5 | 500.00 |
| 12 | High End Ultrasound Scanner | 1 | 20 | 5,000.00 |

**HOSPITAL EQUIPMENT**

| No | Equipment | Qty | Estimated cost (Rs) (In Million) | Non refundable fee (Bid document fee) Rs. |
|---|---|---|---|---|
| 13 | Gang Chair (4 Seater) | 100 sets | 12.5 | 2,000.00 |

கேள்விக் கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக் கோரல் மூலம் நடத்தப்படும். ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதார் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு விலைமனுவிற்கான ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைக்காக செலுத்தப்படும் கேள்வியிடக்கூடிய தொகையானது 5 மில்லியன் இலங்கை ரூபாவை விஞ்சினால், கேள்விதாரர் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்படும் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

2024.06.14 ஆம் திகதியிலிருந்து 2024.07.04 ஆம் திகதியன்று வரையும் பொது வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 01 இலிருந்து 12 வரையிலான அம்சங்களை பிரதான மருந்தாளரின் அலுவலகத்திலும் 13 ஆம் அம்சத்தை நிதிக்கிளையிலும் கேள்வி ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

| ■ வத்தளை | ■ கிராண்ட்பாஸ் |
| ■ தெமட்டகொ. | |

இவ் ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யும் அல்லது பிற்போடும் உரிமை இந்நிறுவனத்திற்கே உரியதாகும்.

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA)**

## கேள்வி கோரல்

**(IFB இல. RDA/EE/MO/2024/01)**

மொனராகலை நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் வீதி பராமரிப்பு விடயங்களுக்காக 01. தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ளல் 02. பெகோலோடர் வழங்குதல் மற்றும் 03. இமல்ஷன் மற்றும் தேர்மோபிளாஸ்டிக் தீந்தை பெற்றுக் கொள்வதற்கு மேற்படி IFB இலக்கத்தின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சார்பாக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

இதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 2024.06.15 முதல் 2024.07.15 வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் www.rda.gov.lk இணையதளத்திற்கு பிரவேசித்து அல்லது 055 - 2276047 தொ.பே. இலக்கத்தை அழைத்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**நிறைவேற்றுப் பொறியியலாளர் (மொனராகலை)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்து அல்லாத அமைச்சு**

# இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## பதவி வெற்றிடங்கள்

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்திலுள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கையின் தகைமையுள்ள பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி:** - உதவி அத்தியட்சகர்கள்

**தகைமைகள்** - (அ) வெளிவாரி அபேட்சகர்கள் ( கீழேயுள்ள 1,2 அல்லது 3)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில்/ பெருந்தோட்ட முகாமைத்துவம் அல்லது பதவிக்கேற்ற வேறேதாவது பட்டப் படிப்பு அல்லது பதவிக்கேற்ற வேறேதாவது கற்கைநெறி பட்டப்படிப்பு.
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிலையத்தினால்/ தேசிய பெருந்தோட்ட மேலாண்மை நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 6 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதலொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

   அத்துடன்

   கூட்டுத்தாபனமொன்றில், சபையில், பிராந்திய பெருந்தோட்ட நிறுவனம் அல்லது புகழ்பெற்ற நியதிச்சட்ட நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட பட்டத்தகைமை பின் பட்டம்.
3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிலையத்தினால்/ தேசிய பெருந்தோட்ட மேலாண்மை நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 6 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதலொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

   அத்துடன்

   கூட்டுத்தாபனமொன்றில், சபையில், பிராந்திய பெருந்தோட்ட நிறுவனம் அல்லது புகழ்பெற்ற நியதிச்சட்ட நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட பட்டத்தகைமை பின் பட்டம்.

**மேலதிக அனுகூலங்கள்:** உள்ளக மற்றும் வெளியக மருத்துவ காப்புறுதி திட்ட வசதிகள்.

உங்கள் சம்பளத்தின் ஆகக்குறைந்தது 10% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அல்லது இலங்கை தோட்டதுரைமார் சேமலாப சங்கத்திற்கு பங்களிப்பு செய்தல் அவ்வாறான சேமலாப நிதியத்திற்கு இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பானது ஆகக்கூடியது 12% அத்துடன் உங்கள் சம்பளத்தின் 3% ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்தல்.

மேற்பார்வைக்கான மோட்டார் சைக்கிளொன்று அத்துடன் எரிபொருள் ஒதுக்கீடொன்றும் வழங்கப்படும்

ஒரு வெளிப்புற மற்றும் ஒரு உட்புறத்துடன் கூடிய ஒரு அலங்கரிக்கப்பட்ட பங்களா தொழிலாளர்கள் கொடுப்பனவு வழங்கப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:** 02/2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் ஜேஎம் 1-1-2016 [42,600-10 x 755 – 18 x 1,135 – 70,580 ரூபா] என்றொரு சம்பள அளவுத் திட்டமானது பொருத்தமாகும்.

**வயது:** 22 வயதிற்கு குறைவாகவில்லாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை** நியமன அதிகாரியால் நியமிக்கப்பட்ட குழுமமொன்றினால் நடாத்தப்பட்டு கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பின்வரும் புள்ளிகள் வழங்கப்படும்.

**கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப்பரீட்சைக்கானது.**

- உரித்தான மேலதிக அனுபவம் - 30 புள்ளிகள்
- உரித்தான மேலதிக தகைமைகள் - 30 புள்ளிகள்
- ஏனைய சாதனைகள் - 15 புள்ளிகள்
- நேர்முகப்பரீட்சையில் காட்சிப்படுத்தப்பட்ட செயற்திறன் - 25 புள்ளிகள்

100 புள்ளிகள்

**ஏனையவை** இந்த வகைக்கான அனைத்து ஆட்சேர்ப்புகளும் இந்த ஆட்சேர்ப்பு திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணக்கமான அமைந்தொழுகப்படும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கை பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

பதவியின் கடமைகளை திறம்பட செய்வதற்கான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கு ஆயத்தமாகவுமிருத்தல் வேண்டும்.

மிகச்சிறந்த குணாதிசயங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள்:** விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அனைத்து விபரங்கள் மற்றும் பிறப்பு சான்றிதழ், கல்விச் சான்றிதழ் மற்றும் அனுபவங்கள் ஆகியவற்றின் பிரதிகளை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இறுதி திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்க/கூட்டுத்தாபன/சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்களின் திணைக்கள தலைமையூடாக அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்கான மூடும் திகதி:** கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை 2024 ஜூலை 1 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வந்தடைதல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்,**
**இல.: 257**
**ஸ்ரீ தம்ம மாவத்தை**
**கொழும்பு-10.**

**2024.06.11**

Daily News Classifieds, the Housewives’ companion

## பாதுகாப்பு அமைச்சு

### 2024/2025ம் ஆண்டிற்காக கழிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பொருட்கள் கொள்வனவாளர்களைப் பதிவு செய்தல்

2024.09.01 முதல் 2025.12.31 வரையான ஒரு வருடத்துடன் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களில் கழிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பொருட்கள் ஏலவிற்பனை/ கேள்வி மூலம் விற்பனை செய்வதற்காக கொள்வனவாளர்களைப் பதிவு செய்வதற்காக பாதுகாப்பு அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்காக விண்ணப்பிப்பதற்கு இலங்கைக்குள் பதிவு செய்த நபர்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் தகைமை பெறும்.

இதற்காக விண்ணப்பங்கள் கோரல் 2024.06.18 முதல் 2024.07.02 வரை நடைபெறும். விண்ணப்பதாரிகளால் 2024.07.02ம் திகதிக்கு முன்பு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். 2024.07.02ம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவிற்கு தேவையான விண்ணப்பங்கள் (சிங்கள, ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில்) பாதுகாப்பு அமைச்சின் இணையதளமான www.defence.lk இடமிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகளால் ரூ, 2000.00 மீளளிக்கப்படாத பதிவு செய்தற் கட்டணத்தைச் செலுத்த வேண்டியதுடன், அக் கட்டணத்தை, "செயலாளர், பாதுகாப்பு அமைச்சு" பெயரில் இலங்கை வங்கி கணக்கு இல 7040119 இற்கு வைப்புச் செய்து, குறித்த வங்கிப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்டதாக உறுதி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கிப் பற்றுச்சீட்டுடன் 2024.07.02ம் திகதிக்கு முன்பு, கணக்காளர், (வருமானம் மற்றும் சொத்து முகாமைத்துவம்), பாதுகாப்பு அமைச்சு தலைமையக கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கழிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பொருட்களின் கொள்வனவாளர்களின் பதிவு பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை பாதுகாப்புச் செயலாளருக்கு உரியது.

**செயலாளர்,**
**பாதுகாப்பு அமைச்சு**

---

## கேள்வி அழைப்பு

### போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

### மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

**உணவகம் கேள்வி - 2024/2025**

இத்திணைக்களத்தின் நாராஹேன்பிட்ட அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள உணவகங்களை நடத்துவதற்காக தகைமையுள்ள நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. உணவகத்தை நடத்திச் செல்வதற்குத் தேவையான கட்டிட வசதிகள் மேசை, கதிரை, நீர் போன்றன திணைக்களத்தினால் வழங்கப்படும். உணவகத்தை நடத்திச் செல்லல் பற்றிய 03 வருட அனுபவத்துடன் தற்போது பிரபல உணவகங்களை நடத்திச் செல்கின்ற நிறுவனங்களுக்கு இதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

தமது நிறுவனத்தின் பெயரில் கேள்வி விண்ணப்பத்தை வழங்குமாறு மேற்கொள்ளப்படும் எழுத்து மூல வேண்டுதலுடன் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் நாராஹேன்பிட்டவில் அமைந்துள்ள தலைமையக அலுவலகத்தில் 2024.06.14 முதல் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் ரூ. 2000/- மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் பெயரில் தலைமையகத்தின் (நாராஹேன்பிட்ட) காசாளரிடம் காசாகச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கணக்காளர் (பெறுகை) இடம் சமர்ப்பித்து கேள்வி விண்ணப்பமொன்றைப் பெற்றுக் கொள்ளலாம். சகல கேள்வி விண்ணப்பத்துடனும் மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூ. 35,000/- பெறுமதியான, 2024இல் செல்லுபடியாகும் கேள்விப் பிணையொன்றை அல்லது அதற்குச் சமமான தொகையை காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 2024.07.05 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், நாராஹேன்பிட்ட என்ற முகவரிக்கு அனுப்புவதன் பேரில் அல்லது பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு சமர்ப்பிக்கலாம்.

2024.07.05 பி.ப. 2.00 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அதன் பிறகு கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'நாராஹேன்பிட்ட வளாகத்தில் உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனுக்கள்' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு: 011-2674846 தொ. பே. இலக்கத்தை அழையுங்கள்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்,**
**இல. 341, எல்விட்டிகல மாவத்த,**
**கொழும்பு -05.**

---

# சிறு விளம்பரம்



**மோட்டார் வாகனங்கள்**

**106 கார்கள் விற்பனைக்கு**

CAU-0414 MICRO PANDA LC 1.0, 2017, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 039395

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

LB-5137 மிட்சுபிஷி டம்ப் டிரக் 2001, லொறி கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711210 810 . 039398

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

ABN-6353 BAJAJ 2016, YT-9059 BAJAJ 2011 THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711210 810 . 039385

**வேலைவாய்ப்பு**

**303 உயர்தொழில்துறையாளரின் ஆலோசனை பொதுவான சேவைகள்**

வோட்டர் லீக் ? ★ உங்கள் வீட்டுச் சுவர்களில், ★ கொங்கிறீட் ஸ்லெப்களில், ★ குளியலறைகள், ★ மீன் தொட்டிகள், ★ நிலக்கீழ் நீர்த் தாங்கிகளில், ★ நீச்சல் குளங்களில். அப் பிரச்சினை தீர்ந்தது. W.M. இன்ஜினியர் எமக்குக் கூறுங்கள். (நாடளாவிய ரீதியிலான சேவை) 0705269071, 0754126103. 039354

---

## அறிவிப்பு



இந்த புகைப்படத்தில் உள்ள பி கே ஜி எச் குணரத்ன, எமது நிறுவனத்தின் ஏஜென்சி சேனலில் விற்பனை முகாமையாளராக கடமையாற்றியவர் இல. 85/14, பங்களாவத்த வீதி, ஹுனுப்பிட்டியால, வத்தளை, பொது மக்களுடன் எங்கள் நிறுவனத்தின் சார்பாக எந்தவொரு நிதி பரிவர்த்தனைகளிலும் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கிறோம்.
ஐடி எண். 821741599

**கூட்டுறவு காப்பீட்டு நிறுவனம் பி.எல்.சி**
எண். 74/5, கிராண்ட்பாஸ் சாலை, கொழும்பு 14

---

## தெவிநுவர பிரதேச சபை

### தெவிநுவர ஸ்ரீ விஷ்ணு ஆலயத்தின் எசல கொண்டாட்டம் – 2024 எசல களியாட்டச் சந்தையில் தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் தரை இடப்பரப்புகளை விற்பனை செய்வதற்காக விலைக்கோரல்

தெவிநுவர உத்பலவண்ட ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் எசல பெரஹர கொண்டாட்டத்திற்கு இணைவாக நடாத்தப்படும் எசல களியாட்டச் சந்தையில் விற்பனைக் கூடங்கள் மற்றும் தரை இடப்பரப்புகளை விற்பனை செய்வதற்காக கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. இந்த தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் தரை இடப்பரப்புகளின் விற்பனை நடவடிக்கைகள் களியாட்டம் நடைபெறும் நாட்களான 2024-07-21ஆம் திகதி முதல் 2024-07-27ஆம் திகதி வரையில் அமுலில் இருக்கும்.

02. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தெவிநுவர பிரதேச சபையின் வழங்கல் பிரிவிலிருந்து 2024-06-15ஆம் திகதி முதல் 2023-06-27ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கேள்வி ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத 300.00 (முன்னூறு) ரூபா கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். அதேபோல் தெவிநுவர மக்கள் வங்கிக் கிளையில் பேணப்படும் 243100120000001 எனும் செயலாளர், தெவிநுவர பிரதேச சபை எனும் கணக்கிலக்கத்திற்கு குறித்த தொகையை வைப்புச் செய்த பற்றுச்சீட்டின் தெளிவான புகைப்படப் பிரதியொன்றை வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பி, கேள்விப் படிவத் தொகுதியொன்றை வட்ஸ்அப் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

03. 2024ஆம் வருடத்திற்காக விலைகளைச் சமர்ப்பிக்கவேண்டிய தற்காலிக விற்பனைக் கூடம் மற்றும் தரை இடப்பரப்பு தொடர்பான திட்டம் தெவிநுவர பிரதேச சபை அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதுடன் அதன் பிரகாரம் உங்களால் தற்காலிக விற்பனைக் கூடம் மற்றும் தரை இடப்பரப்புகளுக்கு விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். தற்காலிக விற்பனைக் கூடம் மற்றும் தரை இடப்பரப்புகள் தொடர்பான திட்டம், ஆகக்குறைந்த கேள்வித் தொகை தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய கேள்வி ஆவணத் தொகுதியொன்றை 071-1190755 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக Whatsapp ஊடாக அனுப்பி அல்லது devinuwara.ps@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்தியொன்றை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்வி ஆவணங்களுக்காக வைப்புச் செய்ய வேண்டிய விலைகள் பின்வருமாறாகும்.

| | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்புக் கட்டணம் |
|---|---|---|
| தற்காலிக விற்பனை கூடம் | ரூபா 300.00 | ஆகக் குறைந்த கேள்வித் தொகையின் 10% |
| தரை இடப்பரப்பு | ரூபா 300.00 | ஆகக் குறைந்த கேள்வித் தொகையின் 10%. 1-3 மற்றும் 1-4 தரை இடப்பரப்பு மற்றும் விளையாட்டரங்கிற்கு ஆகக் குறைந்த கேள்வித் தொகையின் 20% |

05. சமர்ப்பிக்கப்படும் கேள்விப் படிவங்களுடன் மீளளிக்கப்படும் பாதுகாப்புப் பிணை வைப்புக் கட்டணத்தை தெவிநுவர பிரதேச சபை சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி குறித்த பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கலாம். அதேபோல் தெவிநுவர மக்கள் வங்கிக் கிளையில் 243100120000001 எனும் செயலாளர், தெவிநுவர பிரதேச சபை கணக்கிலக்கத்திற்கு குறித்த தொகையை வைப்புச் செய்த பற்றுச்சீட்டை இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.
(இது தொடர்பான மேலதிக விபரங்களை 071-1190755 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறியலாம்.)

06. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை 2024-06-28ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''செயலாளர், பிரதேச சபை, தெவிநுவர'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து தெவிநுவர பிரதேச சபை செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள ''2024ஆம் வருடத்தில் தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் தரை இடப்பரப்புகளை விற்பனை செய்தல்'' எனப் பெயரிடப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பிக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன், கேள்விகள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்ததன் பின் 2024-06-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

07. கேள்வியை கையளித்தல் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை தெவிநுவர பிரதேச சபையின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**செயலாளர்,**
**தெவிநுவர பிரதேச சபை.**
**தொலைபேசி இல. 041-2222571**

**2024-06-14ஆம் திகதி,**
**தெவிநுவர பிரதேச சபை அலுவலகத்தில்**

---

## பெறுகை அறிவித்தல்

### இரத்தினபுரி மாநகர சபை

### பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை ஏலத்தில் விற்றல்

இரத்தினபுரி மாநகர சபையினால் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான திறந்த கேள்வி மூலம் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் ஆரம்பிக்கப்படும் திகதி - 2024.06.14

கேள்வி விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுதல் முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் - 2024.07.04 பி.ப. 3.00

கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவுறுத்தப்பட்டு பொறியிடப்படும் திகதி மற்றும் நேரம் - 2024.07.05 மு.ப. 10.30

கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் - 2024.07.05 மு.ப. 11.00

01. ஏலவிற்பனையிடுவதற்காக தேர்ந்தெடுக்கப்படும் வாகனம்

| தொடர் இல. | வாகன இலக்கம் | வாகன வகை | உற்பத்தி ஆண்டு | குறைந்த பட்ச கேள்வி | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்பப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி பிணை வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 01 | LK - 9825 | டிப்பர் - JAC - HFC3041k - DUMP TRUCK | 2013 | ரூ. 950,000.00 | ரூ. 5000.00 + VAT | ரூ. 50,000.00 |
| 02 | BAF - 9776 | மோட்டார் சைக்கிள் BAJAJ - PLATINA | 2013 | ரூ. 130,000.00 | ரூ. 1500.00 + VAT | ரூ. 10,000.00 |

2024.06.14 முதல் 2024.07.04 வரையான கால எல்லையில், வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இரத்தினபுரி மாநகர சபையிலிருந்து குறித்த கட்டணத்தை செலுத்தி கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

வாகன ஏலவிற்பனையில் விற்பனையாகும் தொகை மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட அரச வரித்தொகைகள் (VAT) செலுத்துதல் வேண்டும்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் வேறு விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவகத்திற்கு வருகை தந்து அல்லது கீழ்க்காணும் தொ.பே.இலக்கம் ஊடாக வாகனங்களை விடய அதிகாரியிடமிருந்து விசாரித்தறியலாம்.

தொ.பே.இல. 045 - 2222275 / 045 - 2224336 மேற்படி சகல வாகனங்களையும் இரத்தினபுரி வெளிச்சுற்று வட்ட வீதியில் அமைந்துள்ள இரத்தினபுரி மாநகர சபை வாகன களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மாநகர ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரியின் முழுமையான அனுமதியுடன் வாகனங்களைப் பார்வையிட வாய்ப்பளிக்கப்படும்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**இரத்தினபுரி**

---

## காணியினை கையகப்படுத்தல் சட்டம் (460 ஆவது அத்தியாயம்) 7 ஆவது பிரிவின் கீழ் அறிவித்தல்

**பி.செ தொடர்பு இலக்கம் : DSM/YT/LAND/5/35**
**காணி அமைச்சரின் தொடர்பு இலக்கம் : 4-3/9/2016/A/346**

இவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விபரம் தொடர்பான காணியானது, ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் விரிவாக்கல் உத்தியோகத்தருக்கான உத்தியோகபூர்வ விடுதிக்காக அரசாங்கம் பெற்றுக் கொள்வதற்கு கருதுகிறது. இது தொடர்பாக மேலதிக விபரங்களுக்காக இலக்கம் 2381/51 மற்றும் 2024.04.26ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்தமானப் பத்திரிகையினை பார்வையிடவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய மாகாணம் |
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலகப்பிரிவு | : யடவத்த |
| கிராமத்தின் பெயர் | : தீவில்ல |
| காணியின் பெயர் | : டங்கன்வத்தை |
| காணி அளவை வரைப்பட இலக்கம் | : 310401 |

**பிரதேச செயலாளர்**
**யடவத்த பிரதேச செயலகம்**

**2024.06.06**
**யடவத்த பிரதேச செயலகம்.**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



Magazine Issued with Sunday Observer

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want



- Auto Focus
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

**விலைக்கோரல் இல. 017/T/2024**

## ஒரு வருட காலத்திற்கு தேயிலை வழங்குதல்

**(SUPPLY OF TEA LEAVES FOR A PERIOD OF ONE YEAR)**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமானநிலையம் மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் பாவனைக்காக ஒரு வருட காலத்திற்கு மாதாந்த தேவைப்பாட்டின் அடிப்படையில் தேயிலையை வழங்குவதற்காக விமானநிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத கட்டணமாக ஐந்தாயிரம் ரூபா (5,000.00) தொகையை விமானநிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவு அலுவலகத்திலிருந்து 2024-06-17ஆம் திகதி முதல் 2024-07-08ஆம் திகதி வரையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைக்கோரல் ஆவணத் தொகுதியைக் கொள்வனவு செய்யலாம். தேவையானால் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தில் அமைந்துள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலும் விலைமனுதாரரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.

விலைக்கோரல்கள் 2024 ஜூலை 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 இற்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன்பின் குறித்த விலைமனுக்கள் வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவில் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல் பிணை முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வங்கியொன்றில் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரின் பெயரில் கோரும் போது செலுத்தப்படும் மூன்று இலட்சத்து அறுபத்தாறு ரூபாவுக்கான (366,000.00 ரூபா) பெறுமதியான வங்கிப் பிணை முறியொன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஜூன் 28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வ/ப விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவின் கூட்ட அறையில் இடம்பெறும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவின் 011-2264103 / 011-2264105 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

---

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

**1998ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்**
**பிரிவு 55**

குருநாகல் மாவட்டத்தின் குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் பிரிவு 10 மடமேகம, மல்கடுவாவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 420389, பிரிவு இல. 03, தாள் இல. 07, துண்டு இல. 313 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 65, நிஸ்ஸங்க மாவத்தை, வெஹெர, குருநாகல் எனும் விலாசத்தைக் கொண்ட கறுப்பு முல்லாகே தயானந்த பத்திரன என்பவர் 06.12.2021 ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் பழைய பிரதேச சபைக் கட்டிடம், மல்லவபிட்டிய, போயகனே, குருநாகல் என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 29.06.2024 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

---

*Marriage Proposals*
in the
**Sunday Observer**
Is the best way to fulfil
your Future Dreams

---

## வியாபாரஸ்தலம் குத்தகைக்கு விடல்

### வரையறுக்கப்பட்ட களனி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான வர்த்தகக் கட்டிடங்கள் 04 குத்தகைக்கு வழங்கப்படும்

- பியகம பாதைக்கு அருகில் 1008 சதுரஅடி காணி
- திப்பிட்டிகொட பாதைக்கு அருகில் 513 சதுரஅடி கடை அறை
- பியகம பாதைக்கு முகப்பாக 819 சதுரஅடி கடை அறை
- களனி விஹாரைக்கு அருகில் கல்பொரெல்ல பாதையில் 1892 சதுரஅடி கடை அறை

2024.06.24 பிற்பகல் 1.00 வரை கேள்வி விண்ணப்பங்கள் களனி சங்க தலைமையகத்தில் விநியோகிக்கப்படும்.

2024.06.24 பிற்பகல் 3.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றல் முடிவுறும்.

**கௌரவ தலைவர்,**
**வ/ப களனி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**சிங்ஹாரமுல்ல, களனி**
**தொ.பே.இலக்கம் : 011 - 2911356 / 0112987069**

---

# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு - பொது வைத்தியசாலை - கேகாலை

01. கேகாலை பொது வைத்தியசாலையின் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலை விடயங்களுக்காக தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
02. 2024-06-14ஆம் திகதி முதல் 2024-07-04ஆம் திகதி வரை பொதுவான அலுவலக வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். (தகைமையை உறுதிசெய்யும் கடிதமொன்றை கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்)
03. இரு பிரதிகளில் பிழையின்றி பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களுடன் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பிணை முறிகள் சகிதம் 2024-07-05ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பொது வைத்தியசாலை, கேகாலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லாவிடில் இந்நிறுவனத்தின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும். உங்கள் கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வேலை விடயத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
04. இந்தப் பெறுகை தொடர்பில் கேகாலை பொது வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
05. மேற்படி வேலை விடயங்களுக்கான கேள்விப் படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் கலந்துரையாடலொன்று 2024-06-26ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பணிப்பாளரின் அலுவலகத்தில் இடம்பெறும்.
06. சமர்ப்பிக்கப்படும் விலைகள் (வருடாந்தம்) 05 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்டால் மட்டும், பொது ஒப்பந்தங்கள் பதிவாளர் நிறுவனத்தின் (PCA 3) சமர்ப்பித்தல் வேண்டும்.

| விடய இல. | வேலை விபரம் | தகைமை அனுபவம் | மீளளிக்கப் படும் பிணை முறித் தொகை (ரூபா சதம்) | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் (ரூபா சதம்) |
|---|---|---|---|---|
| 01 | 2024/2025ஆம் வருடங்களில் சாக்கடை முறைமைகளை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்து நடாத்திச்செல்லல் | CIDA-C-8, CIDA-EM 4 செல்லுபடியாகும் பதிவு, சேவைகளை நிறைவேற்றுதல் தொடர்பில் 03 வருட அனுபவம் இருத்தல். (இதில் 01 வருடகால அரச வைத்தியசாலையின் சேவை மேலதிகத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்) | 50,000.00 | 3,000.00 |
| 02 | 2024/2025ஆம் வருடங்களில் மின்சார முறைமைகளை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்து நடாத்திச்செல்லல் | CIDA (EM 4) செல்லுபடியாகும் பதிவு, சேவைகளை நிறைவேற்றுதல் தொடர்பில் 03 வருட அனுபவம் இருத்தல். (இதில் 01 வருடம் அரச வைத்தியசாலையின் சேவை மேலதிகத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்) | 50,000.00 | 3,000.00 |
| 03 | 300 KVA மின்பிறப்பாக்கி இயந்திரத்தை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் - 2024/2025ஆம் வருடங்கள் | CIDA (EM 4) Generators செல்லுபடியாகும் பதிவு, சேவைகளை நிறைவேற்றுதல் தொடர்பில் 02 வருட அனுபவம் இருத்தல். (வைத்தியசாலை, அரச நிறுவனம்) | 10,000.00 | 1,500.00 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பொது வைத்தியசாலை, கேகாலை.**
**தொலைபேசி இலக்கம்: 035-2222261-62 (நீடிப்பு 330)**

---

**விலைமனுக்களுக்கான அழைத்தல்**

# இலங்கைபோக்குவரத்து சபை (SLTB)

## பிரேக்குகள், ஸ்பிரிங்ஸ் மற்றும் பட்டரிகள் தொடர்பான உதிரிகளுக்கான வழங்கலுக்கான கேள்விக் கோரல்கள்

**பெறுகை இல.: SLTB/TS/GEN/02-1/2024**

1. **2024.07.04** ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிவரையும் 30 நாட்கள் கடன் அடிப்படையில் பிரேக்குகள், ஸ்பிரிங்ஸ் மற்றும் பட்டரிகளின் உதிரிகளின் வழங்கலுக்காக தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இபோச பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார். விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கள் நடைமுறை மூலம் நடத்தப்படும். **2024.06.14** ஆம் திகதியிலிருந்து **2024.07.03** ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 35000 ரூபாவை செலுத்தியபின்னர், கொழும்பு-05, கிருள வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகைக் குழுவின் செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| விளக்கம் | விலைமனு பாதுகாப்பு பெறுமதி (ரூ) | |
|---|---|---|
| 30 நாட்கள் கடன் அடிப்படையில் பிரேக்குகள், ஸ்பிரிங்ஸ் மற்றும் பட்டரிகளின் உதிரிகளின் வழங்கல் | பிரேக்குகளுக்கு மாத்திரமான உதிரிகள் | - 1,500,000.00 |
| | ஸ்பிரிங்ஸ்களுக்கு மாத்திரமான உதிரிகள் | - 300,000.00 |
| | பட்டரிகளுக்கு மாத்திரமான உதிரிகள் | - 200,000.00 |
| | அனைத்து இனங்களுக்கும் | - 2,000,000.00 |

2. பிரேக்குகள், ஸ்பிரிங்ஸ் மற்றும் பட்டரிகள் ஆகியவை தொடர்பான உதிரிகளின் வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் ஏகநியமிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகள்/ தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பிரேக்குகள், ஸ்பிரிங்ஸ் மற்றும் பட்டரிகள் ஆகியவை தொடர்பான உதிரிகளின் பதிவு பெற்ற உள்ளூர் உற்பத்தியாளர்களும் கேள்விக்கோரல்களை சமர்ப்பிப்பதற்கு உரித்தாவர்.
3. உரித்தான வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியான இறக்குமதிக்கான உற்பத்தியாளர்களின் அதிகாரம் மற்றும் சாட்சியமில்லாத முன்வைப்புக்கள் அல்லது உள்ளூர் உற்பத்தியாளர்கள் உற்பத்தியாளரொருவராக பதிவில்லாமல் இருப்பின் முன்வைக்கப்பட்ட வணிக உரிமைப் பெயரானது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. அனைத்து விடயங்களிலும் முன்வைக்கப்பட்ட வணிக உரிமைப் பெயர்கள் இலங்கை போக்குவரத்து சபைக்கு இதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படாவிடின, மார்ப்பிக்கப்பட்ட பிரேக்குகள், ஸ்பிரிங்ஸ் மற்றும் பட்டரிகளுக்கான உதிரிகளின் ஆவணச் சான்றுகள் இபோச தொழில்நுட்பத்திற்கான பிரதி பொது முகாமையாளரினால் பரீட்சிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படலாம். இல்லாவிடின், அவ்வாறான முன்வைப்புக்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.
4. **2024.06.24** ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைப் பிரிவில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
5. ஒவ்வொரு கேள்விதாரரும் மற்றும் முகவரொருவராக அல்லது பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக கேள்விதாரருக்கு அல்லது எந்தவொரு கேள்விதாரரின் சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்விக் கோரல்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக தன்னை 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்தல் வேண்டும். பதிவின் மூலப்பிரதியானது கேள்விக்கோரலுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் கேள்விதாரர்களின் கேள்விக்கோரல்கள் நிராகரிக்கப்படும்.
6. கேள்விக் கோரல்கள் **2024.10.05** ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் கோரப்பட்ட விலைகள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து ஒரு (01) வருட காலத்திற்கு நிலையாகவிருத்தல் வேண்டும்.
7. மேலே குறிப்பிட்டுள்ளவாறு உரித்தான விலைமனு பாதுகாப்பு பெறுமதி/ பெறுமதிகளுடன் இணைக்கப்பட்ட ஒன்று அல்லது அனைத்து உதிரிகளுக்கும் கேள்விதாரர்கள் சமர்ப்பிக்கலாமென்பதுடன் **2024.11.05** ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தலும் வேண்டுமென்பதுடன் இபோச இனால் விண்ணப்பிக்கும் எழுத்து மூலமான முதலாவது கோரிக்கையின் பேரில் மாற்ற இயலாததும் நிபந்தனையற்ற தன்மையில் மாற்றக் கூடியதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவினால் பதிவு பெற்றதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனு பாதுகாப்பு பெறுமதியில்லாமல் இணைக்கப்படும் எந்தவொரு கேள்விக்கோரலும் நிராகரிக்கப்படும்.
8. கேள்விக்கோரல் ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் கேள்விதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது இலட்சினை பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. கேள்விக் கோரல்கள் **2024.07.04** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் ஒன்றில் கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை இபோச பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்தில் பேணப்படும் விலைமனுப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் கிடைக்கும் தன்மையில் அனுப்பப்படல் வேண்டும். முத்திரைக்குறி பொறிக்கப்பட்டு விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Bid for the Supply of Spares related to Brakes, Springs & Batteries"** என குறிப்பிடப்படல் வேண்டும்.
10. விலைமனுக்கோரல்கள் அவைகளை **2024.07.04** ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு மூடிய பின்னர், கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை, பெறுகைப் பிரிவில் உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கோரல்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**இலங்கை போக்குவரத்து சபை,**
**இல.: 200, கிருள வீதி,**
**கொழும்பு-05.**
**விசாரணைகள்: செயலாளர், இபோச பெறுகைக் குழு,**
**தொலைபேசி: 011 7706110, 0771056110.**
**தொலைபேசி/ தொலைநகல்: 011 2588457.**

---

**மத்திய மாகாண சபை**

# கேள்விக்கான அழைப்பு

## சூரியசக்தி வீதி விளக்குகள் வழங்கி, நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்துதல், பராமரித்தலுக்காக திருத்தன்மை - மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கல் மற்றும் ஒப்பீட்டு அடிப்படை வழங்கல்

**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு.**

1. மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரால் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள கீழ்க்காணும் இடங்களுக்கு சூரிய சக்தியில் செயற்படும் வீதி விளக்குகளை போக்குவரத்து செய்து வழங்கி, நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்துதல், பராமரித்தலுக்காக அபகீர்த்தியானோர் பட்டியலிடப்படாத தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து திறந்த போட்டி முறையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பிரதேசம் | அளவு |
|---|---|---|
| 01 | கண்டி மாவட்டம் | 30 |
| 02 | மாத்தளை மாவட்டம் | 30 |
| 03 | நுவரெலியா மாவட்டம் | 30 |

2. கேள்வியுடன் சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை கண்டி, யட்டிநுவர வீதி, இல.109, முதலாம் மாடியில் அமைந்துள்ள மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) இடம் பெற்றுக் கொள்ளலாம். தொ.பே. இலக்கம் : 081 - 2234769 மற்றும் Email : ministryofroadscp@gmail.com
3. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணமான ரூ.1500.00 ஐ கண்டி, யட்டிநுவர வீதி, இல. 109 இல் அமைந்துள்ள மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியாளரிடம் காசாகச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை வியாபார கடிதத் தலைப்பில் எழுதப்பட்ட வேண்டுதல் கடிதத்துடன் அமைச்சின் கணக்கு இலக்கத்திற்கு சமர்ப்பித்து 2024.06.18 முதல் 2024.07.05 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை குறித்த கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
4. முறையாகப் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.07.08 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கண்டி, யட்டிநுவர வீதி, இல.109, முதலாம் மாடியில் அமைந்துள்ள மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் பெறுகைக் குழுவிற்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அவ் அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
5. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு, பெயர் குறிப்பிட்டு பொறியிட்டு ஒரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் வழங்கல் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
6. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
7. சமர்ப்பிக்கப்படும் கேள்வி 2024.10.07 வரை செல்லுபடியாவதுடன், இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் இருந்து மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு செயலாளரின் பெயரில் விநியோகிக்கப்பட்ட ரூ.361,400.00 பெறுமதியுடைய கேள்விப் பிணையொன்றை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் கேள்விப் பிணையானது 2024.11.07 வரை செல்லுபடியாதல் வேண்டும். இல்லையெனில், மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியாளரிடம் இலங்கையில் செல்லுபடியாகும் தொகையில் ரூபா. 180,700.00 ஐச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் உறுதி செய்த பிரதியொன்றை கேள்விப் பிணையாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. இக் கேள்வி பற்றிய கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.07.01 மு.ப. 11.30 இற்கு மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி எரிசக்தி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சில் நடைபெறும்.
9. சகல கேள்விகளும் தொழில்நுட்ப மதிப்பீட்டு கமிட்டியின் மதிப்பீட்டிற்கு உட்படுவதுடன் பெறுகைக் குழுவின், தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி எரிசக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு,**
**மத்திய மாகாணம்,**
**இல.109, யட்டிநுவர வீதி,**
**கண்டி**

டி20 உலகக் கிண்ணம்:

# நியூசிலாந்தை வீழ்த்திய மேற்கிந்திய தீவுகள் அடுத்த சுற்றில்: இந்தியாவும் முன்னேறியது

நியூசிலாந்துக்கு எதிரான டி20 உலகக் கிண்ண சி குழுவுக்கான போட்டியில் 13 ஓட்டங்களால் வெற்றியீட்டிய போட்டியை இணைந்து நடத்தும் நாடான மேற்கிந்திய தீவுகள் அணி சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறியது. இந்தப் போட்டியில் தோல்வியை சந்தித்த நியூசிலாந்து அணி ஆரம்ப சுற்றுடன் வெளியேறும் நெருக்கடியை சந்தித்துள்ளது.

டிரினிடாட்டில் இலங்கை நேரப்படி நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தபோதும் மத்திய வரிசையில் வந்த ஷெர்பான் ரதர்போட் அதிரடியாக 39 பந்துகளில் 2 பௌண்டரிகள் மற்றும் 6 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களை விளாசினார்.

இதன்மூலம் அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 149 ஓட்டங்களை குவித்தது.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த நியூசிலாந்து ஓட்ட வேகத்தை தக்கவைக்க போராடியது. வேகப் பந்து வீச்சாளர் அல்சாரி ஜோசப் 4 விக்கெட்டுகளையும் இடது கை சுழற்பந்து வீச்சாளர் குடகேஷ் மோட்டி 3 விக்கெட்டுகளையும் வீழ்த்திய நிலையில் நியூசிலாந்து



அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களையே பெற்றது.

கிளன் பிலிப் 40 ஓட்டங்களை பெற்றதோடு மிட்சல் சான்ட்னர் கடைசி நேரத்தில் 12 பந்துகளில் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களை பெற்றபோதும் அது இலக்கை எட்டுவதற்கு உதவவில்லை.

இதன்மூலம் மேற்கிந்திய தீவுகள் அணி சி குழுவில் இருந்து முதல் அணியாக அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மறுபுறம் அடுத்தடுத்து தோல்விகளை சந்தித்திருக்கும் நியூசிலாந்து அணி தொடரில் ஆரம்ப சுற்றுடனேயே வெளியேறும் வாய்ப்பை அதிகரித்துக் கொண்டுள்ளது. நியூசிலாந்து அடுத்துள்ள தனது கடைசி இரு குழுநிலைப் போட்டிகளான உகண்டா மற்றும் பப்புவா நியூகினி அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களை கட்டாயம் வெல்ல வேண்டும். எனினும் அந்த அணி சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறுவதற்கு மற்ற போட்டிகளின் முடிவுகள் தமக்கு சாதகமாக அமைய வேண்டும்.

எனினும் இந்தக் குழுவில் ஆப்கான் அணி தனது முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்டி வாய்ப்பை அதிகரித்துக் கொண்டுள்ளது. இந்நிலையில் அந்த அணி இன்று பப்புவா நியூகினியை எதிர்கொள்ளவுள்ளது. அந்தப் போட்டியில் வெற்றியீட்டினால் நியூசிலாந்து அணி முதல் சுற்றுடன் வெளியேறுவது உறுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினம் (12) ஏ குழுவுக்காக நடந்த போட்டியில் இந்திய அணி அமெரிக்காவை கடுமையாக போராடி தோற்கடித்ததன் மூலம் அந்தக் குழுவில் முதல் அணியாக சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேற்றம் கண்டது.

நியூயோர்க்கில் நடந்த இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட அமெரிக்க அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 110 ஓட்டங்களையே பெற்றது. பதிலெடுத்தாடிய இந்திய அணி 15 ஓவர்களுக்கே முதல் இரு விக்கெட்டுகளையும் பறிகொடுத்ததோடு வெற்றி இலக்கை எட்டுவதற்கு 19 ஆவது ஓவர் வரை ஆட வேண்டி இருந்தது.

## முதல்முறை ஸ்டொப் கிளொக் தண்டனை பெற்றது அமெரிக்கா

டி20 சர்வதேச கிரிக்கெட்டை வேகப்படுத்துவதற்காக புதிதாகக் கொண்டுவரப்பட்ட ஸ்டொப் கிளொக் விதியின் கீழ் அமெரிக்க அணி முதல் அணியாக தண்டனை பெற்றுள்ளது.

இந்தியாவுக்கு எதிராக நேற்று முன்தினம் (12) நடைபெற்ற போட்டியில் அமெரிக்க அணி ஒரு இன்னிங்ஸில் மூன்று முறை ஒரு நிமிடத்திற்குள் அடுத்த ஓவரை ஆரம்பிக்கத் தவறியதை அடுத்து இந்திய அணிக்கு தண்டனை ஓட்டங்களால் ஐந்து ஓட்டங்கள் வழங்கப்பட்டன.

16 ஆவது ஓவர் ஆரம்பிக்கும் போதுதுடுப்பெடுத்தாடகடினமான ஆடுகளத்தில் இந்திய அணி 35 ஓட்டங்களை பெற வேண்டி இருந்தபோதே அமெரிக்க அணிக்கு இந்தத் தண்டனை வழக்கப்பட்டது. இதனால் இந்திய அணியின் வெற்றி இலக்கு 30 பந்துகளில் 30 ஓட்டங்களாக குறைக்கப்பட்டது.





இதில் இந்திய அணி ஏழு விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

ஆடவர் ஒருநாள் மற்றும் டி20 சர்வதேச போட்டிகளை வேகப்படுத்தும் வகையில் கடந்த ஜூன் 1ஆம் திகதி தொடக்கம் இந்த விதி அறிமுகப்படுத்தப்பட்டது.

அணி ஒன்று பந்து வீச தாமதிப்பது தொடர்பில் இரு முறை எச்சரிக்கப்பட்ட பின்னரே இந்தத் தண்டனை வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அல்–ஹமாஸ் றோயல் சம்பியன்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஹொரவப்பொத்தான நிக்கவெள விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரில் அல்–ஹமாஸ் றோயல் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.



நிக்கவெள விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அல்–ஹமாஸ் றோயல் அணி அங்குநொச்சி றைஸ்ஸ்டார் அணியை வீழ்த்தியது.

இந்தத் தொடரில் 30 அணிகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. தொடரின் ஆட்ட நாயகனாகவும் இறுதிப் போட்டியில் சிறந்த வீரராகவும் அல்–ஹமாஸ் றோயல் அணியைச் சேர்ந்த எப். மொஹமட் பைனாஸ் தெரிவானார்.



## சர்வதேச செய்திகள்

# போர் நிறுத்த முயற்சிக்கு மத்தியில் காசாவின் ரபாவில் மோதல் உக்கிரம்

### வான், தரை மற்றும் கடல் வழியாக கடும் தாக்குதல்

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான சாத்தியம் இன்னும் இருப்பதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்திருக்கும் நிலையில் காசாவின் ரபா நகரில் இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் நேற்று (13) தாக்குதல் நடத்தியதாக குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டிருப்பதோடு அங்கு ஹமாஸ் போராளிகள் மற்றும் இஸ்ரேலிய படைகள் இடையே வீதிகளில் உக்கிர மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

எகிப்து எல்லையை ஒட்டிய ரபாவில் கடந்த மே ஆரம்பம் தொடக்கம் இஸ்ரேலியத் தரைப் படை தாக்குதல்களை நடத்தி வருகிறது. இடம்பெயர்ந்த மக்கள் நிரம்பி வழியும் இந்த நகர் மீதான படை நடவடிக்கைக்கு சர்வதேச அளவில் எச்சரிக்கை விடுத்த போதும் அங்கு உக்கிர தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

ரபாவின் மேற்குப் பக்கமாக இஸ்ரேல் வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக தாக்கி வருகிறது.

போர் விமானங்கள், அபச்சேக்கள் (ஹெலி) மற்றும் ஆளில்லா விமானங்கள், தவிர இஸ்ரேலிய பீரங்கிகள் மற்றும் இராணுவ போர்க் கப்பல்கள் அனைத்தும் ரபாவின் மேற்கு பக்கமாக கடுமையாக தாக்கதல்களை நடத்தி வருகின்றன' என்று அங்குள்ள குடியிருப்பாளர் ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதி வீதிகளில் தமது போராளிகள் இஸ்ரேலிய படையுடன் சண்டையிட்டு வருவதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவான இஸதீன் அல் கஸ்ஸாம் படை தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு தொடக்கம் மேற்கு ரபாவை நோக்கி இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேறி வருவதால் அங்குள்ள மக்கள் வெளியேறி வருகின்றனர்.

அங்கு குடியிருப்புப் பகுதிகள் வெடி வைத்து தகர்க்கப்படுவதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

மத்திய காசாவின் நுஸைரத் அகதி முகாமில் உள்ள அல் லுஹ் குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து அங்கிருந்து மூன்று சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் பெரும்பாலும் சிறுவர்கள் உட்பட பலர் காயமடைந்திருப்பதாகவும் அங்குள்ள வபா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் 30 பேர் கொல்லப்பட்டு மேலும் 105 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த 250 நாட்டுகளுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 37,232 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 85,037 பேர் காயமடைந்துள்ளனர்.

**பிளிங்கன் நம்பிக்கை**

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டு, பாதுகாப்புச் சபையால் உறுதி செய்யப்பட்ட மூன்று கட்ட போர் நிறுத்தத்திற்கு ஹமாஸ் அமைப்பு கடந்த செவ்வாயன்று பதில் அளித்திருந்தது.

இதில் ஹமாஸ் செய்திருக்கும் திருத்தங்கள் 'சிலது சாத்தியமானது என்றும் மேலும் சிலது சாத்தியமில்லை' என்றும் பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்த முயற்சியாக மீண்டும் ஒருமுறை பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்ட பிளிங்கன், தனது கடைசி நிறுத்தமாக நேற்று முன்தினம் கட்டார் பயணித்தார்.

'உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கு பிராந்திய தலைவர்களுடன் அமெரிக்கா தொடர்ந்து நெருக்கமாக பணியாற்றும்' என்று அங்கு அவர் குறிப்பிட்டிருந்தார்.

காசாவில் நிரந்தர போர் நிறுத்தம் மற்றும் அங்கிருந்து இஸ்ரேலிய துருப்புகள் முழுமையாக வாபஸ் பெறுவதையே ஹமாஸ் கோருகிறது

முன்மொழியப்பட்டிருக்கும் போர் நிறுத்தத் திட்டத்தில் ஆறு வார போர் நிறுத்தம், பணயக்கைதிகள் கைதிகள் பரிமாற்றம் மற்றும் காசாவில் மீள்கட்டுப்பமானம் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.



என்று அதன் மூத்த அதிகாரியான ஒசாமா ஹம்தான் குறிப்பிட்டிருந்தார். எனினும் இதனை இஸ்ரேல் நிராகரித்து வருகிறது.

இந்த முன்மொழிவை இஸ்ரேல் ஏற்றிருப்பதாக அமெரிக்கா குறிப்பிட்டபோதும் இஸ்ரேல் தரப்பில் இருந்து இன்னும் உறுதியான பதில் கிடைக்கவில்லை. இந்தத் திட்டத்திற்கு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசின் தீவிர வலதுசாரிகள் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஹமாஸ் அமைப்பு நேற்று வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில், இஸ்ரேல் மீது நேரடி அழுத்தம் கொடுக்கும்படி பிளிங்கனை கேட்டுள்ளது.

'புதிய (போர் நிறுத்த) முன்மொழிவு தொடர்பில் இஸ்ரேலின் இணக்கம் பற்றி அவர் தொடர்ந்து கூறுகின்றபோதும், இது பற்றி இஸ்ரேலின் எந்த ஒரு அதிகாரியும் பேசியதாக நாம் கேட்கவில்லை' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் போரை முடிப்பது தொடர்பில் இரு தரப்பினதும் நிலைப்பாட்டிலேயே முட்டுக்கட்டை நீடிப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

போர் நிறுத்தத் திட்டம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக போரை முடிவுக்குக் கொண்டுவருவதை இஸ்ரேல் எழுத்து மூலம் உறுதி செய்ய வேண்டும் என்று ஹமாஸ் வலியுறுத்துகிறது.

ஆனால் ஹமாஸின் ஆட்சி மற்றும் இராணுவ பலம் முடிவுக்கு வரும் வரை போர் முடியாது என்று நெதன்யாகு குறிப்பிட்டு வருகிறார்.

# உலகில் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டோர் எண்ணிக்கை 120 மில்லியனாக சாதனை உச்சம்

உலகில் சாதனை எண்ணிக்கையாக 120 மில்லியன் மக்கள் போரினால் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டிருப்பதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கை 12 ஆண்டுகளாக தொடர்ந்து அதிகரித்து வந்திருப்பதாகவும் அது தெரிவித்துள்ளது.

உலகில் இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை தற்போது ஜப்பான் மக்கள் தொகைக்கு சமமாக அதிகரித்திருப்பதாக ஐ.நா நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

சூடான் மற்றும் காசா போர்கள் இந்த எண்ணிக்கை அதிகரிக்கக் காரணமாகி இருப்பதாக அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் தலைவர் பிலிப்போ கிராண்டி குறிப்பிட்டார்.

'இவர்கள் அகதிகள், தஞ்சம் தேடுவோர், உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்த மக்கள், சச்சரவாலும் துன்புறுத்தலாலும், இன்னும் வேறு அதிகரிக்கும் சிக்கலுடைய வன்முறை வகைகளால் வெளியேறக் கட்டாயப்படுத்தப்பட்டவர்கள்' என்று அவர் குறிப்பிட்டார்.

மக்களை இடம்பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளிய சூழல்களில் மிக மோசமானது சூடான் போர் என்று கிராண்டி சுட்டிக்காட்டினார்.

இதில் ஒன்பது மில்லியனுக்கும் மேற்பட்டோர் உள்நாட்டளவில் இடம்பெயர்ந்தனர் என்றும் மேலும் இரண்டு மில்லியன் பேர் அண்டை நாடுகளுக்குத் தப்பியோடினர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கில் மக்கள் வந்து சேர்கிறார்கள்' என்று சாட் நாட்டில் தஞ்சம் புகுவோரை அவர் குறிப்பிட்டுக் கூறினார்.



காசாவில் நிலவிவரும் நெருக்கடியால் கிட்டத்தட்ட 1.7 மில்லியன் பேர் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் அவர்களில் பலர் பலமுறை இடம்பெயரும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

எனினும் உலகில் அதிக இடம்பெயர்ந்தோர் பிரச்சினையை எதிர்கொள்ளும் நாடாக சிரியா உள்ளது. அங்கு 2011 ஆம் ஆண்டு உள்நாட்டு போர் வெடித்த நிலையில் தொடர்ந்தும் சுமார் 14 மில்லியன் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்ட நிலையில் வாழ்கின்றனர்.

'சர்வதேச புவிசார் அரசியலில் மாற்றம் இல்லாவிட்டால், துரதிர்ஷ்டவசமாக, இந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதை காண முடியுமாக இருக்கும்' என்று கிராண்டி குறிப்பிட்டார்.

## போலி செய்திகளை கட்டுப்படுத்த சட்டம்

சமூக ஊடகத்தில் தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட போலி செய்திகள் பரப்படுவதைக் கையாளவென பாகிஸ்தானின் இரண்டாவது பெரிய மாகாணமான பஞ்சாப்பில் அவதூறு சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள பாகிஸ்தான் பத்திரிகையாளர் சமூகம் இது ஜனநாயகமல்ல என்றும் குறிப்பிட்டுள்ளது. பஞ்சாப் சட்ட பேரவையில் இந்த சட்டத்திற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகப் பாகிஸ்தான் பத்திரிகை கழகத்தின் தலைவர் அர்ஷத் அன்சாரி குறிப்பிட்டுள்ளார். பாகிஸ்தான் மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் இந்தச் சட்டம் குறித்து கவலை தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 14ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.